20 FEB
பொது சன

 பக். 06  பக். 07  பக். 22  பக். 23


கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 | கதிர்: 086 | வள்ளுவர் ஆண்டு: 2045 | மாசி 08, வியாழன் 20.02.2014


# முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட ஏழு பேருக்கும் விடுதலை

## *ஜெயலலிதா நேற்று விடுத்தார் அதிரடி அறிவிப்பு*

சென்னை,பெப் 20
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, றொபேர்ட் பயஸ் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய முடிவு செய்துள்ளதாகத் தமிழக அரசு நேற்று அறிவித்தது.
முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
இந்த நிலையில், முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய அரசுக்குப் பரிந்துரைப்பதாகத் தமிழக அரசு நேற்று அறிவித்துள்ளது.
இது தொடர்பாகத் தமிழக சட்டசபையில், விதி எண் 110 இன் கீழ் முதல்வர் ஜெயலலிதா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
அப்போது, முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், றொபேர்ட் பயஸ் ஆகிய 7 பேரையும் விடுதலை செய்ய மத்திய அரசுக்

21 ஆம் பக்கம் பார்க்க



முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறும் பேரறிவாளனின் தாய்

## வடக்கு முதல்வர் வரவேற்பு

யாழ்ப்பாணம்,பெப்.20
ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரையும் விடுதலை செய்வதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளதை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வரவேற்றுள்ளார்.
'விடுதலை கிடைத்தவர்களுக்கும் சந்தோஷம். எங்களுக்கும் சந்தோஷம். இது நல்லதொரு

21 ஆம் பக்கம் பார்க்க

# இடைக்காலத் தீர்வு தமிழருக்கு அவசியம்

## *பிரிட்டன் குழுவிடம் எடுத்துரைத்தது கூட்டமைப்பு*

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 20
தமிழ் மக்கள் நிரந்தர அரசியல் தீர்வை எட்டும்வரை இடைக்காலத் தீர்வு ஒன்று முன்வைக்கப்படவேண்டும் என்று யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த பிரிட்டன் குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது.
பிரிட்டனின் தெற்காசியாவுக்கான வெளிவிவகார மற்றும் பொதுநலவாயப் பணியகத்தின் பணிப்பாளர் ஜுலி ஸ்கொட் மற்றும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கின் ஆகியோர் அடங்கிய குழுவினரைச் சந்தித்துப் பேசிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கருத்தை முன்வைத்துள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறீதரன் மற்றும்

21 ஆம் பக்கம் பார்க்க

## மகனைக் காண மிகுந்த ஆவல்

### *உடுப்பிட்டியில் வசித்து வரும் சாந்தனின் தாயார் உருக்கம்*



*சாந்தனின் தாய்*

யாழ்ப்பாணம்,பெப்.20
தனது பிள்ளையை விடுவித்த தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும், 23 வருடங்களாக தனது பிள்ளையைப் பார்க்கவில்லை என்றும், பிள்ளையைப் பார்க்க ஆவலாக இருப்பதாகவும் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தனின் தாயாரான தில்லையம்பலம் மகேஸ்வரி தெரிவித்தார்.
இந்தியாவின் முன்னாள் பிர

21 ஆம் பக்கம் பார்க்க

## சி-4 வெடிமருந்து வைத்திருந்த மூவர் கைது

யாழ்ப்பாணம், பெப் 20
வன்னியிலிருந்து கொண்டு வரப்பட்ட 72 கிலோகிராம் சி-4 வகை வெடிமருந்து பாசை

21 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் ஜனநாயகம் பெயரளவில் மட்டுமே

## *ஐ.நா. அதிகாரியிடம் வடக்கு முதலமைச்சர்*

யாழ்ப்பாணம்,பெப்.20
ஜனநாயகம் பெயரளவில் மாத்திரமே இங்கு தோன்றியிருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.
அத்துடன் வடக்கு மாகாண சபையைக் கொண்டு நடத்துவதற்கு அரசே முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும் அவர்

21 ஆம் பக்கம் பார்க்க



*வடக்கு முதல்வருடன் ஐ.நா. அதிகாரி மரியமஷிரா*

## தீர்மானம்தானே? சட்டம் இல்லையே!

### *முதலமைச்சர் கேட்ட கேள்வி இது*

*யாழ்ப்பாணம்,பெப்.20*
*மும்மொழிக் கொள்கையை வடக்கு மாகாண அமைச்சர்கள் நடைமுறைப்படுத்தாமல் விட்டது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, "அது தீர்மானம்தானே? சட்டம் இல்லையே!" என்று நேற்றுப் பதிலளித்தார் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.*
*வடக்கு மாகாண அமைச்சர்களது வாகனங்களின் முன்புறத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்புப் பலகைகளில் ஆங்கிலத்திலும் சிங்களத்தி*

21 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்கள் சந்தோஷப்படும் வகையில் சர்வதேச விசாரணை முன்னெடுப்புக்கள்

## *வடக்கு முதல்வரிடம் கூறினார் பிரிட்டன் தூதுவர்*

யாழ்ப்பாணம்,பெப்.20
தமிழ் மக்கள் சந்தோஷமடையக் கூடிய வகையில், பிரிட்டன் பிரதமர் இலங்கையில் வைத்துத் தெரிவித்ததற்கு அமைவாகச் சர்வதேச விசாரணைக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கின் உறுதிபடத் தெரிவித்ததாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
பிரிட்டனின் தெற்காசியாவுக்கான வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகத்தின் பணிப்பாளர் ஜுலி ஸ்கொட் மற்றும் இலங்கைக்கான பிரிட்

21 ஆம் பக்கம் பார்க்க



# 70

மன்னார், பெப் 20
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.தோண்டத் தோண்ட அங்கு தொடர்ச்சியாக எலும்புக்கூடுகள் தென்பட்டு வருகின்றன.

21 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



டுத்திட்டம் தொட

## பாரபட்சமற்ற முறையிலேயே இந்திய வீட்டுத் திட்டம் நடைமுறை

*முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு யாழ்.அரச அதிபர் விளக்கம்*

யாழ்ப்பாணம், பெப்ரவரி, 20
இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் யாழ். முஸ்லிம்கள் குழப்பமடையத் தேவையில்லை. நம்பிக்கையோடு இருங்கள் என யாழ் அரச அதிபர். சு.அருமைநாயகம் தெரிவித்தார்

யாழ். - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் யாழ்.அரச அதிபர் சு. அருமை நாயகம் ஆகியோருக்கிடையே சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, கடந்த 2013ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம்திகதி யாழ். - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம்களின் 317 இந்திய வீட்டுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களைக் கையளித்தனர்.

எனினும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது இந்திய வீட்டுத் திட்டத்தின் 3ஆம் கட்ட வேலைகள் ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் இதன் போதாவது முஸ்லிம் குடும்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளனவா என முஸ்லிம் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த யாழ் அரச அதிபர். சு.அருமையாநாயகம்.

யாழ். மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திட்டத்தின் பயனாளிகள் தமிழர்கள் முஸ்லிம்கள் என பாகுபடுத்தப்படாமலே தெரிவு செய்யப்படுகின்றனர்.

முஸ்லிம்கள் செறிவாக வாழும் ஜே/84 கிராம அலுவலர் பிரிவில் 49 விண்ணப்பங்களும், ஜே/87 கிராம அலுவலர் பிரிவில்185 விண்ணப்பங்களும், ஜே/88 கிராம அலுவலர் பிரிவில் 53 விண்ணப்பங்களும் மேலதிக பரிசீலனைக்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றன - என்றார். (ஐ-10)

# முகமாலை முகாமிலிருந்தும் வெளியேறினர் ராணுவத்தினர்

*கிளாலி வீதி மக்கள் பாவனைக்கு*

பளை, பெப்.20
முகமாலையில் நிலைகொண்டிருந்த படையினர் முகாமினை மூடி இத்தாவிலில் உள்ள படையணி முகாமுடன் இணைந்துள்ளனர்.

படையினர் விலகிச் சென்றதையடுத்து 14 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த முகமாலை - கிளாலி வீதியினை மக்கள் பயன்படுத்தவும், படையினரின் மண் அணைக்கு உட்பட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தவும் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து முகமாலை - கிளாலி வீதியின் இரு பக்கமும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

**கிளாலி வீதியினை மக்கள் பயன்படுத்தவும், படையினரின் மண் அணைக்கு உட்பட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தவும் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.**

இந்த வீதியில் வசித்த சிலர் தமது காணிகளை வீதியில் நின்று பார்த்து வருவதாகவும், வளவுகளுக்குள் காணப்பட்ட குடியிருப்புகள் மற்றும் பயன்தரு மரங்கள் இல்லாமல் வெட்ட வெளியாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சிகரெட் பெட்டிகளில் படங்களுக்கு அனுமதி

புகைத்தல் சௌக்கியத்திற்கு கேடுவிளைவிக்கும் என்பதனை எடுத்துக்காட்டும் படங்களை சிகரெட் பெட்டிகளில் பிரசுரிப்பதற்கான கோரிக்கை நாடாளுமன்றில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபாநாயகரின் கையொப்பத்திற்கு பின்னர் அது சட்டமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை படங்களை சிகரெட் பெட்டிகளில் பிரசுரிப்பதற்கு சுகாதார அமைச்சு முயற்சித்த போதிலும் அந்த முயற்சிக்கு எதிராக புகைப்பொருள் நிறுவனம் நீதிமன்றத்திற்கு சென்ற நிலையில் அந்த முயற்சி கைகூடவில்லை. தற்போது நாடாளுமன்று ஊடாக அது நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஐ)

# வயோதிபப் பெண்ணை ஏமாற்றி நகைகள் நேற்றுக் கொள்ளை

*யாழ்.போதனா வைத்தியசாலையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்ற வயோதிபப் பெண்ணை ஏமாற்றி நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அவரைக் கூட்டிச் சென்ற அவரது மகள் மயங்கி விழுந்துவிட்டார் என்று கூறி வயோதிபப் பெண்ணை அழைத்துச்சென்றே நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வயோதிபத் தாயை அவரது மகள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு மருத்துவரிடம் காண்பித்துவிட்டுத் தாயாரை ஓரிடத்தில் இருத்திவிட்டு மகள் மருந்து எடுக்கச் சென்றுவிட்டார். அந்த நேரம் பார்த்து அந்தத் தாயிடம் சென்ற ஒருவர் உங்கள் மகள் மயங்கி விழுந்து விட்டார் என்றுகூறி அழைத்துச் சென்றுள்ளார். பின்னர் அவரிடமிருந்த 2 பவுண் நிறையுடைய சங்கிலி, தோடுகள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார். அந்த நபர் ஓட்டோச் சாரதி என்று சந்தேகிப்பதாக அந்தத் தாயார் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. வைத்திய சாலைக்கு வரும்போது நகைகளை அணிந்து வர வேண்டாம் என்று நிர்வாகத்தினர் பல முறை கூறியுள்ள போதும் நோயாளர்கள் அதனைக் கவனத்தில் கொள்வதில்லை என்று நிர்வாகத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அவர்கள் வைத்திய சாலைக்கு வருபவர்களைக் கேட்டுள்ளனர். (த-4)

## இரண்டாவது தடவையாக பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து 2014ஆம் ஆண்டில், இரண்டாம் தடவையாக ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை விண்ணப்பிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று பூர்த்திசெய்து எதிர் வரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன் னர் அவற்றை மீண்டும் ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் கேட்டுள்ளார். (ஐ-10)

# ஆயருக்கு எதிராக மன்னாரில் போலியான துண்டுப் பிரசுரம்

*கண்டிக்கிறது மன்னார் மாவட்ட இந்து மகா சபை*

மன்னார், பெப். 20
மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகைக்கு எதிராக வெளியான துண்டுபிரசுரம் இந்து கிறிஸ்தவ மத உறவை குழப்பும் திட்டமிட்ட செயல். இதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக மன்னார் மாவட்ட இந்து மகா சபை தெரிவித்துள்ளது.

ஆயருக்கு எதிராக மன்னார், வவுனியா மாவட்டங்களில் 'மன்னார் மாவட்ட இந்து சங்கம்' என்ற பெயரில் வெளியான துண்டுப்பிரசுரம் தொடர்பாக நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட இந்து மகா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மாந்தை சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதியில் அமைக்கப்பட்டிருந்த நாவலர் திருவுருவமும் இடபக்கொடியும் தாங்கிய சிலை கடந்த 6ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

இந்த விரும்பத்தகாத நிகழ்வு தொடர்பாக திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபை, மன்னார் ஆயரைச் சந்தித்து கலந்துரையாடியது. சிலை உடைக்கப்பட்டமைக்கு ஆயர் தனது வருத்தத்தினை தெரிவித்ததுடன் அவ் இடத்திலேயே மீள சிலையை அமைப்பதற்கு தனது ஆதரவையும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது மன்னார் ஆயர் தொடர்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை சிலர் திட்டமிட்டு வெளியிட்டுள்ளனர்.

அவருடைய பெயருக்கு பங்கம் ஏற்படும் வகையில் திட்டமிடப்பட்டு சிலர் நடந்துகொண்டுள்ளனர். இது மத நல்லிணக்கத்தை குழப்பும் செயல். துண்டுப் பிரசுரத்துக்கும் மன்னார் மாவட்ட இந்து மகா சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-56)

# வல்வெட்டித்துறை பட்ஜெட் வழக்கு நேற்று ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20
வல்வெட்டித்துறை நகரசபையின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சட்டவிரோதமான முறையில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்து அதனை வலுவிழக்கச் செய்யுமாறு கோரியும், சபை அங்கத்தவர்களான எதிர்மனுதாரர்கள் வருமானங்கள், செலவீனங்களுடன் தொடர்புபடுவதனைத் தடைசெய்யுமாறு கோரியும் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போது பிரதிவாதி தரப்பினர்கள் சார்பாக சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தபோதும் ஒரு எதிரி சார்பாக சட்டத்தரணி எவரும் நேற்று முன்னிலையாகியிருக்கவில்லை.

**“பிரதிவாதி தரப்பினர்கள் சார்பாக சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தபோதும் ஒரு எதிரி சார்பாக சட்டத்தரணி எவரும் நேற்று முன்னிலையாகியிருக்கவில்லை.**

அதனால் அந்த வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சபையின் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்ட 5 உறுப்பினர்களால் கடந்த 24 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் வடக்கு மாகாண முதலமைச்சர், சட்டமா அதிபர், சபைத் தலைவர், சபை உறுப்பினர்கள் உட்பட 17 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-4)

# விபத்தினால் உயிரிழந்தவரின் உடலை கிளிநொச்சி கொண்டு செல்ல படாதபாடு

**வாகனம் வழங்குவதற்கு பிரதேச சபை பின்னடிப்பு**

யாழ்ப்பாணம், பெப் 20
கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த ஐந்து பிள்ளைகளின் தாயார் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். அவரது உடலைக் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லக் கரைச்சிப் பிரதேச சபையின் பொறுப்பிலுள்ள அதற்கென ஒதுக்கப்பட்ட வாகனத்தைக் கோரியபோதும் அதற்கு காப்புறுதிப் பத்திரம் இல்லை என்று மறுக்கப்பட்டுப் பின்னர் அது வழங்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த 14 ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி மகேஸ்வரி (வயது - 53) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

அவரது கணவன் வேலை செய்ய முடியாதளவுக்கு உடல் நிலை உள்ளது. அவரது மகன் போர் காரணமாக எந்த வேலையும்செய்ய முடியாதவர். அவரை விட நான்கு பிள்ளைகள் உள்ளனர். வறுமை காரணமாக அந்தத் தாயாரே கிளிநொச்சி ஆரம்பப் பாடசாலை ஒன்றில் சமையல் வேலை செய்து இவ்வளவு நாளும் தனது குடும்பத்தைக் கொண்டு நடத்தி வந்தார். இந்நிலையில் அவர் விபத்தினால் உயிரிழந்து விட்டார்.

அவரது இறப்பு விசாரணையைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தினார். விசாரணையின் பின்னர் சடலத்தைக் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்வதற்காக இறந்தவர்களின் உடல்களை ஏற்றி இறக்குவதற்கு எனப் புலம்பெயர் தமிழர்களால் கரைச்சிப் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட வாகனத்தை இறந்தவரின் உறவினர்கள் கோரினர். அதன்போது வாகனம் அனுப்புவதாகப் பதில் கூறப்பட்டது. அவர்களின் வேண்டுகோளின்படி கோரிக்கைக் கடிதமும் கொடுக்கப்பட்டது. சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் வாகனத்துக்கு காப்புறுதிப் பத்திரம் இல்லை என்று கூறப்பட்டதாக இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

உடலைக் கொண்டுசெல்லத் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்த 20 ஆயிரம் ரூபா கேட்கின்றனர் என்று திடீர் இறப்பு விசாரணை அதிகாரிக்கு உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவருக்கு அது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. அவரும் காப்புறுதிப் பத்திரம் இல்லையென்று முதலில் தெரிவித்துவிட்டுப் பின்னர் வாகனத்தை அனுப்புவதாகக் கூறினார். பிற்பகல் 3 மணியளவில் வாகனம் வந்தது. பின்னர் சடலம் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவரிடம் கேட்டபோது இந்த வருடத்துக்கான காப்புறுதிப் பத்திரமே எடுக்கப்படவில்லை. அதனால் சாரதி தயங்கினார். பின்னர் மற்றொரு சாரதி மூலம் வாகனம் அனுப்பப்பட்டது என்றார். (த-4)

# சட்டவிரோதமாக மரம் தறித்த நால்வர் கைது

யாழ்ப்பாணம்,பெப் 20
ஊர்காவற்றுறைப் பகுதியில் சட்டவிரோத மரம் தறிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜே/53 ஊர்காவற்றுறைப் பகுதியில் நடைபெற்ற சட்டவிரோத மரம் தறிப்பு மற்றும் விற்பனை தொடர்பில் புதன்கிழமை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரனி யோகநாயகத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அவர் தலைமையிலான குழுவினரால் நால்வர் இனங்காணப்பட்டனர்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு பொலிஸார் நால்வரையும் கைது செய்துள்ளனர்.

ஊர்காவற்றுறை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி வீரசிங்க தலைமையிலான குழுவினர் கைதான நால்வருடன் தறிக்கப்பட்ட மரங்கள் மற்றும் மரம் தறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் இன்று வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-10)


## நெடுந்தீவுக்கான சேவையில் நேற்று முதல் தனியார் படகுகள்

### குமுதினி பழுதடைந்ததால்

யாழ்ப்பாணம்,பெப்.20
நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரச படகு குமுதினி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிறபகலில் இருந்து பழுதடைந்ததைத் தொடர்ந்து அரச படகுச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

குமுதினி படகு பழு தடைந்துள்ளதால் சேவை யைத் தொடர முடியாத நிலை யில் தனியார் படகுகள் நேற்று முதல் நெடுந்தீவுக்குச் சேவையில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை குமுதினி இவ்வாறு அடிக்கடி பழுதடைவதும் நெடுந்தீவு படகுச் சேவைகள் பாதிக்கப்படுவதும் நெடுந்தீவு மக்களுடன் இணைந்த இயல்பு நிலையாகி விட்டது. இது தொடர்பில் அரசோ அதிகாரிகளோ கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அசிரத்தை கொண்டவர்களாவே உள்ளதாக நெடுந்தீவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-7)



பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் யாழ்.பயணத்தை நினைவுகூரும் வகையில் அவரிடமிருந்து ஒரு தொகுதி நூல்கள் யாழ்.பொது நூலகத்துக்கு அன்பளிப்பாக கையளிக்கப்பட்டன. நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் பிரிட்டன் தூதர் ஜோன் றன்கின் நூல்களை யாழ்.பொதுநூலக நூலகர் திருமதி இ.கருணாகரனிடம் கையளித்தார். அத்துடன் பொதுசன நூலகத்தை பயன்படுத்தும் வாசகர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்களை ஆர்வத்துடன் கேட்டறிந்து நூலகத்தின் பகுதிகளையும் பார்வையிட்டார். இந்த நிகழ்வில் பிரிட்டனின் தெற்காசியாவுக்கான வெளிவிவகார மற்றும் பொதுநலவாய திணைக்களத்தைச் சேர்ந்த ஜுலி, அரசியற் குழுக்களின் தலைவர் டனியன் பெய்ன்ரர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ-10-20)

## கடற்பாதையால் பயணிக்கவிருந்த மக்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,பெப் .20
குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்குச் செல்வதற்காக நேற்று புதன்கிழமை பி.ப.1.30 இற்குப் புறப்பட வேண்டிய கடற்பாதையில் பயணிக்கவிருந்த 14 பயணிகளை அதில் ஏறிச் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை என்று நயினாதீவுக்குச் செல் வதற்காக கடற்பாதையில் ஏறிய மக்களால் தெரிவிக்கப்பட்டது.

கடற்பாதையில் பொதுமக்கள் பயணிக்க முடியும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் ஏற்கனவே தெரிவித்துள்ள போதும் பாதையில் பயணிக்க பாதுகாப்பு அங்கிகள் இல்லை என்று கூறி பயணிகளை ஏற கடற்படையினர் அனுமதிக்கவில்லைஎன்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வாகனங்களை ஏற்றிச் செல்வோர் பாதுகாப்பு அங்கிகள் அணிவதில்லை என்றும் சாதாரண பயணிகளுக்கு கடற்பாதையில் செல்ல பாதுகாப்பு அங்கிகள் அவசியம் தானா என்றும் மக்கள் கேள்விஎழுப்புகின்றனர். (வ-7)

## பழுதடைந்த வீதி விளக்குகள் திருத்தும் பணிகள் ஆரம்பம்

### மாநகர எல்லை வீதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.20
யாழ்.மாநகர சபை எல் லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளில் பழுத டைந்த மின் விளக்குகளின் திருத்தப்பணிகள் மேற்கொள் ளப்பட்டுள் ளன.


ஏற்கனவே வீதியில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் பழுதடைந்து ஒளிராத நிலையில் இருந்தமையால் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக இந்தத் திருத் தப்பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

காதி அபூபக்கர் வீதி, முஸ்லிம் கல்லூரி வீதி, பொம்மைவெளி அராலி வீதி ஆகிய வீதிகளில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் பழுதடைந்தமையால் மீளவும் அவற்றை திருத்தி அமைத்துள்ளதுடன் புதிய மின்குமிழ்களும் பொருத் தப்பட்டுள்ளன.

8 ஆயிரம் ரூபா நிதியில் காதி அபூபக்கர் வீதிக்கு 5மின் விளக்குகளும், முஸ்லிம் கல்லூரி வீதிக்கு 2 மின்விளக்குகளும், பொம்மைவெளி அராலி வீதிக்கு 5 மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இதே வேளை ஒஸ்மானியாக் கல்லூரியின் ஜின்னா மைதானமும் விளையாட்டுக்கழ கங்களின் விளையாட்டு நிகழ்வுக்காக 14 ஆயிரம் ரூபா நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்களை யாழ்.மாநகரசபை உறுப்பினர் எம்.சரபுல் அனாம் மேற்கொண்டுள் ளார். (வ-14)



*வீதி விளக்கை திருத்தும் பணியில் ஒருவர்*

## தொழுநோய் குறித்த நடமாடும் சேவை இன்று

தொழுநோய் குறித்த நடமாடும் மருத்துவமுகாம் மாதகல் சகாய மாதா தேவாலயத்துக்கு அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பி.ப.2 மணி வரை நடைபெறும்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறும் இந்த மருத்துவ முகாமில் தொழுநோய் உட்பட சகல தோல் நோய்களால் பாதிக்கப்பட்டிருப்போருக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மாதகல் பகுதியில் குறித்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இந்த மருத்துவ முகாம் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-115)

# கிளி. - கொழும்பு ரயிலில் சௌகரியமற்ற பயணம்

### வடபகுதி அரச ஊழியர்கள் விசனம்

அச்சுவேலி, பெப்.20
கிளிநொச்சி - கொழும்பு ரயிலில் வடபகுதி பயணிகள் இயல்பு நிலையில் பயணம் செய்ய முடியாத நிலையே உள்ளது.

வடபகுதியைச் சேர்ந்த அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் ரயில் ஆணைச் சீட்டு வசதியைக் கூட உரிய சலுகைகளுடன் பயன்படுத்த முடி யாத நிலையில் உள்ளனர். அவர்கள் கால்கடுக்க நின்ற நிலையிலேயே ரயில் பயணத்தைத் தொடர வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த முப்பது வருடங்களுக்குப் பின்னர் வடபகுதிக்கான ரயில் சேவை சீர் செய்யப்பட்டு கிளிநொச்சி வரை நடைபெற்று வருகின்றது. கூடிய விரைவில் கொடிகாமம் வரை விஸ்தரிக்கப்படுவதோடு தமிழ் - சிங்கள புத்தாண்டோடு யாழ்ப்பாணம் வரையில் ரயில் சேவையை விஸ்தரிப்பதற்கு வசதியாக ரயில்பாதை நிர்மாண மற்றும் ரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி வரையில் நடைபெறும் ரயில் சேவையில் வடபகுதி பயணிகள் இயல்பு நிலையில் பயணம் செய்ய முடியாமல் பல்வேறு நெருக்கடிகள் சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணம் செய்கின்றனர். பெருமளவில் பாதுகாப்புத் தரப்பினரும் தென்னிலங்கையில் இருந்து வந்து திரும்பும் பயணிகளுமே ரயில் பயணத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய சௌகரியங்களை உரிய முறையில் பயன்படுத்துகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைய தலைமுறையினருக்கு ரயில் பயணம் தொடர்பான அனுபவம் முற்றாக இல்லாமல் இருப்பதோடு கிடைக்கின்ற முதல் அனுபவமும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இயல்பு நிலையில் இல்லாமலும் போய்விடுகின்றது.

அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வருடத்துக்கு மூன்று சோடி ரயில் ஆணைச்சீட்டை தமது குடும்பத்தினர் அனைவரையும் உள்ளடக்கிய நிலையில் பெறமுடியும். அதேபோன்று ஓய்வுநிலையில் உள்ளவர்கள் வருடத்துக்கு ஒரு சோடி ரயில் ஆணைச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும். அரச ஊழியர், ஆசிரியர்கள் தமது பதவி நிலை மற்றும் சம்பளத் தர நிலைக்கு ஏற்ப ரயில் ஆணைச் சீட்டைப் பயன் படுத்தி வகுப்பு II, வகுப்பு I பயணப் பெட்டி களில் "உறங்கலிருக்கை' "படுக்கை" வசதியை குளிரூட்டி வசதி நிலையில் குடும்பத்தோடு பயணம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த வசதியைப் பயன்படுத்தி பயணம் செய்யவோ, அந்த வகையான வசதிகளை முன் கூட்டி பதிவு செய்துகொள் ளவோ முடியாத நிலை காணப்படுகின்றது. அவற்றை பாதுகாப்புத்தரப்பினர் மற்றும் தென்னிலங்கை பயணிகள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதோடு வசதியான முறையில் ஒதுக்கீடும் செய்யப்பட்டு விடுகின்றது.

வட பகுதியைச் சேர்ந்த பயணிகள் இந்த வசதியை கோரும் போது "முடிவடைந்து விட்டது" என்ற பதில் முன் கூட்டியே தயார் நிலையில் உள்ளது போல் கூறப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் என்ற வகையில் வீசும் என எதிர் பார்த்திருந்த ரயில் பயணம் வடபகுதி தமிழர் தரப்புக்கு "வாடை" யாகி துன்பம் தருவதாக கூறப்படுகின்றது. கிளிநொச்சிக்குச் சென்று ரயில் மூலம் வசதியாக கொழும்புக்கு செல்லலாம். கொழும்பில் இருந்து வட பகுதிக்கு வசதி யாக திரும்பலாம் என்று நினைத் தவர்கள் "போதும் இந்த துன் புறுத்தல்" என்ற "கையறு" நிலை யில் ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்து வழமையான பஸ் ப்யணத்தையே தொடருவ தாக விசனம் தெரிவிக்கின்றனர். (வ-1)

## பஞ்சாங்கங்களில் குழப்பம்; மக்கள் மத்தியில் தடுமாற்றம்

### *பெரியார்கள் கூடி ஆராய்வு ; இறுதி முடிவு மார்ச் 2 இல்*

இலங்கையில் பயன்படுத்தப்படும் வாக்கியம் மற்றும் திருக்கணிதம் ஆகிய இரண்டு பஞ்சாங்கங்கள் மூலமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான இந்து சமய விரத தினங்களில் வேறுபாடுகள் நிலவுவதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு இந்துப் பொதுமக்கள் பலரும் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் திணைக்கள கேட்போர் கூடத்தில் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.க.நீலகண்டன், இந்து மாமன்றத்தின் சமய விவகாரக் குழுத் தலைவர் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம், வத்தளை உணுப்பிட்டி ஸ்ரீ முத்துக்குமரன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சி.சோதிரத்தினக் குருக்கள், கொழும்பு இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கு.வை.கா.வைத்தீஸ்வரன் குருக்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர் கள் எனப் பலர் பங்கு கொண் டனர்.

இந்தக் கூட்டத்தின்போது நடப்பாண்டின் பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, நவராத்திரி, குமாராலய தீபம், சங்கடஹரசதுர்த்தி, விநாயக ஷஷ்டி போன்ற இந்து விரத தினங்கள் இரண்டு பஞ்சாங்கங்களுக்கும் அமைவாக வெவ்வேறு தினங்களில் அமைவது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. இந்த விடயம் இந்து மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதன் தொடர் நிகழ்வாக சிவாச்சாரியார்கள், சோதிட விற்பன்னர்கள், ஆலய அறங்காவலர்கள், பஞ்சாங்க கணிதர்கள், இந்து மன்றங்களின் பிரதிநிதிகள், சமயப்பெரியார் கள் ஆகியோர் ஒன்றுகூடி இந்த விடயமாக தீர்க்கமாகக் கலந்தாலோசிப்பது எனத்தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு பஞ்சாங்கம் மற்றும் இந்து சமய விரதங்கள் தொடர்பான விடயங்களில் ஆர்வம் உள்ளோரும் பங்கு கொள்ளலாம் எனத் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சிறகு வலைப் பயன்பாடு; நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப் 20

யாழ். மாவட்டத்தில் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சிறகு வலைப் பயன்பாடு தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளதாகக் கிராமிய அபிவிருத்தி கடற்றொழிலாளர் சம் மேளனத்தின் உபதலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

கிராமிய அபிவிருத்தி கடற்றொழிலாளர் சம்மேளன அங்கத்தவர்களுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதன்படி நாளை நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள், கடற்றொழில் சங்கங்களின் தலைவர்கள், சமாசத்தினர் மற்றும் பாதுகாப்புக் குழுவினர் ஆகியோருக்கிடையில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

இதன்போது சிறகுவலைப் பயன்பாடு குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

போர்க்காலத்தில் குறித்த வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மரக் கம்புகளையே பாவித்தனர். ஆனால் தற்போது இரும்புக் கம்பிகளைப் பயன்படுத்தியே மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கரைவலை தொழிலைச் செய்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் கரையில் இருந்து 25 கிலோ மீற்றர் தூரத்துக்கு குறித்த வலையைப் பயன்படுத்துவதால் பவளப் பாறைகளில் வாழும் மீன்கள் பிடிக்கப்படுவதுடன் கரையோரத்தில் மீன் இனப் பெருக்கமும் அழிந்து போகின்றது.

அத்துடன் ஏனைய கடற் றொழிலாளர் கள் ஆழ்கட லில் தொழிலை மேற் கொள்வ திலும் சிரமங்களைச் சந்திக்கின்றனர்.

இதனால் எதிர்காலத்தில் மீன்களின் உற்பத்தியில் வீழ்ச்சியும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பெரியளவிலான சிறகு வலைப் பாவிப்பினை விடுத்து அளவான வலைகளைப் பாவிக்கு மாறும் கலந்துரையாடலில் வலியுறுத்தப் படவுள்ளது - என்றார்.

(த-14)

### திருத்தி வாசிக்கவும்

நேற்று (19.02.2014) என்னால் தகவல் வழங்கப்பட்டு உதயன் பத்திரிகையின் 20 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட திருமதி இரத்தினம்மா (இராசாத்தி) கனகரத்னம் அவர்களின் மரண அறிவித்தலில் அன்னாரின் மைத்துனரான திரு. சின்னத்துரை காலஞ்சென்றவர் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டதற்காக மிகவும் மனம் வருந்துகின்றேன். சின்னத்துரை அவர்கள் சுகபலமாக இருப்பதுடன் அவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

இரத்தினமகேசன்(நேசன்)

# மீனவர் விவகாரத்தில் மத்திய அரசுக்கு அக்கறை இல்லை

## அ.தி.மு.க, தி.மு.க. குற்றச்சாட்டு

புதுடில்லி, பெப்.20

பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும் தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக விவாதிக்க மத்திய அரசு மறுத்து வருவதாக அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மாநிலங்களவையில் நேற்று இது தொடர்பாக பேசிய அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் மைத்ரேயன், தமிழக மீனவர்கள் பிரச்சினையை தேசிய பிரச்சினையாக மத்திய அரசு பார்க்கவில்லை. அதனை தமிழக - இலங்கை மீனவர்களின் பிரச்சினையாகவே நினைத்து பொறுப்பை கைகழுவுகிறது. பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும் தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து விவாதிக்க மறுக்கிறது என்று குற்றம் சாட்டினார்.

இதேவேளை தி.மு.க. உறுப்பினர் கனிமொழி பேசுகையில், "தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக அவையில் விவாதிக்க மத்திய அரசு மறுப்பதாகவும், ஐ.நா.வில் இந்தியாவின் நிலை குறித்து மத்திய அரசு விவாதிக்க வேண்டும்" என்றும் கூறினார்.

முன்னதாக இலங்கைச் சிறைகளிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மக்களவையில் மத்திய அரசு விளக்கமளித்துள்ளது. இதுகுறித்து மக்களவையில் பேசிய மத்திய அமைச்சர் கமல்நாத், ஏற்கனவே இலங்கைப் படையால் கைதான தமிழக மீனவர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே நமது இலக்குஎன்றும்அவர்கூறினார்.

எதிர்கட்சித் தலைவரான சுஷ்மா ஸ்வராஜ் பேசுகையில், "இலங்கை-இந்தியா இடையிலான ஒப்பந்தம் காகிதத்தில் தான் உள்ளது. காகிதத்தில் உள்ள ஒப்பந்தத்தால் தமிழக மீனவருக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. காகிதத்தில் உள்ள ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவேண்டும்.

இலங்கை - தமிழக மீனவர்களிடையே மீண்டும் ஒரு முறை பேச்சுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். (வ)

# குடாநாட்டில் திருட்டுக்கள்

யாழ். நகரில், வண்ணார் பண்ணை ஐந்து சந்திக்குச் சமீபமாகவுள்ள கீரிப்பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கையில் ஒரு வீட்டின் ஜன்னல் கம்பிகளை வெட்டி உள்நுழைய முயன்ற திருடர்கள், வீட்டார் விழிப்படைந்து கைபேசி மூலம் தகவல் பரிமாறிக் கொண்டதை அறிந்து, தமது முயற்சியைக் கை விட்டு ஓடித் தப்பினர்.

நேற்று அதிகாலை 2.30 மணி யளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:- வீட்டின் ஜன்னல் கம்பிகளை வெட்டும் சத்தத்தினால் விழிப்படைந்த வீட்டுக்காரர் அயல் வீடுகளில் உள்ளவர்களுக்கு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தார். அதை அடுத்து அந்த இருவரும் தப்பியோடி விட்டனர்.

அதே சமயம் கடந்த வாரம் வெள்ளாந்தெருவில் ஒரு வீட்டில் உலரவிடப்பட்டிருந்த ஜீன்ஸ், ரீசேட் ஆகியவற்றுடன் விறாந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று சைக்கிள்களும் அதிகாலை நேரத்திலேயே திருட்டுப் போயுள்ளன. திருடப்பட்ட சைக்கிளில் ஒன்று பின்னர் அயல் வீட்டுக் கேற் அருகே கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

கொட்டடி சிவன் பண்ணைத் தெருவிலுள்ள கடை ஒன்றை உடைத்து அங்கிருந்த கிற்காட் மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இதற்கு முன்னரும் இதே கடை இரண்டு தடவைகள் உடைக்கப்பட்டு திருட்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இதேகாலப் பகுதியில் சீனிவாசகம் வீதியிலும் மாவடி வீதியிலும் உள்ள இரு வீடுகளின் வீட்டுக்காரர்கள் வெளியூர் சென்றிருந்த நிலையில் வீடுகள் உடைக்கப்பட்டு இருந்த பொருள்கள் கொட்டிச் சிந்தி ஆராயப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் ஒரு வீட்டில் ரி.வியும் மற்றைய வீட்டில் ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டிருந்தன. இரண்டு வீடுகளிலும் வைத்திருந்த கவரிங் நகைகளைப் பரிசோதித்த திருடர்கள் அவற்றை வீசி விட்டுச் சென்றிருந்தனர்.

இதேவேளை சிவப்பிரகாசம் வீதி, முருகமூர்த்தி கோயில் வீதிப் பகுதிகளிலும் திருட்டு மற்றும் திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. (ஒ)


# மரண அறிவித்தல்



## பொன். அப்பையா

(சமாதான நீதிவான்)

முருகையன் கோயிலடி புலோலி வடமேற்கைப் பிறப் பிடமாகவும் கூவில் புலோலி தென் மேற்கையும் மந்திகை (பொன் இல்லம்) யையும் வசிப்பிடமாக கொண்ட பொன் அப்பையா (ஓய்வு பெற்ற எழுது வினைஞர், பிரதேச செயலகம், கரவெட்டி, சமாதான நீதிவான்) நேற்று (19.02.2014) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் -வள்ளியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அம்பிகைபாகன், தங்கம்மா தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன். கனகசபை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் பொன். பூபாலன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலவீரசிங்கம் (டென்மார்க்), கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகாம்பிகை, பிரபாகரன், மீனாம்பிகை (ஆஸ்திரேலியா), கிருபாகரன் (லண்டன்), சுதாகரன் (பிரான்ஸ்), ஹரிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியேந்திரா (ஆஸ்திரேலியா), சுதா, பத்மாவதி (லண்டன்), மஞ்சுளா, சுபாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சத்யசாயினி, றூபினி, நிருபா, நிதர்ஷா, சரண்ஜா (ஆஸ்திரேலியா), பிரபாலினி, சரணுஜன், ஆதித்தன், கபாஸ்கர் (பிரான்ஸ்), அனுதினா, அனுஜன், அனுலாஸ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2014) வெள்ளிக்கிழமை பி'ப. 03.00 மணியளவில் அவரது அம்பிகை வாசம் கூவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அம்பிகை வாசம்'
கூவில், புலோலி.
021 2264280

தகவல்:
குடும்பத்தினர்.

# அளவைமானிகள் மாயமாகியதால் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தம்

## தாகம் தீர்க்க அலையும் கட்டுடை மக்கள்

வலி.தென்மேற்கு,பெப்.20

கட்டுடை மக்களுக்குத் தடங்கலின்றிக் குடி தண்ணீரை வழங்குவதற்காக தேசிய நீர் வழங்கல் அதிகார சபையால் இரு இடங்களிலுள்ள நீர்த் தொட்டிகளில் பொருத்தப்பட்டிருந்த குடிதண்ணீர் மானிகள் மாயமாகியதால் அங்குள்ள மக்களுக்கான குடி தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் குடி தண்ணீருக்காக மீண்டும் தூர இடங்களுக்கு அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கட்டுடைப் பகுதியிலுள்ள பெரும்பாலான கிணறுகள் உவர் நீராக இருப்பதால் அங்கு வசிக்கும் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் குடி தண்ணீருக்காக தூர இடங்களை நாடி வந்தனர்.

மக்களின் நிலைப்பாடு குறித்து தேசிய நீர்வழங்கல் அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து வலி. தெற்கு பொக்கணையிலுள்ள கிணற்றிலிருந்து சுன்னாகம் ஊடாக குழாய் மூலம் கந்தரோடை, சங்குவேலிவரை விநியோகிக்கப்பட்டு வந்த குடி தண்ணீர் கட்டுடைவரை நீடிக்கப்பட்டது.

மக்கள் இலகுவாகக் குடி தண்ணீரைப் பெறுவதற்கு வசதியாக குறிப்பிட்ட இடங்களில் நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு பாவிக்கும் தண்ணீர் அளவைக் குறிப்பிடும் குடி தண்ணீர் மானிகள் பொருத்தப்பட்டு நீர் விநியோகம் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் தேசிய நீர்வழங்கல் அதிகார சபையால் இரு இடங்களில் பொருத்தப்பட்டிருந்த பித்தளையாலான இரு குடி தண்ணீர் மானிகள் மாயமாய் மறைந்து விட்டன. இதனால் தேசிய நீர்வழங்கல் சபையால் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான மக்கள் மீண்டும் குடிதண்ணீருக்காக அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தேசிய நீர் வழங்கல் அதிகார சபையால் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீருக்குப் பாவனையாளரிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ-115)

### வர்த்தகர்கள் மூவருக்கு அபராதம்

தென்மராட்சி, பெப்.20

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த தென்மராட்சிப் பிரதேச வர்த்தகர்கள் மூவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது அகப்பட்ட 3 வர்த்தகர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

### கொடிகாமத்தில் கள்ள நோட்டு

தென்மராட்சி பெப். 20

கொடிகாமாம் பகுதியில் உள்ள வங்கியொன்றில் வைப்பிலிட்ட 5ஆயிரம் ரூபா கள்ள நோட்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பாகவங்கி முகாமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்துப் பொலிசார் சாவகச்சேரி நீதி மன்றத்தில் சம்பவம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

### நீதிமன்றுக்கு வருவோர் டெனிம் அணியக்கூடாது

தென்மராட்சி. பெப்.19

சாவகச்சேரி நீதிமன்றுக்கு வருவோர் டெனிம் நீளக் காற்சட்டை மற்றும் ரீ- சேர்ட் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் நீதிமன்ற வளாகத்தினுள் கையடக்கத் தொலைபேசி கொண்டு வருவது. திறந்த நீதிமன்றினுள் வழக்குக ளுக்கு உரியவர்கள் தவிர்ந்த ஏனையோர் உட்செல்வது. கைப்பை. வேறு எந்தப் பொருள் களையும் கொண்டு செல்வது ஆகியவையும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் உள்ள பொலிஸாரின் பாதுகாப்பு நிலையத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே. பொது மக்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் தவிர்ந்த ஏனையோர் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)



வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது. இவ்வாறு வருகை தருவோர் இங்கு சைக்கிள்களில் பயணம் செய்வதிலேயே அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த நிலையில் அவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு பலர் தமது தேவைகளை நிறைவேற்றும் நோக்கிலும் ஊர் சுற்றி பார்ப்பதிலும் அதீதமாக ஈடுபட்டு வருகின்றனர். (வ-21)

# இளைஞர்களின் குழப்பத்தால் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

வலி. வடக்கு. பெப். 19

சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அங்கு சமுகமளித்திருந்த பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலையம் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு. ஒற்றுமையின்மை காரணமாகக் கடந்த நான்கு வருட காலமாக பொதுக் கூட்டங்கள் குறித்து விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் எவரும் கூட்டங்களுக்குச்சமுகமளிப்பதில்லை.

இந்த நிலையில் இளைஞர் சிலர் இணைந்து எடுத்துக் கொண்ட விடா முயற்சியால் சனசமூகநிலையம் மூடப்படாமல் நான்கு வருடங்களாகத் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்படி சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலைய மண்டபத்தில் மாலை 4.30 மணியளவில் ஆரம்பமானது.

நிலையத் தலைவர் க.அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வலி.தென்மேற்குப் பிரதேச சபை பதில் தவிசாளர், சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த பொதுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காதவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மண்டபத்திலிருந்த இளைஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகளும் ஒற்றுமையின்மையும் ஏற்பட்டமையால் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அதையடுத்து சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை கூட்டத்தை ஒத்தி வைத்துள்ளார். (வ-115)

# பிரதேச சபையின் நிதி விரயமாவதாக அதிருப்தி

வலி.தென்மேற்கு. பெப்.20

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வீதிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்களுக்கு பிரதேச சபையால் மாதாந்தம் 30 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கட்டணமாக மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டு வந்த போதிலும் 50 வீதத்துக்கு அதிகமான மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை.

இதனால் இரவு நேரங்களில் பயணம் செய்வதற்கு அஞ்சும் மக்கள் பிரதேச சபையின் நிதி விரயமாவது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பொது மக்களின் நலன் கருதி வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகள் உட்பட அநேகமான வீதிகளுக்குப் பிரதேச சபையால் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவை ஒளிர்வதற்கான கட்டணத்தைப் பிரதேச சபை மின்சார சபைக்கு வழங்கி வருகின்றது.

**வீதிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்களுக்கு பிரதேச சபையால் மாதாந்தம் நிதி வழங்கப்பட்டும் 50 வீதத்துக்கு அதிகமானவை ஒளிர்வதில்லை.**

இந்த நிலையில் 50 வீதத்துக்கும் அதிகமான மின்குமிழ்கள் ஒளிராததால் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன. இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள பொது மக்கள், பிரதேச சபையின் பணம் விரயமாவது தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளதுடன் ஒளிராத மின்குமிழ்களை ஒளிரவைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தவிசாளரைக் கோரியுள்ளனர். (வ-115)

### அனுமதியின்றி சாராயம் விற்றவர் செலுத்தினார் 25 ஆயிரம்

தென்மராட்சி, பெப்.20

அனுமதிப் பத்திரமின்றிச் சாராயம் விற்பனை செய்த நாவற்குழி வாசிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த மட்டுவில் தெற்கு வாசிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. (வ-9)

# தீர்மானங்களின் செயற்பாட்டறிக்கை சமர்ப்பிக்காவிட்டால் பகிஷ்கரிப்பு

## வலி. தென்மேற்கு உறுப்பினர்கள் எச்சரிக்கை

வலி தென்.மேற்கு பிரதேச சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் செயற்பாட்டறிக்கைகள் சமர்பிக்கப்படாதமை குறித்து அதிருப்தியடைந்துள்ள உறுப்பினர்கள் இந்தநிலை தொடருமேயானால் மாதாந்தக் கூட்டங்களைப் பகிஷ்கரிக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்களின் உறுப்பினர்களால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துவது செயலாளரின் கடமையாகும். இந்தத் தீர்மானிங்களின் செயற்பாடுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதும் செயலாளரின் கடமையாகும் .

இந்த நிலையில் பிரதேச சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டு வருகின்றன. இதனால் மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாத நிலை தோன்றியுள்ளது.

தீர்மானங்களின் செயற்பாட்டறிக்கைகளை மாதாந்தக் கூட்டங்களில் தவறாது சமர்ப்பிக்குமாறு உறுப்பினர்கள் பிரதேச சபைச் செயலாளரைக் கோரி வரும் போதிலும் அவர் மௌனத்தைக் கடைப்பிடிப்பதனால் சீற்றம் கொண்ட உறுப்பினர்கள் இந்த நிலை தொடருமானால் மாதாந்தக் கூட்டங்களைப் பகிஷ்ரிக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

இதே வேளை செயற்பாட்டு அறிக்கைகள் குறித்து உறுப்பினர்கள் பதில் தவிசாளரிடம் கோரிய போது இது செயலாளரின் கடமை என்று கூறித் தப்பித்துக்கொள்கிறார். (த-115)

### தவறணையில் தவம் கிடக்கும் கள்ளுப் பிரியர்

நவாலி, பெப்.20

பனங்கள்ளு சீஸன் ஆரம்பித்துள்ளதால்,நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் தற்போது அதற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் உள்ளூர், வெளியூர் மதுப்பிரியர்கள் பனை மரங்களுக்குக் கீழும் தவறணைகளிலும் தவம் கிடப்பதைக் காண முடிகிறது. (ஒ-100)

# கடும் அமளிகளுக்கிடையே உதயமானது தெலுங்கானா

புதுடில்லி, பெப்.20
தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்குவதற்கான ஆந்திர மறுசீரமைப்புச் சட்டத்திருத்தம் கடும் அமளிகளுக்கு இடையே நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

ஆந்திரத்தில் தெலுங்கானா மாநிலத்தைப் பிரித்துத் தனி மாநிலம் உருவாக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர். அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு இறுதியில் இந்தியாவின் 29 ஆவது மாநிலமாகத் தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்குவதற்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

எனினும் தெலுங்கானாவைத் தனி மாநிலமாக அறிவிப்பதற்கு ஆந்திராவில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தெலுங்கானா மாநிலம் தொடர்பான சட்டத்திருந்தம் ஆந்திர சட்ட சபையில் அண்மையில் நிராகரிக்கப்பட்டது. எனினும் குறித்த சட்டத்திருத்தத்துக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்தார்.

அதைத் தொடர்ந்து கடந்த 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டது. அப்போது காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜகோபால் உறுப்பினர்கள் மீது மிளகுப்பொடியை தூவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். சிலர் அவையில் இருந்த பொருள்களை உடைத்தனர்.


தெலுங்கானா சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு வெளியே தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய தெலுங்கானா நாடாளுமன்ற உறுப்பினர் விஜயசாந்தி.

இதுதொடர்பாக 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநிறுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் ஆந்திர மறுசீரமைப்பு சட்டத்திருத்தம் நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்தச் சமயம் சபையின் நிகழ்வுகளின் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பு சுமார் 90 நிமிடங்களுக்கு நிறுத்தப்பட்டது. தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக ஒளிபரப்பு தடைப் பட்டதாக நாடாளுமன்ற ஒளிபரப்பு நிர்வாகம் விளக்கம்அளித்துள்ளது. இதனை ஏற்க மறுத்துள்ள எதிர்க்கட்சிகள், நன்கு திட்டமிட்டே நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக குற்றம்சாட்டியுள்ளன.

குரல் வாக்கெடுப்பு
விவாதத்தின் இறுதியில் குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் பா.ஜ.க. உறுப்பினர்கள் ஆதரவுடன் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. (ற)

## பதவி விலகினார் கிரண்குமார் ரெட்டி

சீமாந்திரா, பெப்.20
ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க வழி செய்யும் மாநில மறுசீரமைப்பு சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி தனது பதவியில் இருந்து நேற்று விலகினார். அத்துடன் காங்கிரஸ் கட்சியில் இருந்து தாம் விலகுவதாகவும் அறிவித்துள்ளார்.

நேற்றுக் காலை சீமாந்திரா நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான ஆலோசனையின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"தெலுங்கானா அமைக்க காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு முடிவு செய்த போது பதவி விலகுவேன் என்று கூறியி ருந்தேன், ஆனால் கட்சித் தலைவர் சோனியா காந்தி கேட் டுக் கொண்டதற்கு இணங்க பதவியில் தொடர்ந்தேன். அப் போதே பதவியில் இருந்து விலகியிருந்தால் 4 மாதங்களுக்கு முன்னதாகவே தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டிருக்கும்" என்று தெரிவித்தார்.

புதிய கட்சி ஆரம்பிப்பீர்களா? என்று அவரிடம் கேட்கப்பட்ட போது அதற்குப் பதிலளிப்பதற்கு அவர் மறுத்துவிட்டார். (ற)

## நிர்ப்பந்தத்தால் கட்சியை விட்டு என்னை நீக்கினர்

*- அழகிரி*

மதுரை, பெப்.20
மதுரை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளைக் கட்சியில் இருந்து நீக்கியமை கட்சித் தலைவர் கருணாநிதி பல்வேறு நிர்ப்பந்தங்களுக்கு இடையே எடுத்த முடிவு என்று தெரிவித்துள்ளார் மு.க. அழகிரி.

மதுரையில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"யாரோ ஒட்டிய சுவரொட்டிக்காக மதுரை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் 10 பேர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். நியாயம் கேட்ட என்னையும் கட்சியிலிருந்து நீக்கினர். நிர்ப்பந்தம் காரணமாக தி.மு.க. தலைமை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. கட்சித் தலைமை அதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் அவர்.(ற)

# காதல் தகராறால் இலங்கைத் தமிழ் மாணவன் கொலை

## *திருச்சியில் அதிர்ச்சிச் சம்பவம்*

திருச்சி, பெப்.20
திருச்சியில் காதலால் ஏற்பட்ட தகராறில் இலங்கைத் தமிழ் இளைஞன் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

காதலால்தகராறு
திருச்சியில் சீனிவாச நகரில் வசிக்கின்றார் இலங்கைத் தமிழரான ஸ்ரீதரன். அவரது 20 வயதுடைய மகன் விதுகரன். இவர் திருச்சியில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் கல்வி கற்று வந்தார். அவருக்கும் அதே கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும்இடையே காதல் மலர்ந்துள்ளது. இந்த நிலையில் விதுகரன் காதலித்த பெண்ணின் தங்கையை அதே கல்லூரியில் கல்வி கற்கும் திருச்சியைச் சேர்ந்த அரவிந்த் என்பவர் காதலித்துள்ளார். அதையறிந்த விதுகரன் அரவிந்தை அழைத்துக் கண்டித்தார். அதன் பின்னர் தான் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

கூலிப்படை தாக்குதல்
ஒரு சில நாள்களுக்கு முன்னர் விதுகரன் வீட்டின் முன்னால் நண்பர்களுடன் நின்றிருந்தபோது. அங்கு வந்த அரவிந்த் தும் அவருடன் வந்தவர்களும் கடுமையாகத் தாக்கினர். அதன் பின்னர் விதுகரனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவங்களை நேரில் கண்ட விதுகரனின் தாயார் திருச்சி மருத்துவமனை பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்தார். அதையடுத்து களத்தில் இறங்கிய பொலிஸார் கடத்தல் வழக்குப் பதிவு செய்து தமது தேடுதல் வேட் டையைத் தொடங்கினர்.


பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட விதுகரனின் உடல்

சந்தேகத்தில் கைது
விசாரணைகளை அடுத்து சந்தேகத்தின் பேரில் தினகரன் (வயது-20), ஜோன்சன் (வயது -20) ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின்போதே அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகத் தொடங்கின.

வெட்டிக் கொலை
பொலிஸாரின் தொடர் விசாரணைகளால் வாயைத் திறந்தார் தினகரன். "தனது காதலுக்கு விதுகரன் எதிர்ப்புத் தெரிவித்துக் கண்டித்ததை அரவிந்தால் தாங்க முடியவில்லை. அதனால் அவன் கூலிப்படை ஒன்றை ஏற்பாடு செய்தான். சம்பவத்தன்று நாங்கள் விதுகரனை அவரது வீட்டுக்கு முன் வைத்துத் தாக்கினோம். அதன்பின்னர் அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றியவாறு பல பகுதிகளுக்குச் சுற்றி அவரைத் தாக்கினோம். அதன் பின்னர் சின்னக் கருப்பூர் எனும் இடத்தில் உள்ள தென்னந்தோப்புக்கு விதுகரனைக் கொண்டு சென்று அரிவாளால் வெட்டிக் கொலை செய்தோம்" என்று அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டார்.

உடல் மீட்பு
அதையடுத்து கொலை நடந்த இடத்துக்கு அவர்களைக் கூட்டிச் சென்ற பொலிஸார் தென்னம் ஓலைகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த விதுகரனின் உடலைக் கண்டெடுத்தனர். தற்போது கடத்தல் வழக்கை கொலை வழக்காக மாற்றி பொலிஸார் விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அரவிந்த் உட்பட 7 பேரைப் பொலிஸார் வலை வீசித் தேடி வருகின்றனர்.

விதுகரனின் தந்தை ஏற்கனவே இறந்துவிட்டார். தாய் மற்றும் சகோதரியுடனே விதுகரன் வசித்து வந்தார். ஒரு சிறிய விவகாரத்துக்காக மாணவர் ஒருவர் கடத்திக் கொலை செய்யப்பட்டமை அந்தப் பகுதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு சிறிய விடயத்துக்காக கூலிப்படையை வைத்து மாண


விதுகரன்

**வன் ஒருவனைக் கொலை செய்யும் அளவுக்கு குரோத மனப்பான்மை வரக் காரணம் என்ன?. தற்கால தமிழ்த் திரைப்படங்களின் தவறான தாக்கமே இளைஞர்களின் இவ்வாறான நடவடிக்கைகளுக்குக் காரணமாக அமைகின்றன என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.** (ற)


சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
OLI ARAZI மாத சஞ்சிகை
ஒளி அரசி நடாத்தும் மார்ச் 8



வடமராட்சி பிரதேச பாடசாலை ஆசிரியர்கள், உயர்தர மாணவர்களுக்கான மாபெரும் கட்டுரைப்போட்டி

பிரிவு 1 க்கான தலைப்பு
ஆசிரியர்களுக்கு : "இன்றைய உலக அரங்கில் பெண்"

பிரிவு 2 க்கான தலைப்பு
உயர்தர மாணவர்களுக்கு: "சமுதாய முன்னேற்றத்தில் பெண்ணின் பங்கு"

பரிசு விபரம்

| ஆசிரியர்களுக்கு | மாணவர்களுக்கு |
| --- | --- |
| 1ஆம் இடம் 10,000/= | 5000/= |
| 2ஆம் இடம் 7500/= | 3000/= |
| 3ஆம் இடம் 5000/= | 2000/= |

ஒவ்வொரு பிரிவிலும் மேலும் 10 பேருக்கு 1000/= பெறுமதியான ஆறுதல் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ஒரு பாடசாலையில் இருந்து 3 ஆசிரியர்களும், 3 உயர்தர மாணவர்களும் பங்கு பற்றலாம்.
★கட்டுரைகள் பிரிவு 1க்கு 600 சொற்களுக்கு மேற்படாமலும் பிரிவு 2க்கு 300சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
★கட்டுரைகள் அனைத்தும் சுயஆக்கம் என்பது அதிபரால் உறுதி செய்யப்பட வேண்டும்.
★ஆண் பெண்இருபாலாரும் பங்கு பற்றலாம்.
★கட்டுரைகள் அனைத்தும் 5/03/2014 க்கு முன்பு பாடசாலைக்கு வரும் எமது உத்தியோகத்தர்களிடம் பெயர், விலாசம்,பாடசாலை பெயர்,போட்டிப் பிரிவு என்பன குறிப்பிட்டு கடித உறைக்குள் வைத்து கையளிக்கப்பட வேண்டும்.

'ஒளி அரசி' யின் மேலதிக அறிவுகளைப் பெற பெண்களே மாத 'ஒளி அரசி' யை வாங்கிப் படியுங்கள்.

(சி.11796)

அனுசரணை: திருமதி. தவமலர் சிவநேசன் - அவுஸ்ரேலியா
மேலதிக தொடர்புகளுக்கு : 0215673377 / 0714273035


# பிரதமர் பதவிக்கு மம்தா மிகப் பொருத்தமானவர்

## *ஹசாரே கூறுகின்றார்*

புதுடில்லி, பெப்.20
மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியே இந்தியாவுக்கு மிக பொருத்தமான பிரதமர் வேட்பாளராவார் என்று தெரிவித்துள்ளார் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே.

நேற்றுமுன்தினம் மம்தா பானர்ஜியைச் சந்தித்து பேசிய பின்னர் கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு நான் ஆதரவு கொடுக்க


ஹசாரே

காரணங்கள் இருக்கிறது. அந்த காரணங்களைப் பின்னர் பகிர்ந்து கொள்வேன். மம்தா பானர்ஜி மிக எளிமையானவர் அவர் பிரதமரானால் நாட்டில் பல மாற்றங்களை கொண்டுவரமுடியும்" என்று தெரிவித்துள்ளார்.

எனினும் மம்தா பானர்ஜியுடனான சந்திப்பில் விவாதித்த கருத்துக்கள் தொடர்பில் எதுவும் அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார். (ற)



உக்ரைன் அரச எதிர்ப்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் நேற்று இடம்பெற்ற மோதல்களால் 7 பொலிஸார் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த மோதல்களால் 1000க்கும் மேற்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. மோதல்கள் நடைபெறும் இடத்தை விட்டு பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சைப் பதவி விலகுமாறு கோரிக் கடந்த நவம்பர் மாதம் முதல் அந்நாட்டு எதிர்க்கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (ற)

## அமெரிக்க அதிகாரிகளை வெளியேற்றியது வெனிசுலா

கராக்கஸ், பெப்.20

வெனிசுலாவில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வரும் நிலையில் அங்குள்ள மூன்று அமெரிக்க அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ உத்தரவிட்டுள்ளார்.

வெனிசுலா அரசுக்கு எதி ரான சதி வேலைகளில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது என்று குற்றம் சாட்டியுள்ள மதுரோ, போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினரை அந்த மூன்று அதிகாரிகளும் சந்தித்துப் பேசியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

வெனிசுலா ஜனாதிபதி யின் இந்தக் குற்றச்சாட்டு களை மறுத்துள்ள அமெரிக்கா, "இது உண்மைக்குப் புறம் பானது" என்று கண்டனம் தெரிவித்துள்ளது. (ற)

## ஈராக்கில் 49 பேர் சாவு

பாக்தாத், பெப்.20

ஈராக் தலைநகர் பாக்தாத் மற்றும் அதன் சுற்றுபுற பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளால் 49 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு பாக்தாத்தில் உள்ள பஸ் நிலையம் ஒன்றில் வெடி பொருள்கள் நிரம்பிய வாகனம் வெடித்துச் சிதறியது. அதில் 11 பேர் உயிரிழந்தனர். அதேபோன்று மசூதிகளை குறி வைத்து நிகழ்த்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதல்க ளில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட 29 பேர் உயிரிழந்தனர்.


இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# தாய்லாந்தில் மீண்டும் வெடித்தது வன்முறை

பாங்ஹொக், பெப்.20

தாய்லாந்தில் அரச கட்டடங்களை போராட்டக்காரர்களிடம் இருந்து மீட்கும் முயற்சியில் ஏற்பட்ட மோதலில் பொலிஸார் உள்பட 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 17 பொலிஸார் மற்றும் வெளிநாட்டு செய்தியாளர் உள்பட 59 பேர் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்தில் அதிபர் யிங்லக் ஷினவத்ரா பதவி விலகக் கோரி முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி தலைமையில் போராட்டம் நடைபெற்று வருகிறது. தலைநகர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எதிர்க்கட்சிகள், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்களை கைப்பற்றியுள்ளன. அதையடுத்து, கடந்த ஜனவரி மாதம் தாய்லாந்தில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது.



பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ள தாய்லாந்து அரச எதிர்ப்பாளர்கள்.

இந்தநிலையில் அரசுக்கு எதிராக போராட்டக்காரர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பேரணி நடத்தினர். அதையடுத்து 'பாங்ஹொக் அமைதி நடவடிக்கை' என்ற பெயரில் பொலிஸார் போராட்டத்தை அடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதனால், பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

அதில் ஒரு பொலிஸார் மற்றும் 2 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் 17 பொலிஸார் மற்றும் வெளிநாட்டு செய்தியாளர் உள்பட 59 பேர் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்தில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை எதிர்க் கட்சிகள் புறக்கணித்தன. தலைநகர் பாங்ஹொக் உட்பட தமது கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு நகரங்களில் தேர்தல் வாக்குப்பதிவை நடத்த விடாமலும் எதிர்க் கட்சிகள் தடுத்தன. அதனால், தேர்தல் முடிவை அறிவிக்க முடியாமல் தேர்தல் ஆணை யம் தவித்து வருகிறது. இந்த நிலையிலே அங்கு போராட்டங்கள் மீண்டும் உக்கிரமடையத் தொடங்கியுள்ளன. (ற)

## 84 வயது கன்னியாஸ்திரிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை

நியூயோர்க், பெப்.20

அமெரிக்காவின் டென்னெஸ்ஸீ மாநிலத்தில் அணு உற்பத்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்திய 84 வயது கன்னியாஸ்திரிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு டென்னெஸ்ஸி மாநிலத்தில் உள்ள யுரேனியக் களஞ்சியம் ஒன்றுக்குள் நுழைந்து கன்னியாஸ்திரியும் ஏனைய இருவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ற)

## புலிக் கூண்டுக்குள் பாய்ந்து தற்கொலைக்கு முயன்ற நபர்

பீஜிங், பெப்.20

புலியின் கூண்டுக்குள் பாய்ந்து இளைஞர் ஒருவர் தற் கொலை செய்துகொள்ள முயன்ற சம்பவம் சீனாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

சீனாவில் உள்ள செங்க்டு மிருக காட்சியகத்தைப் பார்வையிடச் சென்றுள்ளார் யாங் ஜிங்காய் என்ற 27 வயது இளைஞர். அங்கு சுற்றித் திரிந்த அவர் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அங்கிருந்த புலியின் கூண்டிற்குள் பாய்ந்து விட்டார். அதனைக் கண்ட ஏனைய பார்வையாளர்கள் இளைஞரைக் காப்பாற்றுமாறு அலறினர். அதைக் கேட்டு அங்கு வந்த மிருகக் காட்சி சாலை பாதுகாவலர்கள் வாலிபரை புலியிடம் இருந்து காப்பாற்ற முயற்சித்தனர். ஆனால் கூண்டுக்குள் குதித்த யாங் சும்மா இருக்கவில்லை. புலியை ஆத்திரமூட்டும் வகையில் அதன் தாடையை பிடித்து இழுத்து அதனை வெறுப்பேற்றியுள்ளார். அதனால் ஆத்திரமடைந்த அந்தப் புலி அவரைத் தாக்கத் தொடங்கியுள்ளது. அதையடுத்துப் பெரும் போராட்டத்துக்குப் பின்னர்மிருகக்காட்சிச் சாலைப் பாதுகாவலர்கள் யாங்கை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இதுகுறித்து மருத்துவர்கள் கூறுகையில், "மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு இத்தகைய தற்கொலை முடிவை இவர் எடுத்திருக்கலாம்" என்று கூறியுள்ளனர். (ற)

## சிறைப்பிடித்த இராணுவத்தினரைக் கொன்றனர் தலிபான்கள் அமைதிப் பேச்சுக்களை இடைநிறுத்தியது பாகிஸ்தான் அரசு

இஸ்லாபாத், பெப்.20

தாம் கடத்தி வைத்திருந்த 23 பாகிஸ்தான் இராணுவத்தினரையும் கொன்று விட்டோம் என்று தலிபான் அமைப்பினர் அறிவித்துள்ளதை அடுத்து அவர்களுடனான அமைதிப் பேச்சுக்களை இரத்து செய்துள்ளது பாகிஸ்தான் அரசு.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அரசின் பேச்சுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் இர்பான் சித்திக், "23 இராணுவத்தினரைக் கொன்றுள்ள ஒரு அமைப்புடன் பேச்சு நடத்துவது வீண் வேலை. இந்தச் சம்பவத்துக்கு நாம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளோம். இதுபோன்ற நடவடிக்கைகள் அமைதி திரும்புவதற்கு உதவாது" என்று தெரிவித்துள்ளார்.

தலிபான் அமைப்பினரால் கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் அனைவரும் பாகிஸ்தான் பிராண்டியர் கார்ப்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மொஹ்மந்த் ஏஜென்சி பகுதிக்கு உள்பட்ட ஷோங்காரி சோதனை சாவடி அருகே 2010ஆம் ஆண்டு கடத்தப்பட்டனர். இந்தநிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு ஓர் காணொலி இறுவட்டை தலிபான் அமைப் பினர் அனுப்பி வைத்திருந்த னர். அதில்மொஹ்மந்த்ஏஜென்சி பகுதி தலிபான் அமைப்பின் தலைவர் உமர் காலித் குராஷானி தகவல்ஒன்றைத் தெரிவித்திருந்தார். "சிறைப் பிடிக்கப்பட்ட 23 இராணுவச் சிப்பாய்களும் கொல்லப்பட்டுள்ளனர். சிறைப்பிடித்து வைத்திருந்த தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொன்றுள்ளனர். அதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையே இது. பேச்சு நடத்திக் கொண்டு எம்மை அழிக்கும் நடவடிக்கையையும் பாகிஸ்தான் செய்யுமானால் இவ்வாறான சம்பவங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி நேரிடும்" என்று தெரிவித்துள்ளார்.

அதையடுத்தே பாகிஸ்தான் அரசு தலிபான் அமைப்பினருடனான பேச்சுக்களை இரத்துச் செய்துள்ளது. இந்த விவகாரம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. (ற)

## கட்டடக் கூரை வீழ்ந்து 10 பேர் சாவு

சியோல், பெப்.20

தென் கொரியாவில் கட்டட மேற்கூரை இடிந்து வீழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்தனர். கியோன்ஜு நகரில் மலைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் புதிதாக கல்லூரியில் சேரும் மாணவர்களை வரவேற்பதற்கான நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் 9 மாணவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். 80 பேர் படுகாயமடைந்துள்ளனர். (ற)

# இந்திய வீட்டுத் திட்டம் கிடைப்பதற்கு உதவியவர் சம்பந்தனா? டக்ளஸா?

## மாகாண சபையில் சூடான விவாதம்

*(நேற்றைய தொடர்ச்சி)*

இறுதியில் இப்படியே சிங்களக் குடியேற்றங்கள் நீண்டு செல்லுமாக இருந்தால் தமிழர்கள் கடலில்தான் விழவேண்டிவரும் என்று தெரிவித்தார்.
இதன் பின்னர் வவுனியா மாவட்டப் பெரும்பான்மை உறுப்பினர் ஜயதிலக ஆட்சேபித்து கருத்துத் தெரிவித்தார்.
இதற்கும் சீறி எழுந்த சிவாஜி, அடாவடியாகக் குடியேறியவர்கள் வெளியேற்றப்படவேண்டிவரும் என்று எச்சரித்தார்.
இதன்போது ரவிகரன், ஜெயதிலக தன்னையும் அறியாமல் உண்மையை ஒப்புக் கொண்டு விட்டார். சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி என்று தெரிவித்தார்.
இந்தச் சூடான விவாதத்தின் பின்னர் அவை நடவடிக்கைகள் தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டன.

### மீன்பிடியில் சர்ச்சை

இதன் பின்னர் ரவிகரனால் சமர்ப்பிக்கப்பட்ட மற்றுமொரு பிரேரணை தொடர்பில் ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான அஸ்மின் சில விடயங்களை முன்வைத்தார். புல்மோட்டை மீனவர்கள் அண்மையில் மேற்கொண்டிருந்த போராட்டத்தை அவர் நியாயப்படுத்தினார். கொக்கிளாய் கடல்நீரேரியில் சிங்கள மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துகின்றபோது அவர்களைக் கைது செய்வதில்லை. முஸ்லிம் மீனவர்களுக்கு மட்டும் ஏன் இந்த நடைமுறை பின்பற்றப்படுகின்றது என்று தான் அவர்கள் கேட்பதாக அஸ்மின் குறிப்பிட்டார்.
இதன்போது கருத்துத் தெரிவித்த விந்தன், சிங்கள மீனவக் குடும்பங்களின் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பில் பிரஸ்தாபித்ததுடன், காணி அதிகாரம் மாகாணசபைக்குரியது. நாம் அந்த அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ளோமா என்று முதலமைச்சரை மறைமுகமாகச் சாடினார். அந்த அதிகாரங்களை நாங்கள் எடுத்தால் இழந்ததை மீட்கலாம். இருப்பதை தக்கவைக்கலாம்- என்றார்.
இந்த விடயங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்த அமைச்சர் டெனீஸ்வரன், நன்னீர் மீன்பிடி தொடர்பில் அதிகார சபை நிறுவிப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்-என்றார்.
இதன் பின்னர் ஒரு சில பிரேரணைகள் சர்ச்சையில்லாமல் நிறைவேற்றப்பட்டன. ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மினின் பிரேரணை சபையில் மீண்டும் சூட்டைக் கிளப்பியது. மாகாண சபை அதிகாரங்களுக்குட்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் இனத்துவ அடையாளம் தவிர்க்கப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.
இதற்குப் பதிலடி கொடுத்த மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினர் சயந்தன், மத்திய அரசுதான் இனத்துவ ரீதியில் செயற்படுகின்றது. நாங்கள் போர் தர்மத்தைக் கடைப்பிடிப்பவனுடனேயே போர்த் தர்மத்தின்படி போர் செய்யலாம். அதர்ம வழி நிற்பவனுடன் நாங்களும் அப்படியே இருக்க வேண்டும் என்று சர்ச்சையைத் தொடக்கி விட்டார்.
அஸ்மின் ஒரு சில உதாரணங்களை முன்வைத்திருந்தாலும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் அதனை உதாசீனம் செய்து, மத்திய அரசுக்குரிய விடயங்களிலேயே இவ்வாறு நடக்கின்றது என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட்டனர். முதலமைச்சரும் இதற்கு உடந்தையாகக் கருத்துத் தெரிவிக்க இறுதியில் பிரேரணை கைவிடப்பட்டது.
இதன் பின்னர் சிவமோகன் சமர்ப்பித்த பிரேரணையும் வாதப் பிரதிவாதங்களுடன் அரங்கேறியது. போரினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு ஐ.நா உலக உணவுத் திட்டத்தினூடாக நிவாரணங்கள் வழங்குதல் தொடர்பில் அவர் பிரேரணை முன்மொழிந்திருந்தார்.
இதற்குக் கருத்துத் தெரிவித்த விந்தன் கனகரட்ணம், இதனை நாம் அரசிடம் கேட்டுப் பயனில்லை. அவர்கள் தான் ஐ.நா நிறுவனங்களை இங்கிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். எமது மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொண்டிருக்கின்றார்கள் என்று அடுக்கிக்கொண்டே சென்றார்.
இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ரிப்கான், உங்களிடம் ஏதாவது புள்ளிவிவரங்கள் இருக்கின்றதா என்று வில்லங்கமாகக் கேட்க, விந்தனும் இருக்கின்றது. வேண்டுமென்றால் அடுத்த கூட்டத்தில் தருவதாகச் சொல்லி அரசு தானும் செய்யாது, செய்கிறவர்களையும் விடாது என்று சாடினார்.
இதன்போது மீண்டும் ரிப்கான் குறுக்கிட முயல எழுந்த சிவாஜிலிங்கம், வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களையே மீளக் குடியமர்த்த வக்கிலாத அரசு என்னத்தைச் செய்யப் போகின்றது. நாங்கள் இரு கரம் நீட்டி வரவேற்கின்றோம். அரசுதான் முஸ்லிம்களை மீளக்குடிமர்த்தப் பின்னிற்கின்றது என்பதைச் சரியான சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தினார்.
இதனால் ரிப்கானுக்கும், சிவாஜிலிங்கத்துக்கும் இடையில் தர்க்கம் முற்றியது. இருவரும் விடாது வசைபாடிக் கொண்டிருக்கக் கொதித்தெழுந்த அவைத் தலைவர், பேச்சை குத்தகைக்கு எடுத்த மாதிரி பேசுவது நல்லதல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் பேச சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று விடயத்தைத் திருப்பினார்.
மத்திய அரசுடன் நாங்கள் முரண்பட்டுக் கொண்டிருக்கும் வரை மாகாண அரசு ஒன்றும் செய்ய முடியாது. மத்திய அரசு, ஐ.நா என்று கையேந்தாமல் எங்களாலேயே செய்ய முடியும். ஓட்டுத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் என்பவற்றைத் தொடக்கினால் தொழில் வாய்ப்பு கிடைக்கும். பின்னர் ஏன் மக்கள் பட்டினியால் கிடக்க வேண்டும் என்று வரிந்து கட்டினார்.
இதன் பின்னர் ஜெயதிலக, ஐ.நா சபைக்கு ஏன் போக வேண்டும் என்று கேட்டார். இதற்குப் பதிலளித்த சிவமோகன், ஐ.நா என்றதும் எல்லோரும் பேயைப் பார்த்த மாதிரிப் பயப்படுகிறார்கள் என்று நக் கலாகக் கடிந்தார்.
இதன் பின்னர் அனந்தி சசிதரனால், வடக்கில் குற்றச் செயல் அதிகரிப்பு, கட்டுப்படுத்துவது தொடர்பில் பிரேரணை முன்மொழியப்பட்டது. இதன்போது விந்தன் கனகரட்ணம், வடக்கில் குற்றச்செயல் அதிகரிப்பைப் பட்டியல்படுத்தினார். தற்போது வீதியெங்கும் வீசிக் கிடக்கும் பியர் ரின் கலாசாரத்தையும் அவர் கடுமையாகச் சாடினார்.
இதன் போது முதலமைச்சர், குறித்த விடயங்கள் தொடர்பில் பொலிஸாருடன் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இதன் பின்னர் குற்றச் செயல் அதிகரிப்பு தொடர்பான பிரேரணையில், கொலைக் குற்றச்சாட்டில் சந்தேகக் கைதியாகச் சிறையிலிருந்து அமர்வுக்கு வந்த கமல் கருத்துத் தெரிவித்தார். வெளிநாட்டில் இருந்து பணம்கொடுத்து இங்கு கட்டப்பஞ்சாயத்து வளர்த்து விடுகின்றனர். இளைஞர்களுக்குப் பழிவாங்கும் எண்ணங்களை வளர்த்து, அவர்களின் கலாசாரத்தைச் சீரழிப் பதாகச் சமூகஅக்கறையோடுபேசினார்.
இதற்குப் பதிலடி கொடுத்த ரவிகரன், கலாசாரச்சீரழிவுக்கு யார் காரணமென்று தெரியும். யார் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் தெரியும் என்று குறிப்பிட்டார். இதற்குள் குறுக்கிட்ட அவைத் தலைவர், தெரிந்து கொண்டுதான் அவர் சொல்கிறார் என்று நக்கலாகச் சொன்னார்.
இதன் பின்னர் ரிப்கானுக்குப் பதிலடி கொடுத்தார் அஸ்மின். ரிப்கானின் பேச்சு நல்லாக இருப்பதாக நற்சான்று பத்திரத்தை வழங்கிவிட்டு, வலி. வடக்கு தொடர்பில் நிலைமையை நேரில் அறிய வடக்கு மாகாண சபையின் குழு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்து தர முடியுமா என்று கேட்டார். அதற்கு ரிப்கான் பதிலளிக்காமல் மௌனமாக இருந்தார்.
இதன் பின்னர் அனந்தி சசிதரன், அரச அலுவலகங்களில் பெண்கள் அதிகாரிகளினால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுவது தொடர்பில் குறிப்பிட்டார்.
இதன்போது யாழ்.மாநகர சபையின் ஆணையாளர், தனது அதிகாரத்துக்குட்பட்ட யாழ். பொது நூலகத்தின் பிரதம அதிகாரியைத் தகாத வார்த்தைகளால் ஏசுவது தொடர்பில் பிரஸ்தாபித்தார்.
இதற்கு ஒத்து ஊதிய அவைத் தலைவர், தானும் முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர் என்றும், இப்படிப்பட்ட பதவியிலிருந்து கொண்டு செய்யும் நடவடிக்கைகள் கேவலமானவை என்றும் விமர்சித்தார்.
இதன்போது சட்டப்படி விடயத்தை அணுகிய சயந்தன், நீங்கள் ஒருவரை குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. பால் நிலை சமத்துவம் தொடர்பிலோ அல்லது பெண்கள் பாதிப்பு தொடர்பிலோ சொல்லுங்கள். ஓர் அதிகாரி மீது குற்றம் சுமத்தாமல் இவ்வாறு கதைக்கக் கூடாது என்று நியாயப்படுத்தினார். இதன் போது நீங்கள் யாழ்.மாநகர சபை ஆணையாளர் என்று சொன்னதே பிரணவநாதனைத் தான் குறிக்கும் என்றும் சொல்லி விட்டார்.
அதற்கு அனந்தி, நான் பெயர் குறிப்பிடவில்லை. நீங்கள்தான் பெயர் குறிப்பிட்டீர்கள். நான் முன்னாள் ஆணையாளரைப் பற்றிச் சொல்லியிருக்கலாம் என்றார். அவையின் கண்கள், அவைத் தலைவரை நோக்கிச் சிரிப்புடன் திரும்பின. அவைத் தலைவரும்சிரித்துக்கொண்டே விடயத்தை மெதுவாகச் சமாளித்து முடிவுக்குக் கொண்டு வந்தார்.
இறுதிநேரப் பிரேரணையிலும் மீண்டும் சூடான விவாத்ம் வந்தது. இந்திய வீட்டுத் திட்டம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் டில்லி சென்ற சமயத்திலேயே ஒப்புதல் அளிக்கப்பட்டுத் தொடங்கப்பட்ட திட்டம் என்று கமலேந்திரன் தெரிவித்தார். இதற்குப் பதிலடி கொடுத்த சிவாஜி, அது எங்கள் தலைவர் சம்பந்தன், இந்தியா சென்று கேட்டதற்கிணங்க கிடைத்தது-என்றார்.
அத்துடன் அப்படிக் கிடைத்த வீட்டுத்திட்டத்தையும் ஈ.பி.டி.பியினரே கெடுப்பதாகத் தெரிவித்தார். நீங்கள் அந்தக் கட்சியில் இல்லைதான் என்று நக்கலாகக் கமலைச் சாடினார். ஆனாலும் கமல் விடுவதாக இல்லை. கட்சியிலிருந்து நீக்கினாலும், கட்சி விசுவாசம் குன்றாமல் கட்சிப் பெயரைப் பாவிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று அவைத் தலைவரைக் கோரினார். அதற்கு அவைத் தலைவரும் இணங்கினார். ஆனாலும், சிவாஜிலிங்கம், ஈ.பி.டி.பி தான் கடத்திக் கொண்டு போனதாக மக்கள் சாட்சிகள் சொல் கின்றனர் என்று விடயத்தை திருப்பினார்.
அத்துடன் இந்திய அரசினால் வழங்கப்பட்ட டிராக்டர்கள் எங்கே என்றும் அடுத்த கேள்வியைப் போட்டார்.
சூடாக நடந்த சபை அமர்வு பி.ப 2.15 மணியளவில், மார்ச் 18 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டது. அமர்வு முடிந்ததும் எல்லா உறுப்பினர்களும் தங்கள் வாகனத்தில் மதிய உணவுக்குக் கிளம்ப, கமலேந்திரன் மட்டும் 5 சிறைக்காவலர்களுடன் சிறைச்சாலை வாகனத்தில் சிறைக்குத் திரும்பினார்.

## புளியங்குளத்தில் விபத்துச் சம்பவம்

வவுனியா, பெப்.20
புளியங்குளம் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்து ஒன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.
புளியங்குளத்தில் முத்துமாரி நகர்ப் பகுதியில் சைக்கிளில் பனங்கிழங்குகளை விற்பனை செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர் மீது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் மோதிய தில் மதியாமடு கிராமத்தைச் சேர்ந்த ம.சின்னத்துரை (வயது- 65) என்பவர் படுகாயமடைந்த நிலையில் புளியங்குளம் பிர தேச வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு அவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-402)



பயிற்சியில் கலந்துகொண்ட ஆங்கில ஆசிரியர்கள்...

## ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு, பெப்.20
யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பேச்சு ஆங்கிலத்தை வளர்த்தெடுக்கும் முகமாக யாழ்.மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண் டபத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 9.45மணிக்கு ஆரம்பமாகியது. நாமல் ராஜபக்ஷவின் நாளைய இளைஞர் உலகம் மற்றும் ஸ்பைஸ் அமைப்பும் வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் இணைந்து இந்தப் பயிற்சி வகுப்பை நடத்தினர்.
நிகழ்வில் பிரிட்டன் சபையின் விரிவுரையாளர் கலாநிதி கஷிஸ் பிறிடி மொகான் சமரசிங்கா, வடமாகாண கல்வி அமைச்சின் ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் என்.சோமஸ்கந்தராசா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.தமிழழகன், லண்டன் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி ஐ.மோகனகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். யாழ்.மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து ஆசிரியர்கள் இந்த பயிற்றுவிப்பாளர்க ளுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார்கள். (ந-86)

## மாகாண ஒலிம்பியாட் போட்டியில் 11 மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு

தென்மராட்சி, பெப்.19
வடமாகாண கல்வி திணைக்களத்தால் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட ஒலிம்பியாட் கணித பாடப் போட்டியில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த11 மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து 8 மாணவர்களும், நாவற்குழி ம.வி., வீரசிங்கம் மத்திய கல்லூரி, வரணி மத்திய கல்லூரி ஆகியவற்றிலிருந்து தலா ஒரு மாணவர் வீதமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு :
தொகுதி I தரம் 6- க.சாம்பவி (சாவகச்சேரி இந்து.)
தொகுதி II தரம் 7- கே.மதுசன் (சாவகச்சேரி இந்து.), ஆர்.நிதர்சன் (வரணி மத்திய கல்லூரி)
தரம்8 -எஸ்.சந்தர்பவன் (சாவகச்சேரி இந்து.).எஸ். இளங்கதிர் (சாவகச்சேரி இந்து)
தொகுதி III தரம் 10-எஸ்.சுபாஷன் (நாவற்குழி ம.வி.).
தரம் 11-த.பாசுபதன் (மீசாலை வீரசிங்கம்), ஜெ.ஜெயதாரணி (சாவகச்சேரி இந்து.), என். கோபிசங்கர் (சாவகச்சேரி இந்து.) , ஆர்.விசாகன் (சாவகச்சேரி இந்து.), ரி.தர்சிகா (சாவகச்சேரி இந்து.). (வ-9)

## உரிய நடவடிக்கை இன்றேல் பாடசாலைப் புறக்கணிப்பு

*ஆனைவிழுந்தான்குளம் பெற்றோர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.20

தமது கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காதுவிட்டால் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாது புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பாடசாலையின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளம் அ.த.க. பாடசாலையின் பெற்றோர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு கடந்த 17 ஆம் திகதி சென்று பாடசாலையின் தேவைகள் அடங்கிய மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில்;

பாடசாலையில் கடந்த 15 ஆண்டுகளாக ஒரே அதிபர் கடமையாற்றுவதாகவும் அத்தோடு ஆசிரியர்கள் கடமை நேரங்களில் ஒழுங்காகச் சமுகமளிப்பதில்லையெனவும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் தமது பிள்ளைகளைப் பாட சாலைக்கு அனுப்பாது புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# மன்னார் நகர சபைப் பகுதிகளில் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள்

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பணிப்புக்கு அமைவாக கிராமிய மட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் பங்கேற்பு ரீதியான அபிவிருத்தித் திட்டங்கள் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இ.குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபைக்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் நகர சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டு ஐந்து தினங்கள் குறித்த வேலைத்திட்டம் இடம் பெறவுள்ளது.

மக்களைச் சந்தித்து அந்தந்தக் கிராமங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக முதலில் தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

அதன் பின் ஆஸ்திரேலியா நாட்டின் நிதி உதவியைப் பெற்று தேவையான அபிவிருத்திப் பணிகளை மக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



கீரி கிராமத்தில் மன்னார் நகரசபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் அபிவிருத்தி தொடர்பாக மக்களிடையே எடுத்து கூறுகின்றார். அருகில் நகரசபை உறுப்பினர் இ.குமரேஸ்.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக கீரி, பட்டித் தோட்டம் ஆகிய கிராமங்களைக் கொண்ட பிரிவுக்கும், சாவக்கட்டு பிரிவுக்கும், மூர்வீதி பிரிவுக்குமான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கீரி, பட்டித்தோட்டம் ஆகிய கிராமங்களைக் கொண்ட பிரிவுக்கு நகர சபை உறுப்பினர்களான இ.குமரேஸ், எஸ்.டிலான் ஆகியோரின் தலைமையிலும், சாவக்கட்டு பிரிவுக்கு மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் எஸ்.பிரிந்தாவனநாதன் ஆகியோரின் தலைமையிலும், மூர்வீதி பிரிவுக்கு நகர சபை உறுப்பினர்களான என்.நகுசீன், மெரினஸ் பெரேரா ஆகியோரின் தலைமையிலும் மக்களை நெறிப்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

மூன்று குழுக்களையும் நெறிப்படுத்தும் முகமாக நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், செயலாளர் பிரிட்டோ லெம்பேட் ஆகியோர் நேரடி மேற்பார்வையின் கீழ் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-56)

## பால் கொள்வனவு நிலையங்கள் அமைக்கப்பட்டதால் நன்மைகள்

*முல்லைத்தீவு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு*

முல்லைத்தீவு, பெப்.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் மில்கோ நிறுவனம் பால் கொள்வனவுநிலையங்களை அமைத்து பாலைக் கொள்வனவு செய்வதால் தமது வாழ்வாதாரத்துக்குப் பெரும் நன்மை கிடைப்பதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பால் தரக் கூடிய கால்நடைகள் இருந்த போதிலும் அவற்றிலிருந்து பெறப்படும் பாலை விற்பனை செய்வதில் பல்வேறு இடர்கள் காணப்பட்டதால் கால்நடை வளர்ப்பாளர்களால் உரிய பயனைப் பெற முடியவில்லை.

அத்துடன் பால் கொள்வனவில் ஈடுபடுபவர்களும் ஒழுங்கான வகையில் நடந்து கொள்ளவில்லை. பால் கொள்வனவு விலையும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. தற்போது மில்கோ நிறுவனம் கிராமங்கள் தோறும் கிராம மட்ட அமைப்புக்களுடன் இணைந்து உதவி அரச அதிபரின் அனுசரணையுடன் பால் கொள்வனவு நிலையங்களை அமைத்துள்ளதுடன் பாலுக்கான விலையையும் லீற்றர் ஒன்றுக்கு 51 ரூபாவாக நிர்ணயம் செய்து பாலைக் கொள்வனவு செய்து வருகின்றது.

**பால் கொள்வனவில் ஈடுபடுபவர்களும் ஒழுங்கான வகையில் நடந்து கொள்ளவில்லை. பால் கொள்வனவு விலையும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.**

இதனால் கறவை மாடுகளை வளர்க்கும் குடும்பங்கள் வருமானத்தை ஈட்டி வருவதைக் காண முடிகின்றது.


மேலும், மில்கோ நிறுவனம் அவர்களை ஊக்குவித்து உதவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள கால் நடைப் பண்ணையாளரான க.பாலகுமார் என்பவர் இது தொடர்பாகத் தெரிவிக்கும் போது:

எம்முன்னோர்கள் கால்நடை வளர்ப்பில் அதிகம் ஆர்வம் கொண்டிருந்தனர். இதனால் பால், தயிர், நெய் போன்ற வற்றுக்கு ஒருபோதுமே தட்டுப்பாடு இருந்ததில்லை. ஆனால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இல்லாததால் அவற்றை மேய்ப்பதற்கு இடமில்லாததுடன் கால்நடைகள் விவசாயச் செய்கைகளையும் அழித்து வந்தன.

இதனால் ஏராளமான கால்நடைகளை இறைச்சிக்காக விற்பனை செய்துவிட்டார்கள். தற்போது கால்நடை மூலமாக குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்லக் கூடியதான வருவாயைப் பெறமுடியும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தற்போது உள்ளூர் இன மாடுகளிலிருந்து நாளாந்தம் 4 லீற்றர் பால் எடுக்க முடிகின்றது. தனியார் ஒருவர் 46 ரூபாவுக்கே கொள்வனவு செய்கிறார். புதிய விலை நிர்ணயத்தினால் ஒரு பசுவிலிருந்து மாதாந்தம் சராசரியாக 5 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கின்றது - என்றார். (க-500)



## முழங்காவில் ம.விக்கு மாடிக்கட்டடம்

கிளிநொச்சி மாவட்டத்தின் தேசிய பாடசாலைகளில் ஒன்றான முழங்காவில் மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் இரண்டு மாடிக் கட்டடத்தின் வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. யுனிசெப் நிறுவனத்தின் 60 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக் கப்பட்டு வருகின்றது. தற்போது சுமார் 680 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலை முன்பு அமைக்கப்பட்ட பழைய கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுகோள்

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி முழங்காவில் கிராமத்தில் குடிதண்ணீர்த்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் குடி தண்ணீர்ப் பிரச்சினை பெருமளவில் காணப்படுகின்றது. நிலத்தடி நீரையே நம்பி உள்ள இந்தக் கிராம மக்கள் அதனையே விவசாயத்துக்கும் பயன்படுத்துவதால் எதிர்காலத்தில் நீருக்குத் தட்டுப்பாடுஏற்படும்அபாயம்உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மழையும் பெய்யாததால் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. குளங்களின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைந்துள்ளதால் நிலைமை மேலும் மோசமாகுமெனத் தெரிய வருகின்றது.

எனவே முழங்காவில் கிராமத்தினை மையப்படுத்தி தண்ணீர்த் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது முழங்காவிலில் உள்ள நாச்சிக்குடா உட்படப் பல கிராமங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டால் எமது நிலம் சொர்க்கபுரியாகும்

*கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.20

எமக்கான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படுமாயின் எமது நிலம் குறுகிய காலத்தில் சொர்க்கபுரியாக மாறிவிடும்- இவ்வாறு தெரிவித்தார் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா.

கிளிநொச்சி தருமபுரம் இல. 1 பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை அதிபர் சு.சுதாகரன் தலைமையில் இடம் பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே; பிரதேச சபைத் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கியமான தொன்மையான கிராமங்களில் ஒன்றான தருமபுரம் கல்விப் பாரம்பரியத்தின் முதல்நிலைகளைக் கொண்டது என்பதைக் கடந்த கால வரலாறுகளில் இருந்து அனைவரும் அறிந்துகொள்ளக்கூடிய ஒருவிடயமாகும். அதன் வெளிப்பாடாகத்தான் தருமபுரம் மகாவித்தியாலயம் இன்று தருமபுரம் மத்திய கல்லூரியாக உயர்ந்து நிற்கின்றது. தருமபுரம் இல. 1 பாடசாலைக்குப் பக்கபலமாக ஒரு மூலாதாரப் பள்ளி இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது. இந்தப் பள்ளியைச் சேர்ந்த பிள்ளைகள் மிகுந்த நம்பிக்கையுடன் கல்வி கற்க முடியும். அந்த நம்பிக்கையையும் ஒரு செம்மையான நெறிப்படுத்தலையும் விளையாட்டுப் போட்டியின் ஒழுங்கமைப்பில் கண்டுகொண்டேன். போரால் தருமபுரம் சிறு பட்டணம் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்ததை இன்று எஞ்சி இருக்கும் கட்டடங்கள் மரங்களில் காணப்படும் காயங்கள் என்பன எடுத்துக் கூறுகின்றன. இத்தகைய வீழ்ச்சியில் இருந்து எழுந்து நிற்கும் பிள்ளைகளின் மகிழ்ச்சி அற்புதமானது. மாணவர்களின் ஆற்றல்களில், வெற்றிகளில் புன்னகையில் நாம் கவலைகளை மறக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி அதிபர் சவரி பூலோகராஜா, கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களான தவபாலன் புஸ்பராஜா மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிளிநொச்சி மாவட்டத் தமிழர்சுக் கட்சியின் இளைஞர் செயற்பாட்டு அணியின் செயலாளர் சர்வானந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-18)



கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குகிறார்


## பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மூன்றுபாடசாலைகளுக்கு யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தால் தளபாடங்கள் வழங்கப்பட்டன. ஈசுவரன் வித்தியாலயத்துக்கு 50, ஆறுமுகம் வித்தியாலயத்துக்கு 20, இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 20 என்ற அடிப்படையில் கடந்த 13 ஆம் திகதி இந்தத் தளபாடங்கள் வழங்கப்பட்டன. (க-500)

# சிங்கள குடியேற்றம் கிழக்கில் அதிகரிப்பு

## தமிழர் நிலத்தைப் பாதுகாப்பதில் பிரச்சினை என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மட்டக்களப்பு,பெப்.20
கிழக்கு மாகாணத்தில் அரசு திட்டமிட்ட முறையில் நாளுக்கு நாள் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டுவருகிறது.
பல தசாப்த காலப் போராட்ட வரலாற்றில் தமிழர்களிடையே மீதமாக எஞ்சியிருப்பது கல்வி மாத்திரமே.
இவ்வாறான கல்வியைச் சீரிய ஒழுக்கத்துடன் கூடிய கல்வியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.
பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வன்மைப்போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கல்வியைத் தொடர்ந்து கற்றுக்கொண்டு இருப்பதன்மூலமே நவீன காலத்துக்கு ஏற்றாற் போல் எங்களை நாங்கள் தயார் படுத்திக்கொள்ளாம். அப்போது தான் சமூகத்தில் பிறர் மதிக்கத்தக்க வகையில் வாழலாம்.
கல்வியைக் கற்கும்போது நல் ஒழுக்கத்துடன் கூடிய கல்வியாக இருந்தால்தான் அந்தக் கல்வியால் பயன் கிடைக்கும். மாறாக ஒழுக்கமில்லாத கல்வியாக இருந்தால் கற்றதனால் ஒரு பயனும் கிடைக்காமல் போய்விடும்.
தமிழர்களாகிய நாங்கள் அரசியல் விழிப்புணர்வுள்ள கல்வியைக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் எமது எதிர்காலத்தைச் சிறந்ததாக மாற்றமுடியும். இதனை பின்பற்றாமல் விடுவோமாக இருந்தால் எமது நிலங்கள், இருப்புக்கள் என்பன இல்லாமல்போகும்நிலை உருவாகும்.
தற்போதைய காலகட்டத்தில் எமது நிலங்களைப் பாதுகாத்துக் கொள்வதில் பல இன்னல்களை அனுபவித்துக்கொண்டு வருவதனை நாளாந்தம் காண்கின்றோம்.
மட்டக்களப்பு மாவட்டத்திலே கெவுளியாமடு பிரதேசத்தில் அரசால் நன்கு திட்டமிட்ட முறையில் நாளுக்கு நாள் சிங்களக் குடியேற்றங்கள்தொடர்ந்துகொண்டே செல்கின்றன.-என்றார். (ச-31)



*பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வன்மைப்போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

## பாடசாலை நேரத்தில் போட்டி நடத்தத் தடை

### சுற்றறிக்கையை அனுப்பினார் நிஸாம்

மட்டக்களப்பு,பெப்.20
பாடசாலை நேரத்தில் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்று கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.
கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் நடத்தப்படும் சகல போட்டிகளும் கலை நிகழ்வுகளும் விடுமுறை தினங்களில் இடம்பெறவேண்டும் என்று கிழக்கு மாகாணக் கல்வித்திணைக் களம் தெரிவித்துள்ளது.
இந்தத் தகவலை கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.ரி.ஏ. நிஸாம் தெரியப்படுத்தியுள்ளார்.
இந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
இனிவரும் காலங்களில் தங்கள் பாடசாலையில் நடத்தப்படும் சகல நிகழ்வுகளும் பாடசாலை நேரத்தில் நடத்தப்படுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
போட்டிகள், விழாக்களால் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் இடையூறு எற்படக்கூடாது. அதனையடுத்தே பொது விடுமுறை தினங்கள், சனி, ஞாயிறு நாள்களில் போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)



*கிழக்கு கல்விப் பணிப்பாளர்*

## கிடைத்தது கற்றல் உபகரணம்

மூதூர் தெற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தாய், தந்தையை இழந்த மாணவர்கள் 31பேருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தின் தலைவர் இ.பாஸ்கரன் குருக்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
ஒவ்வொரு பிள்ளைக்கும் மூவாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ச-40)

## சந்தேகத்தில் தபாலதிபர் கைது

மட்டக்களப்பு,பெப்.20
மட்டக்களப்பு,பெரியகல்லாறு தபாலகத்தில் காணாமல்போன நிதி சம்பந்தமாக அதே தபாலகத்தின் தபாலதிபர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த இரு வாரங்களுக்கு முன்பு மட்டக்களப்பு-பெரிய கல்லாறு தபாலகத்தில் வைக்கப் பட்டிருந்த நிதி காணமற்போன சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணையை அடுத்தே சந்தேகத்தின் பேரில் தபாலதிபரின் கைது இடம்பெற்றுள்ளது.



*கோப்புப்படம்*

கைது செய்யப்பட்ட தபாலதிபரைக் களுவாஞ்சிக்குடி நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப் படுத்திய போது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
காணாமற்போன பணம் குறித்து களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



தோப்பூர் இக்பால் நகர மீள் குடியேற்றக் கிராமத்துக்குள் நுழைந்த 3 காட்டு யானைகள் குடிசையொன்றின் கூரையை உடைத்து பொருள்களுக்குச் சேதம் விளைவித்துள்ளன. (ச-40)

## ராணுவத்தில் இணையுமாறு கேட்டு துண்டுப் பிரசுரங்கள்

### மட்டக்களப்பு வீதிகளில்

ஏறாவூர்,பெப்.20
இலங்கை இராணுவத்தில் பயிலுநர் பெண் படையணியில் யுவதிகளை இணைந்து கொள்ளுமாறு கோரி இராணுவம் மட்டக்களப்பில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளது.
இராணுவத்தில் சேர்ந்து கொள்ளும் யுவதிகளுக்குப் பலநன்மைகள் கிடைப்பதாக இராணுவத்தினர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை இராணுவத்தில் 15 வருட சேவை முடிவுற்றதும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்றும் துண்டுப் பிரசுரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.
தமிழில் அச்சடித்த இந்தத் துண்டுப் பிரசுரங்களை படையினர் வீதிகளில் வீசி வருகின்றனர். (ச)




*மட்டக்களப்பு வீதிகளில் படையினரால் வீசப்பட்ட துண்டுப்பிரசுரம்*

## காட்டு யானை பிரச்சினைக்கு கிடைத்தன உடனடி தீர்வுகள்

### கூட்டமைப்பின் கோரிக்கைகள் ஏற்பு

காட்டு யானைகளின் பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் திங்கட்கிழமை உடனடி தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று வன ஜீவராசிகள் அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்ஸா தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஒன்றிணைந்து ஒரே அமர்வில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி இடம்பெற்று வரும் காட்டு யானைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முதலாவது கூட்டம் திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.
மாவட்ட அரச அதிபர் திருமதி. பி. எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் வன ஜீவராசிகள் அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்ஸா, மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் , கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்தக்கூட்டத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு முன் வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு உடனடித் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் கூறினார். (ச)



*யானையின் தாக்குதலால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன், வன ஜீவராசிகள் அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்ஸா, மாவட்ட அரச அதிபர் திருமதி பி. எஸ். எம். சாள்ஸ் , மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

# தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றனர் வேட்பாளர்

## இதுவரை 216 முறைப்பாடுகள்

கொழும்பு,பெப்.20
வேட்பாளர்கள் பகிரங்கமாகவே தேர்தல் விதிகளை மீறுகின்றனர் என்று தேர்தல் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.
தேர்தல் தொடர்பில் 216 முறைப்பாடுகள் இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இந்தக்குழு கூறியுள்ளது.
இதில் 211 சம்பவங்கள் தேர்தல் விதி மீறல்கள். ஏனையவை தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் என்று கூறப்பட்டுள்ளது.
மேல் மாகாணத்தில் 142 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தேர்தல் கண்காணிப்புக்குழு கூறியுள்ளது.
சட்டவிரோதமான முறையில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தேர்தல் கண்காணிப்புக்குழு குறிப்பிட்டுள்ளது.
அரச சொத்துக்கள் சட்டவிரோதமான முறையில் தேர்தல் பரப்புரை பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று தேர்தல் கண்காணிப்புக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. (ச)

# அப்பாவி மக்களை வதைக்கிறது அரசு

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.20
சூதாட்டத்தில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் அரசு, மஞ்சள் கடவையில் பாதையைக் கடக்காத அப்பாவிப் பொதுமகனை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கின்றது என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.


சரத் பொன்சேகா

மாஹறகொல பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திருட்டு அரசியல்வாதிகளினால் போர் வெற்றி ஈட்டப்படவில்லை. ஆயிரக்கணக்கான படையினராலே போர் வென்றெடுக்கப்பட்டது.
2009 ஆம் ஆண்டின் முதல் நான்கரை மாதங்களிலேயே உச்சக்கட்ட போர் இடம்பெற்றது.
அந்தக் காலத்தில் போர் நிறுத்தமொன்றை நடைமுறைப்படுத்துமாறு ஆட்சியாளர் கோரினார். ஐரோப்பாவின் அழுத்தங்கள் காரணமாக இவ்வாறு கோரினார்.
இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் விடுதலைப் புலிகளின் தலைவர் தப்பிச் சென்றிருப்பார். போர் நிறுத்த யோசனையை நான் நிராகரித்தேன். ஆட்சியாளரின் அழுத்தத்தால் எமது முன்னகர்வுகளில் பாதிப்பு ஏற்பட்டது.
புலிகள் மீளவும் பலமடைய ஆரம்பித்திருந்த காலமது. எனினும், அனைத்துப் படையினரின் அர்ப்பணிப்பால் போரை வெற்றிகொள்ள முடிந்தது.
மக்கள் அன்றாடம் மூன்று வேளை உணவு உட்கொள்ள முடியாது அவதியுறும் நிலையில் அரசு ஆசியாவின் ஆச்சரியம் பற்றி பேசுகின்றது.
நாட்டில் எரிபொருள் வளம் காணப்படுவதாக ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றியுள்ளனர்.
சூதாட்டத்தில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் அரசு, மஞ்சள் கடவையில் பாதையைக் கடக்காத அப்பாவி பொதுமகனை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கின்றது-என்றார். (ச)



கொழும்பு மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் மஹிந்த ஹகந்தகமவின் கட்சி அலுவலகம் செவ்வாய்க்கிழமை கொம்பனித் தெருவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷவால் திறந்து வைக்கப்பட்டது. (ச)

# ஐக்கிய தேசிய கட்சி பரப்புரையில் கலந்து கொள்ளப் போவதில்லை

## அஸாத் சாலி தெரிவிப்பு

கொழும்பு,பெப்.20
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க.வினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மேடைப் பரப்புரைகளிலும் கலந்து கொள்வதில்லை என்று மத்திய மாகாண ஐ. தே. க. உறுப்பினர் அஸாத் சாலி தெரிவித்தார்.


அஸாத் சாலி

இந்த மாகாண சபைத் தேர்தலின் மூலம் ஐ.தே.கவுக்கு மக்கள் நல்லதொரு பாடமொன்றை புகட்டுவர் என்று அவர் கூறினார்.
மத்திய மாகாண சபையின் கூட்டம் முடிவடைந்த பின்னர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐ.தே.க.வின் திட்டமிடப்படாத சீரற்ற கட்டமைப்புகளின் காரணமாகத் தொடர்ச்சியாக பலவீனங்கள் இடம்பெற்று வருவது யாவரும் அறிந்த உண்மை.
அதுபோன்றுதான் கொழும்பு, கம்பஹா, களுத்துறை போன்ற மாவட்டங்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை குறைத்தது மட்டுமல்லாது கடந்த தேர்தல் காலங்களில் தொடர்ச்சியாகத் தோல்விகளை அனுபவித்து வருபவர்களுக்கு அந்தக் கட்சி மீண்டும் சந்தர்ப்பம் அளித்து வருகின்றது.
எனவே ஐ. தே. கட்சியிலிருந்து யாரும் ஜனாதிபதியாக வர வேண்டுமென்றோ அல்லது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற எந்தப் பொறுப்புணர்ச்சியுமில்லை என்பது கட்சியின் செயற்பாட்டில் தெளிவு பெற வேண்டியுள்ளது.
எனவே நான் ஐ. தே. க. வில் இணைந்திருந்தாலும் கட்சி விடும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதிலிருந்து தயங்கமாட்டேன் -என்றார். (ச-10)

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
**Media Resources and Training Centre, University of Jaffna**
(இதழியல் டிப்ளோமா (முழுநேரம் - இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு - 2014/2015
**Diploma in Journalism – 2014/2015**

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சிநெறிக்கான 2014/2015ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக் காக தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணபங்கள் ஏற்றுக் கொள்ளப் படவுள்ளன.

**விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியும் (Yes) பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

- அச்சு ஊடகம் (Print Media)
- இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
- இணைய ஊடகம் (New Media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
- றேடியோ மற்றும் ரீ.வி நிகழ்ச்சிகள் தயாரித்தல்
- ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
- ஆவணப்படத் தயாரிப்பு
- சென்னைப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த பயிற்சிகள்

**அனுமதிக்கான தெரிவுமுறை**

- எழுத்துத் தேர்வும்
  (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)
- நேர்முகத்தேர்வும்

**கற்கை நெறிக் காலம் 2 ஆண்டுகள் (முழுநேரம்)**

கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கற்கை நெறிக் கட்டணம் | ரூபா | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா | 1,000.00 |
| மொத்தம் | ரூபா | 22,500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல 84, ஜூம்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூ100.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 03.03.2014**

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல 0212229873

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**

(க/12094)(7.6.3)

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்திய நீதிமன்றத் தீர்ப்பும் தமிழக அரசின் தீர்மானமும்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்ட னையை ரத்துச் செய்து ஆயுள் தண்டனையாகக் குறைத்து இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பும் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அமைச்ச ரவை இவர்கள் மூவர் உட்பட நளினி, ஜெயக்குமார், ரவிச்சந் திரன், ரொபர்ட் பயஸ் ஆகிய எழுவரையும் விடுதலை செய்யும் படி நேற்று அதிரடியாகத் தீர்மானம் நிறைவேற்றி தமிழக சட்டப் பேரவைக்கு அறிவித்திருப்பதும் இந்தியாவின் நீதித்துறை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது.

உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டியது என்கிறார் ம.தி.மு.க. தலைவர் வைகோ. உலகெங்கும் வாழும் தமிழர்கள் நெஞ்சில் நிம் மதியையும் ஆறுதலையும் தந்துள்ள மகத்தான தீர்ப்பு இது. மரண தண்டனையை ஒழிக்கவேண்டும் என்று உலகம் முழுவதும் எதிரொலிக்கும் குரலுக்கு இந்தத் தீர்ப்பு வலுச்சேர்த்துள்ளது என்றும் வைகோ தெரிவித்துள்ளார்.

மரண தண்டனையை ரத்துச் செய்து அதனை ஆயுள் தண்டனையாகக் குறைத்த உச்ச நீதிமன்றம், குற்றவியல் சட்டக்கோவை 432 மற்றும் 433இன் பிரகாரம் சட்டத்தின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், மாநில அரசு தனக்கிருக்கும் மன்னிப்பு அளித்தல் அல்லது தண்டனைக் குறைப்பு அல்லது தண்டனைத் தவிர்ப்பு அதிகாரத்தைப் பயன்படுத்த முடியுமென்றும் தீர்ப்பளித்துள்ளது.

இதன் பிரகாரமே நேற்று தமிழக அமைச்சரவை கூடித் தீர்மானம் நிறைவேற்றியது. இது தொடர்பாக மத்திய அரசு மூன்று நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்காவிடில் தமிழக அரசே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்யும் என்று ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். அதனால் எழுவரும் விடுதலை செய்யப்படலாம் என்று நம்பப்படுகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவரான பேரறிவாள னின் வாக்குமூலத்தை மாற்றிப் பதிவுசெய்ததாக, முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். இந்த வழக்கின் முதல் திருப்புமுனையாக அதுவே அமைந்தது. இப்பொழுது இரண்டாவது திருப்புமுனையாக மரணதண்டனை ரத்தும் அனைவரையும் விடுதலை செய்வதற்கான தமிழ்நாட்டு அரசின் பரிந்துரையும் கருதப்படுகின்றன.

. அதன் தொடரியான 1991 மே 21ஆம் திகதி தமிழ்நாட்டுக்கு தேர்தல் பிரசாரத்துக்காக வந்திருந்தபோது ஸ்ரீபெரும் புதூரில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றத்தில் சிறப்புப் புலனாய்வுக் குழு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. 41 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ச.பொட்டு அம்மான் உள்ளிட்டோர் தலைமறைவுக் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். தணு, சிவராசன், சுபா உள்ளிட்ட 12 பேர் நீதி மன்ற விசாரணைக்கு முன்பாக உயிரிழந்துவிட்டனர்.

மீதமிருந்த 26 பேருக்கும் 1998இல் பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. பின்பு முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு மட்டும் மரணதண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்றம் ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய மூன்று பேரின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து ஏனைய 19 பேரையும் விடுதலை செய்தது. 2000ஆம் ஆண் டில் நளினியின் மரண தண்டனை கருணை மனுவின் அடிப் படையில் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.


உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளியான மறுதினமே தமிழக அமைச்சரவை கூடி எடுத்த நடவடிக்கை மெத்தவும் குறிப்பிடத் தக்கது, பாராட்டத்தக்கது.

தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் கடந்த 23 வருடங்களாக நடத்திய போராட்டத்தின் பயனாகவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் தமிழக அமைச்சரவைத் தீர்மானமும் எனக் கொள்ளலாம்.

இவர்களுக்குக் கிடைத்துள்ள வெற்றி இலங்கையின் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் வழிகாட்டலாக அமை யக் கூடாதா? அது குறித்துப் பரிசீலனை செய்யப்படுமா என்ற வினாவே தொக்கி நின்று எழுகிறது.

# வேண்டும் ஊடக சுதந்திரம்

சேரலாதன்





**ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் காரணமாக பல நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆட்சியாளர்கள் பலர் தமது பதவிகளை இழந்துள்ளனர். இதனால் ஊடகங்களுக்கு அஞ்சும் நிலையும் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே உலகின் பல நாடுகளிலும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஆட்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் ஊடகங்களை வைத்திருப்பதற்கு விரும்பிச் செயற்பட்டு வருகின்றார்கள்.**

ஜனநாயக நாடொன்றின் உயிர் மூச்சாக ஊடகங்களே விளங்குகின்றன. ஆட்சியாளர்களின் தவறுகளை ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணரும் போதுதான் ஜன நாயகம் பிசகின்றி நிலைநிறுத்தப்பட முடியும். இதைவிடுத்து அதிகாரத்தில் உள்ளவர்களின் ஊது குழல்களாக ஊடகங்கள் மாறும்போது ஜனநாயகம் அழிக்கப்படுவதோடு மக்களும் ஏமாற் றப்படுகின்றனர்.

நேர்மையாகவும், உண்மைத் தன் மையுடனும் நடந்து கொள்ளும் எந்த அரசும் தமது நாட்டில் உள்ள ஊடகங் களின் சுதந்திரத்தில் தலையிடவேண் டிய அவசியமே இருக்காது. இதே வேளை பக்கச் சார்பின்றிச் செய்திகளை வெளியிட வேண்டிய முக்கிய பொறுப் புக்களும் ஊடகங்களுக்கு உண்டு.

ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் காரணமாகப் பல நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆட்சியா ளர்கள் பலர் தமது பதவிகளை இழந் துள்ளனர். இதனால் ஊடகங்களுக்கு அஞ்சும் நிலையும் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே உலகின் பல நாடுகளிலும் ஆட்சிப் பொறுப்பில் இருக் கும் ஆட்சியாளர்கள் தமது கட்டுப் பாட்டுக்குள் ஊடகங்களை வைத்திருப் பதற்கு விரும்பிச் செயற்பட்டு வரு கின்றார்கள். தமக்குச் சார்பான செய் திகளை வெளியிடாத ஊடகங்களை முடக்கி வைக்கும் நடவடிக்கைகளிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். அந்த ஊடகங்களில் பணியாற்றும் ஊட கவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின் றனர். சில வேளைகளில் கொல்லப் பட்டும் விடுகின்றனர். சிலர் விலை பேசப்படுகின்றனர். இதற்கு இணங் கியவர்கள் பணிந்து நிற்கின்றனர்.

இன்றைய நவீன உலகிலே ஊடகங் களின் பங்கு அளப்பரியது. உலகின் எந்த மூலையிலும் நடக்கும் சம்பவ மொன்று ஒரு சில விநாடிகளில் உலகெங்கும் செய்தியாகப் பரவிவிடும் அதிசயம் இன்று நிகழ்ந்து கொண் டிருக்கின்றது. இதற்கான தொழில்நுட்ப வசதிகள் அபரிமிதமாகக் காணப்படு கின்றன. ஆனால் இன்றும் கூட ஊடக சுதந்திரம் முடக்கப்பட்ட நிலை பல நாடுகளில் காணப்படுகின்றமைதான் வேதனை தருகின்றது.

ஊடகங்களைப் பொறுத்த வரையில் பத்திரிகைகளே இன்றும் கூட முதன்மை நிலையில் உள்ளன. வாசிக்கத் தெரிந் தவர்கள் மட்டுமே பத்திரிகைகளைப் பயன்படுத்த முடியும் என்ற நிலை உள்ள போதிலும் உலகின் பெரும் பாலான மக்கள் பத்திரிகைகளையே நாடுகின்றனர். தொலைக்காட்சி மற் றும் வானொலியில் செய்திகளைப் பார்த்தும் கேட்டும் தெரிந்து கொள் வதைவிட பத்திரிகையில் வாசித்து அறிந்து கொள்வதில் மக்களிடையே உள்ள ஆர்வம் குறைந்துவிடவில்லை என்றே கூற வேண்டும்.

பத்திரிகையில் தம்மைப் பற்றிய செய்தியொன்று வெளிவரும்போது மகிழ்ச்சி அடையாதவர்கள் எவரும் இருக்க முடியாது. அதைப்போன்று தம்மைப்பற்றி தவறான செய்திகள் வெளிவரும் போது கூனிக்குறுகி நிற்பவர்களும் உண்டு.

ஆனால் அரசியல் என்னும் சகதிக்குள் பெரும்பாலான ஊடகங்கள் சிக்கிச் சீரழிவதைப் பார்க்கும்போதுதான் இரத்தக் கண்ணீர் வடிக்கத் தோன் றுகின்றது. அரசியலில் நிகழும் சீர்கேடு களைக் களைய வேண்டிய பொறுப் பிலிருந்து இவை நடந்து கொள்வ தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது நாட்டிலே கொடிய போர் ஒன்று இடம்பெற்று ஓய்ந்து விட்டதாகப் பலரும் கூறுகின்றார்கள். ஆனால் அதனால் ஏற்பட்ட கொடிய விளைவுகள் நீண்ட தாமதத்தின் பின்னரே தெரிய வந்தன. இதில் ஊடகங்களின் பங்கு அளப் பரியது. இவை இல்லாது விட்டால் எல்லாமே மறைக்கப்பட்டிருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை. எமது நாட்டைப் பொறுத்த வரையில் ஊடகவியலாளர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். பலர் காணாமற் போயுள்ளனர். ஊடகங்கள் இயங்கி வரும் அலுவலகங்கள், சாதனங்கள் தாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டதுடன் அங்கு பணிபுரிபவர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இத்தகைய செயல்கள் இடம்பெறும் நாடொன்றில் ஊடக சுதந்திரத்தைப் பற்றிக் கதைப்பதில் பயனெதுவும் இல்லை.

அரசியல் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால்செய்திகளில் உண்மைத்தன்மை பேணப்பட வேண்டும். இதைத்தான் வாசகர்களும் விரும்புகின்றனர்.

ஆசிய, ஆபிரிக்க மற்றும் கம்யூனிச சித் தாந்தங்களைக் கடைப்பிடிக்கும் நாடு களுடன் ஒப்பிடும்போது மேற்குலக நாடுகளில் ஊடகங்களைப் பொறுத்த வரை நிலைமை சற்று உயர்ந்த நிலை யில் உள்ளதைக் காண முடிகின்றது. சில நாடுகளின் தமது ஆட்சித் தலைகள் கூறுவதைவிட ஊடகங்களில் வெளி வரும் செய்திகளை நம்பும் மக்கள் அதிகளவில் உள்ளதையும் காணமுடி கின்றது. முன்னாள் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் தமது அலுவலகத்தில் பணிபுரிந்த மோனிக்கா என்ற பெண் ணுடன் தாம் கொண்டிருந்த உறவை மறுத்த போதிலும் ஊடகங்களில் அது தொடர்பாக ஆதாரத்துடன் செய்திகள் வந்தபோது வாயடைத்துப்போய் பகி ரங்கமாக மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நாட்டு ஊடகங்கள் நாட்டின் ஜனாதி பதியே தவறு செய்துவிட்டால் இதனை மறைத்தால் என்ன என்று எண்ண வில்லை. மாறாக பாரபட்சமின்றி மக் களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தின. அமெரிக் காவில் இன்றளவும் ஜனநாயகம் தழைத்து நிற்பதற்கு ஊடகங்களின் இந்த உண் மைத் தன்மையே பேருதவி புரிகின்றன. பிரிட்டிஸ் பத்திரிகைகளும் சளைத்தவை அல்ல. பிரதமர் தொடக்கம் அரச குடும் பம் வரை பாரபட்சமில்லாத செய்தி களையே அவை வழங்கி வருகின்றன.

இவற்றையெல்லாம் கேட்கும்போது நாம் எத்தகைய தாழ்ந்த நிலையில் உள்ளோம் என்பது தெளிவாகத் தெரி கின்றது.

ஜனநாயகம், மக்கள் ஆட்சி என்றெல் லாம் கூறுவதை விடுத்து பத்திரிகை யைச் சுதந்திரமாக இயக்குவதற்கு வழிவிட்டு ஒதுங்கினாலே அதுவே பெரிய காரியமாக இருக்கும்.

எந்த நாட்டில் ஊடகங்களின் குரல் வளையில் கைவைக்கப்படாத நிலை காணப்படுகின்றதோ அங்குதான் உண் மையான ஜனநாயகமும், மக்கள் ஆட்சியும் நிலை நிறுத்தப்படுகின்றது.

அதைவிடுத்து அவற்றின் குரலை அடக்கி வைத்துக் கொண்டு வேஷம் போட்டு வார்த்தைகளை உதிர்ப்பதில் அர்த்தமே இல்லை.

ஊடகங்கள் சுதந்திரமாக செயற்பட வேண் டும். ஊடகவியலாளர்கள் அச்ச மின்றிப் பணிபுரிய வேண்டும். இவையே மக் களின் ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் விருப்பங்கள் என்று கூறுவதில் தவ றொன்றும் இல்லை.



● அ.நிரூபா

# காந்தியடிகள் காட்டிய முன்பள்ளிச் சிந்தனைகள்

உலகம் உய்ய வந்த மகான்களுள் கால ஓட்டத்தால் அழியாததும் எக்காலத்துக்கும் பொருந்தத் தக்கதும், முன்னேறத் துடிக்கும் மக்களுக்கு ஊக்கம் தருவதுமான சிந்தனைகளை முன் வைத்தவர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர் காந்தியடிகள்.

இவரது சிந்தனையால் உருவான கல்விக் கருத்துக்கள் ஆதாரக் கல்வி என்றும் இதில் பாலர் கல்வி தொடர்பான கருத்துகள் பூர்வாதாரக் கல்வி என்றும் அழைக்கப்பட்டது.

இன்றைய நிலையில் கல்வி எனும் பெருங் கோபுரத்துக்கு அடித்தளமாக அமைவது முன்பள்ளிக் கல்விதான் என்பதை உணர்ந்த பலரும் தற்போது முன்பள்ளிக் கல்வி மீது அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

**ஆதாரக் கல்வி**

1937 ஆம் ஆண்டு வர்தா நகரத்தில், மார்வாரிக் கல்விச் சங்கமானது தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அந்தச் சமயம் அந்தச் சங்கம் அகில இந்தியக் கல்வி மாநாடு ஒன்றையும் கூட்டியது.

அந்த மாநாட்டில் காந்தியின் கல்வியியற் கருத்துக்கள் அலசி ஆராயப்பட்டு ஆதாரக் கல்வி எனும் கல்வி முறையாக ஏற்கப்பட்டது.

காந்தியடிகளின் கருத்துப்படி ஆதாரக் கல்வியானது குழந்தை பிறந்தது முதல் சாவு வரை பயிலவேண்டிய கல்வியாகும். மனித வாழ்க்கையில் பல பருவங்கள் இருப்பது போல கல்வியிலும் பல பருவங்கள் இருப்பதாக இவர் கூறுகிறார்.

இவை முறையே பூர்வாதாரக் கல்வி, ஆதாரக் கல்வி, பின் ஆதாரக் கல்வி, வயது வந்தோர் கல்வி என நான்கு வகைகளில் அமைவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**பூர்வாதாரக் கல்வி**

பூர்வாதாரக் கல்வி என்பது குழந்தை பிறந்ததில் இருந்து ஏழு வயதாகும் வரைக்கும் அந்தப் பிள்ளைக்கு அமைய வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் அமையச்செய்தல், சுகாதார வாழ்க்கை, தன்னம்பிக்கை, பெரியோரிடத்தும் பிறரிடத்தும் மரியாதையுடன் பழகுதல், எதிர்காலத்தில் தொடர்ந்து கற்கும் திறனை வளர்த்தல், சமூகப் பயிற்சியை ஏற்படுத்துதல், உடல்சார் திறன்களை மெருகூட்டல் போன்றவற்றினூடாக எல்லாத்துறைகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதன் ஊடாக ஒரு சிறந்த சமுதாய உருவாக்கத்தில் வேறாக இருப்பதாக இது அமையும். இலங்கையைப் பொறுத்தவரை முன்பள்ளிக் கல்வியானது பொதுவாகஇன்று இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையே பின்பற்றப்பட்டுவருவதும் நோக்கத் தக்கதாகும்.


**பூர்வாதாரக் கல்வியும் முதியோர் கல்வியும்**

பாலர் கல்வியும் வயது வந்தோர் கல்வியும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாக காந்தியடிகள் கருதினார். குழந்தையின் வீட்டு வாழ்க்கை கல்விக்கு முக்கியம். ஆதலால் குழந்தை வளர்ப்பில் பராமரிப்பு மற்றும் கல்விப் போதனை என்பவற்றில் பெற்றோருக்கு அறிவு வழங்கும் வகையில் முதியோர் கல்வி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை காந்தியடிகள் விளக்கியுமிருந்தார். இன்றைய பிள்ளை முன்பருவக் கல்வியில் கூட பெற்றோர் பிள்ளையின் கல்வி தொடர்பான அடிப்படைகளை அறிந்திருப்பது பிள்ளையின் கல்விக்கு ஊன்றுகோலாக அமையுமல்லவா!

**பூர்வாதார பாடசாலையின் அமைப்பு**

ஆதாரக் கல்வி நடைபெறும் பாடசாலையுடன் இணைந்து இந்தப் பாடசாலை அமைதல் சிறந்ததாகும். திறந்த இடத்தில், நல்ல காற்றோட்டம் வசதியுள்ளதாக நிழல்தரும் மரங்களால் அணி செய்யப்பட்டதாகப் பாடசாலை இருத்தல் வேண்டும். ஊரின் நடுவே பாடசாலையிருப்பதோடு இடம் எளிமையானதாகவும் குழந்தையின் கற்பனைத் திறனுக்கு தீனி போடக் கூடியதாகவும் அமைய வேண்டுமென காந்தியடிகள் அன்று கூறினார். இன்று இந்தச் சூழல் அமைவுகளைப் பின்பற்றி முன்பள்ளிகள் அமைக்கப்படுதல் சிறப்பாக அமையத்தக்கதாகும்.





காந்தியின் கல்வியியற் கருத்துக்கள் அலசி ஆராயப்பட்டு ஆதாரக் கல்வி எனும் கல்வி முறையாக ஏற்கப்பட்டது.

**பாடசாலை நிர்வாகம்**

தகுதி வாய்ந்த கிராமத்தவர் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாடசாலையை நடத்தலாமென்றும், பாடசாலை வாழ்க்கையானது ஏறத்தாழ குடும்ப வாழ்க்கைபோல இருக்க வேண்டுமெனவும் குறிப்பிடுவதோடு ஓர் ஆசிரியரின் பொறுப்பில் இருபது வரையான குழந்தைகள் இருக்கலாமெனவும் குழந்தை களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இவை உள்ளூர் நிலைமைகளிலேயே செய்து கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்றும் கூறுகிறார்.

பாடசாலைகளில் ஒரு வேளை உணவை அளிக்க முயற்சிக்க வேண்டுமென்றும் பால் தருவது முக்கியமென்றும், பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பேண ஒரு வைத்தியர் அவ்வப்போது கவனித்தல் அவசியமெனவும் குறிப்பிடுகிறார். பாடசாலைகளின் சமூக வேலைகள் அனைத்தையும் ஆசிரியரும் பிள்ளைகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் இவர் கூறுகிறார்.

எமது கிராமப் புற முன்பள்ளிகளில் இந்த முறைகளைக் கருத்தில் கொண்டு செயற்பட்டால் நிறைவான பயனைத் தருமல்லவா.

**பூர்வாதாரக் கல்விப் பாடத்திட்டம்**

பூர்வாதாரக் கல்விப் பாடத்திட்டத்திலே தாய்மொழிப் போதனை, கணித அறிவு, விஞ்ஞான அறிவு, சுய முயற்சி ஊக்கல், சமூகப் பயிற்சி, உழைப்பின் மேன்மை, உடல்வளர்ச்சி, நோயில் பாதுகாப்பு, சுகாதாரம், சித்திரம், சங்கீதம், பிராணி வளர்ப்பு, விளையாட்டு, ஆன்மவளர்ச்சி போன்ற 14 விடயங்களில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக இது அமையும்.

தாய்மொழிப் போதனையோடு தெளிவான உச்சரிப்பு, எண்ணத்தை தெளிவாக வெளியிடும் திறன், சொல்வளப் பெருக்கம் என்பன அமைதல் வேண்டுமென்றும் இதற்கு கருவியாக பாட்டு, கதை, நாடகம் என்பவற்றைப் பயன்படுத்தலாம் என்றும் எழுத்தும், வாசிப்பும் இந்தப் பருவத்துக்கு தேவையற்றது எனவும் இவர் கூறுகிறார்.

கணித அறிவு தொடர்பான எண்ணறிவு, சாதாரண மனக் கணக்கு, வட்டம், சதுரம் போன்ற வடிவங்களின் வேறுபாடு, தூரம், நிறை, கனவளவு போன்றன பற்றிய பொதுவான உணர்ச்சி போதுமானது. கணித பாடம் தனியாகக் கற்பிக்கத் தேவையும் இல்லையாகும்.

விஞ்ஞான அறிவைப் பொறுத்த வரையில் சூழ்நிலையைக் கூர்ந்து நோக்கியறிதல், சில எளிய சோதிப்புகள் மூலம் பொருள்களை இனங்காணல் ஆகிய பண்புகளை வளர்ப்பதாகவும் இது இருத்தல் வேண்டும்.

பல் துலக்கல், தலைவாருதல், துணி துவைத்தல், குளித்தல், ஆடை அணிதல் போன்றவற்றை தன் சுய முயற்சியால் மேற்கொள்ளத் தூண்டும் வகையானதாகவும் சுயசார்புக் கல்வியும் இங்கு பயிலப்படல் வேண்டுமெனவும் கருதப்படுகிறது.

பகிர்ந்துண்ணல், விளையாட்டு, தன்னையொத்த வயதினரோடும், பெரியவர்களோடும் பழகுதல் போன்ற திறன்களை வளர்க்கும் சமூகப் பயிற்சியும் அமைதல் வேண்டும்.

குழந்தையின் கல்வி வளர்ச்சிக்குத் துணை புரிபவை, குழந்தை சந்தோசமாகச் செய்யும் வேலைகளாகும். சமையல், துப்புரவாக்கல் போன்ற வீட்டு வேலை, தோட்ட வேலை, நூல்நூற்றல், ஓலை முடிதல் போன்ற எளிமையான வேலைகளின் பால் பிள்ளைகள் ஆர்வமாக இருக்கும் வகையில் பாடத்திட்டம் வடிவமைத்து வழங்குதல் சிறப்பாக அமையும்.

அந்தக் காலத்தில் கிராமப் புறத்தில் பிராணி வளர்ப்பில் குடும்பத்தவர் ஈடுபடுவதுண்டு. இந்தப் பிராணி வளர்ப்பில் ஒத்தாசையாக இருக்கும் வகையிலும் பாடத்திட்டம் அமைந்திருத்தல் வேண்டுமெனவும் அந்தச் சூழலுக்கு அமைவாகக் காந்தியடிகள் கருதினார்.

தகுந்த போசணை நுகர்வு, ஏற்ற குடிதண்ணீர் பெறல், சுத்தம் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்துவதாகவும் பல்வேறு தொற்று நோய், தொற்றா நோய் பற்றி அறிவு அவசியமென்றும், ஆசிரியரானவர் இந்த நோய்களைத் தடுத்தல், வருமுன் காப்பு போன்றவற்றைப் பற்றியறிந்து இவற்றைக் கைக்கொள்பவராகவும் இருப்பதும் வேண்டப்படுகிறது.

பிள்ளையின் ஞாபகசக்தியையும் கூர்ந்து நோக்கும் திறனையும் அதிகரிக்கும் முகமாக மனம் போனபடி சித்திரம் வரைவதற்கும் மாணவருக்கு களம் அமைத்துக் கொடுத்தலும் சிறப்பாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பாடுதல் போன்ற சங்கீதத் திறன்களை முன்பள்ளிகளில் கைக்கொள்வதன் மூலம் பிள்ளைகளின் இன்பம் பெருகுகிறது இங்கு தாளக்கட்டு முக்கியமானது. இங்கு தாளத்தோடு பொருந்திய கும்மி, கோலாட்டம், நடிப்பு என்பவற்றையும் மேற்கொள்ளலாம்.

பிள்ளையின் கல்வியில் விளையாட்டு, வேலை என்பன இணையும் போது மாணவரின் ஆர்வம் பன்மடங்கு அதிகரிக்கிறது. சிறுபராயக் கல்வியில் விளையாட்டுக்களே அதிக முக்கிய இடம்பெறுவதாக அமைதல் கல்வியை மேலும் பயனுறுதி மிக்கதாகும்.

பிள்ளையிடம் அன்பு, பக்தி, மரியாதை, ஒழுங்கு, ஒத்துழைப்பு ஆகிய நற்பண்பு வளர்த்தெடுக்கப்படுவதற்கு பாடசாலையில் ஆன்மிகக் கல்வியும் இடம்பெற வேண்டுமென்பதும் எடுத்துக் கூறப்பட்டதொன் றாகும்.

இவற்றையெல்லாம் மனங்கொண்டு நோக்கும் போது காந்தியின் பூர்வாதாரக் கல்வி அணுகுமுறையின் காலத்திற்கேற்ற சிறந்த அம்சங்களைக் கருத்திற்கொண்டு இன்றைய முன்பள்ளிக் கல்வியினை மேலும் வலுப்படுத்தி இன்றைய சிறாரை சமூகத்துக்கு இயைபான நற்பிரஜையாக்க முயற்சிகள் பல மேற்கொள்வோமாக.

---

## வாடகைக்கு வீடு கொடுப்போர் அ.அட்டையை பார்வையிட்டால் தவறுகளை தவிர்க்கலாம்

வாசகர் திருமுகம்

அன்பார்ந்த உதயனே! என் உள்ளத்தில் உள்ள வேதனைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன். இதற்கு உயிர் கொடுத்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவாயா? சமூகத்தில் நடக்கும் சில தவறுகள் ஓரளவு திருந்துவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன்.

யாழ்.நகரப் பகுதியில் வாடகைக்கு அல்லது நண்பர்கள் மூலமோ வீடு கொடுக்கும் போது பங்கீட்டு அட்டை, அடையாள அட்டையைப் பார்ப்பதன் மூலம் சில தவறுகள் நடக்காமல் தடுக்கலாம். உதாரணமாக ஒருவர் சாவகச்சேரியில் திருமணம் செய்து மூன்று பிள்ளைகள், யாழ்ப்பாணத்தில் தொழில் செய்து கொண்டிருக்கின்றார். அங்கே ஒரு பெண்ணிடம் தான் திருமணம் செய்யவில்லையென்று அவருடன் பழகி பின்பு அந்தப் பெண்ணிடம் சாவகச்சேரியில் தனக்குக் குடும்பம் உள்ளது என்று தெரியப்படுத்தியிருந்தார். அந்தப் பெண்ணும் குடும்பம் உள்ளது என்று தெரிந்த பின்னும் கஸ்தூரியார் வீதியில் ஒரு வீடெடுத்து இருவரும் தங்கி உள்ளனர். இதற்கு என்ன காரணம்? அங்கு வீடு கொடுத்தவருக்கு இவருக்கு குடும்பம் ஒன்று இருப்பது தெரியாமல் போனது தான்.

இதேபோல் பெண்களோ, ஆண்களோ ஒரு நிறுவனத்திலோ அல்லது கடையிலோ என்ன தொழில் புரிவதென்றாலும் வெளியே செல்லும் பதிவேடு பதிதல், உள்ளே வரும் பதிவேடு பதிவு செய்தல் நல்லது. வேலை செய்யுமிடத்தில் வேலைக்குப் பெண்கள் போவதில்லையென்றால் பெற்றோரிடம் இருந்து அதற்கான காரணம் தெரிவிக்கும் கடிதம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். ஏனென்றால் எனது வாழ்க்கையில் வந்த (வில்லி) பெண் வேலைக்குப் போவதாகப் பெற்றோரிடம் சொல்லிவிட்டு எனது கணவருடன் நேரத்தைக் கழித்துள்ளார். பாவம் பெற்றோர்கள். அவர்களுக்கு மகளின் நடத்தை தெரியாது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வழிகளில் சமூகச் சீர்கேடுகள் நடக்கின்றன.

இவ்வளவு தூரம் மாறிய எனது கணவர் முன்பு தமிழ் மண்ணை நேசித்தவர், பண்பாடாய் வாழ்ந்தவர். அவரையே யாழ்ப்பாண நகரம் தற்போது தவறான பாதைக்கு அனுப்பி விட்டது. இனிவரும் இளம் சமுதாயம் தலை நிமிரவே முடியாதா? தமிழருக்கு விடிவு காலமே இல்லையா?

*திவ்வியா*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்கும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை உயரதிகாரிகள் பாராட்டுவார்கள்.



**இடபம்**: புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.



**மிதுனம்**: எதிர்ப்புகள் அடங்கும். நட்பு வட்டம் விரிவடையும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புதிய வேலை அமையும். வியாபாரத்தில் புதிய பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.



**கடகம்**: சொத்து வாங்குவது, விற்பது நல்ல விதத்தில் முடியும். உறவுகள் தேடி வருவார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.



**சிங்கம்**: திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**கன்னி**: கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது பதற்றமடைவீர்கள். நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் அதிருப்தி அடைவார்கள்.



**துலாம்**: குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்து போகும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். அசதி, சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள். எதிலும் முன்யோசனையுடன் செயற்படப்பாருங்கள்.



**விருச்சிகம்**: வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும். முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.



**தனுசு**: எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். உறவினர், நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். சபைகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைகளைத் தருவார்கள்.



**மகரம்**: எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.



**கும்பம்**: பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். மற்றவர்கள் விவகாரத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.



**மீனம்**: உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிலும் எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

## நாளை

**மாசி-09 வெள்ளிக்கிழமை | 21.02.2014**

திதி: ஷஷ்ஷ மு.ப.08.55 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.ப.08.18 வரை

சுபநேரம்: 06.31-08.01 வரை
இராகுகாலம்:.11.01-12.31 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## புற வழிபாடு

நீங்கள் எல்லோரும் விவிலிய நூலைப் படிப்பவர்கள். யூத வரலாறும் யூதக் கருத்துக்களும், மத குருமார்கள், (புரோகிதர்கள்) தீர்க்கதரிசிகள் என்ற இரண்டு வகை ஆசிரியர்களால் உருவாகியுள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். இவர்களில், மத குருமார்கள் பழைமையைப் பாதுகாக்கும் சக்தியின் பிரதிநிதிகளாகவும், தீர்க்கதரிசிகள் முன்னேற்றச் சக்தியின் பிரதிநிதிகளாகவும் விளங்குகிறார்கள். உண்மை என்னவெனில், சமய வாழ்வில் விவரிக்க இயலாத சடங்கு முறைகள் எப்படியோ நுழைந்து விடுகின்றன. ஒவ்வொன்றிலும் மரபு புகுந்து விடுகிறது. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மதத்திலும் இது உண்மைதான். இதன் பின்னர் புதுக் கருத்துக்களைக் கொண்ட புதுத் தீர்க்கதரிசிகள் சிலர் தோன்றுகிறார்கள். இவர்கள் புதுக் குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் பரப்புரை செய்கிறார்கள். சமூகத்துக்கு ஒரு புது உந்துதலை அளிக்கிறார்கள். சில சந்ததிகளுக்குப் பின்னர் இவர்களைப் பின்பற்றுபவர்கள் இவர்களுடைய கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்களாகி விடுகிறார்கள். இதனால், மற்ற எந்தக் கொள்கையையுமே அவர்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை. இந்தச் சகாப்தத்தில் , மிகுந்த முன்னேற்றமான பரந்த நோக்கம் கொண்ட பிரசாரகர் என்று கூறப்படுவோர், சில ஆண்டுகள் கழிந்த பின்னர், பழைமைப் போக்குடைய மதகுருமார்கள் ஆகிவிடுகிறார்கள். முன்னேற்றமான சிந்தனையாளர்கள் கூடத் தங்களைக் காட்டிலும் சற்று மிகுதியாக முற்போக்கான கருத்து உள்ளவர்களுக்கு முட்டுக்கட்டையிடுவார்கள். தாங்கள் அடைந்துள்ள நிலையைக் காட்டிலும், யாரும் முன்னேறிச் செல்வதை அவர்கள் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இருக்கும் நிலையிலேயே இருப்பதில் அவர்கள் திருப்தியடைகிறார்கள்.

# இளம் பெண்ணுக்கு தாடி, மீசை



*தாடி மீசையுடைய பெண் இவர்தான்.*

பிரிட்டனைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் ஆணாக மாற முடியாமலும், பெண்ணாக வாழ முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கிறார்.

பிரிட்டனின் பெர்க்ஷயர் நகரில் வசித்து வருபவர் கர்னாம் கவுர்(வயது 23). 11 வயதாக இருந்தபோது பாலிசிஸ்டிக் ஓவர் சின்ட்ரோம் என்ற நோய் தாக்கியதில் முகத்தில் முடி முளைக்கத் தொடங்கியது.

பாடசாலைக்குச் சென்றபோது சக மாணவிகள் கேலி செய்தனர், இதனால் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்த படியே படிக்கத் தொடங்கினார். முகம் மட்டுமின்றி பின்னர் கை, கால், மார்பு போன்ற உடலின் அனைத்து பகுதிகளிலும் முடி முளைத்ததால் பெரும் அவதிக்குள்ளானார். வாரத்துக்குஇருமுறைஷேவிங் செய்து முடிகளை அகற்றுவதிலேயே இவருக்கு பெரும் வேலையாக இருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் இவர் ஷேவிங் செய்வதை நிறுத்தி விட்டார்.

கடவுள் எனக்கு அளித்த வரம் இது, இதை எதற்காக எதிர்த்துப் போராட வேண்டும் என்று முடிவு செய்து சீக்கியர்கள் போல முடியை முழுவதும் வளர்க்கத் தொடங்கி விட்டார். அவருடைய பெற்றோர்களும், சகோதரரும் இவருடைய முடிவுக்கு ஆதரவு அளித்தனர். ஆனால் அவருக்கு இதுவரையில் ஆண் ஒருவரும் நண்பராகக் கிடைக்கவில்லை என்பது தான் இவருடைய ஒரே ஏக்கமாம்.

தானும் சராசரி பெண் தான் என்றும், தன்னைப் பார்க்கும் ஆண்கள் எல்லாம் விலகிச் செல்கின்றனர் என்றும் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 5 | | | | |
| | | 9 | | | 7 | 2 | | |
| 3 | | | 8 | | 9 | | 6 | 7 |
| 4 | | 3 | 5 | | | | | 2 |
| 5 | 2 | | 3 | 6 | 4 | | 7 | 9 |
| 7 | | | | | 2 | 5 | | 4 |
| 8 | 1 | | 2 | | 3 | | | 6 |
| | | 7 | 9 | | | 3 | | |
| | | | | 1 | 5 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 8 | 2 | 4 | 1 | 9 | 3 | 5 |
| 2 | 4 | 5 | 8 | 9 | 3 | 6 | 1 | 7 |
| 3 | 9 | 1 | 5 | 6 | 7 | 2 | 8 | 4 |
| 4 | 5 | 6 | 7 | 1 | 9 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 7 | 4 | 2 | 6 | 5 | 9 | 1 |
| 1 | 2 | 9 | 3 | 8 | 5 | 7 | 4 | 6 |
| 9 | 1 | 3 | 6 | 7 | 8 | 4 | 5 | 2 |
| 5 | 7 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 | 8 |
| 6 | 8 | 2 | 1 | 5 | 4 | 3 | 7 | 9 |

## சமூகச் சீர்கேட்டுக்குக் காரணம்

# தகவல் தொழில்நுட்பம்



இந்த சமூகச் சீர்கேட்டுக்கு முக்கியமான ஒரு காரணமாக விளங்குவது தொலைபேசிதான். இது தொல்லை பேசி என்றும் கூட அழைக்கப்படுகிறது. இதன் மூலம் படங்களை எடுத்து அதனை இணையத்தில் போட்டு பெண் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை நிலை குலைய வைக்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்துக்கு இந்த விவாதம் மிக முக்கியமான ஒன்றுதான். இந்த விவாதத்தைத் தெரிவு செய்த உதயனுக்கு எனது முதற்கண் நன்றிகள்.

சமூகச் சீர்கேட்டுக்கு காரணம் தகவல் தொழில்நுட்பமா? அல்லது மாறி வரும் கலாசாரமா? என்று பார்த்தால் நிச்சயமாகத் தகவல் தொழில்நுட்பம் என்றுதான் கூற முடியும். ஏனெனில் எமது நாடு இன்று பெரும்பாலும் என்ன வேலைகளுக்கும் தகவல் தொழில்நுட்பத்தைத்தான் நாடிக் கொண்டிருக்கிறது. உதாரணமாக வெளிநாட்டிலுள்ள உறவுகளுடன் தொடர்பு கொள்ளும்போது உடனே 10 இலக்கத்தை அழுத்தி ஹலோ எனக்குக் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது அனுப்புவாயா என்று கேட்டவுடன், அவர்களும் உடனே ஆம் என்று சொல்லி வங்கிக் கணக்கு இலக்கத்தைக் கேட்டு அந்த இலக்கத்துக்குப் பணத்தை அனுப்பி வைக்கிறார்கள். இவர்கள் அந்தப் பணத்தை எடுத்து வீண் செலவு செய்வார்கள். ஆனால் அந்தக் காலத்தில் தேவையான நேரத்தில் மட்டும் மணி ஓடர் மூலம் பணம் அனுப்புவார்கள்.

இந்தச் சமூகச் சீர்கேட்டுக்கு முக்கியமான ஒரு காரணமாக விளங்குவது தொலைபேசிதான். இது தொல்லை பேசி என்றும் கூட அழைக்கப்படுகிறது. இதன் மூலம் படங்களை எடுத்து அதனை இணையத்தில் போட்டு பெண் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை நிலைகுலைய வைக்கப்படுகிறது. அடுத்தது இணையம். அதில் முகப்புத்தகத்தில் தமது புகைப்படங்களைப் போட்டு தமது வாழ்க்கையைத் தொலைத்து விட்டு மரணத்தை நாடிச் செல்கிறார்கள். இவ்வாறு மரணத்தை ஏற்படுத்தும் முகப்புத்தகப் பாவனை தேவைதானா?

இன்றைய உலகில் சமூகச் சீர்கேட்டுக்கு இவை இரண்டும்தான் பெரும் பங்கு வகிக்கின்றன என்று கூறலாம். எனவே சமூகச் சீர்கேட்டுக்கு காரணம் தகவல் தொழில்நுட்பமே.

இனியவள், புலோலி



## சிந்தியுங்கள்...

- ஒரு நாள் கோபம் பல நாள் துக்கத்தைத் தரும்.
- வீழ்வதால் வெட்கப் படாதே! வீழ்ந்து எழுவதில் தான் வெற்றி காண்பாய்.
- படித்தவனிடம் பக்குவம் பேசாதே. பசித்தவனிடம் தத்துவம் பேசாதே.
- மகான் போல் நீ வாழ வேண்டும் என்றில்லை. மனச்சாட்சிப்படி வாழ்ந்தால் போதும்.
- உழைப்புக்கு என்றும் மரியாதை உண்டு.
- வாய்ப்பு ஒரு முறைதான் வரும். இனி வாய்ப்பைத் தேடி நாம் தான் செல்ல வேண்டும்.
- பகைவரையும் நண்பனாகக் கருது. பண்பாளனால் தான் உலகை வசப்படுத்த முடியும்.
- ஆசைகள் வளர வளர மனிதனுடைய தேவைகள் வளர்ந்து கொண்டே போகும்.
- எவ்வளவு குறைவாகப் பேச முடியுமோ அவ்வளவு குறைவாகப் பேசு.
- மரண பயம் வாழ்நாளைக் குறைத்து விடும்.
- கோபத்தில் வெளிவரும் வார்த்தைகள் அர்த்தமற்றவை.
- அதிகம் வீணாகிய நாள்களில் நாம் சிரிக்காத நாள்கள் தான் அதிகம்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ......................................................

..........................................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்

### சமூகச் சீர்கேட்டுக்கான காரணம்

**தகவல் தொழில்நுட்பமா? மாறி வரும் கலாசாரமா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.




## உன் வரவுக்காக.....

பெற்ற தாயின்
பெருமை சொல்ல
தாய்மடி அறியேன்.
அன்பின்
ஆழம் சொல்ல, அன்னை
அரவணைப்பறியேன்.
நட்பின்
பெருமை சொல்ல
நண்பரறியேன்
துன்பத்தின்
வலியைச் சொல்ல,
உறவறியேன் - என்
வாழ்வில்,
பெருமை தந்தவன் நீ.
தாயும் என் துணையும் நீ.
எல்லாம் அறிந்தும்,
அறியாதது போல்,
விலகிச் செல்கின்றாய்,
ஏன்?
புரிந்து கொள்ளாயோ?
என் தவிப்பை,
காத்திருக்கிறேன்
உன் வரவுக்காக....

கே. பிரதீக்ஷா, கரவெட்டி





## கவனியுங்கள்

உங்கள் எண்ணங்களைக் கவனியுங்கள்; அவைகளே வார்த்தைகளாக வருகின்றன. உங்கள் வார்த்தைகளைக் கவனியுங்கள்; அவைகளே செயல்களாக ஆகின்றன.

உங்கள் செயல்களைக் கவனியுங்கள்; அவைகளே பழக்கமாகின்றன.

உங்கள் பழக்கங்களைக் கவனியுங்கள்; அவைகளே உங்கள் நடத்தைகள் ஆகின்றன.

உங்கள் நடத்தைகளைக் கவனியுங்கள்;அவைகளே உங்களுடைய எதிர்காலத்தை நிச்சயிக்கின்றன.

# 2000 இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சிகள்

திருகோணமலை,பெப்.20

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இரண்டாயிரம் இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து அவர்களுக்கு வாழ்க்கைத் திறன் விருத்திப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சேவாலங்கா நிறுவனத்தின் வளவியலாளரான ஏ.எஸ். மஹ்றுப் தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இந்தப் பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றன. வெருகல் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கறுக்காமுனை, இலங்கைத்துறை, புறநகர், வெருகல், பூமரத்தடிச்சேனை ஆகிய இடங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான வாழ்க்கைத் திறன் விருத்திப் பயிற்சி நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

**சமூக உறவுகள், முன்மாதிரி, தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறமைகள் போன்ற பல விடயங்கள் பயிற்றுவிக்கப்பட்டன.**


பயிற்சியில் ஈடுபடும் இளைஞர் யுவதிகள்

பாடசாலையில் கற்கும் உயர் வகுப்பு மாணவர்கள், பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டோர் மற்றும் உயர் கல்வியைத் தொடரவுள்ள பலர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வாழ்க்கைத்திறன் விருத்திப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. சமூக உறவுகள், முன்மாதிரி, தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறமைகள், பிரச்சினைகளைத் தவிர்த்தல் போன்ற விடயங்களில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். (ச)

# கிழக்குக்கு வெளிநாட்டவர் வருகை தருவது குறைவு

## *அவர்கள் வடக்குக்கே அதிகளவில் பயணம்*

மட்டக்களப்பு,பெப்.20

வெளிநாட்டவர்கள் அனைவரும் வடக்குக்குத்தான் செல்கின்றார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்துக்கு வருகை தந்து கிழக்கு மக்களின் நிலை குறித்து கதைப்பதற்கு முன்வருவதில்லை.

வட மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று எவ்வளவுகாலமாகி விட்டது. ஆனால் வட மாகாண முதலமைச்சர் கிழக்கு வாழ் மக்களைப் பற்றி இது வரைக்கும் அறிக்கையோ, கருத்துக்களையோ தெரிவிக்கவில்லை. இவ்வாறு மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,அரசடித்தீவு கிராமத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய நிலையில் தமிழ் மக்களின் மனதில் மாற்றங்கள் வந்தால் தான் எதிர் காலத்தில் தலைநிமிர்ந்து நிற்க முடியும். ஏனெனில் தமிழ் அதிகாரியைத் தக்கவைப்பதற்கு மிகவும் கடினமான முறையில் போராட வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித் தமிழ் தொகுதி பட்டிருப்பு தேர்தல் தொகுதியாகும். மட்டக்களப்பை எவ்வாறு காப்பாற்றப் போகின்றோம் என்பது இந்த பட்டிருப்புத் தொகுதி மக்களின் கையில்தான் தங்கியுள்ளது.


நான் எனக்கென்று உங்களிடம் ஒரு போதும் எதுவும் கேட்கவில்லை. நான் இருக்கும்வரைக்கும் மக்களுக்குரிய நீண்டகால அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றேன். இதனைத் தற்போது மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

படுவான்கரைப் பகுதியின் எல்லைப் புறக் கிராம மக்களுக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளது. அதேபோல் வவுணதீவு குடிதண்ணீர் திட்டத்தினூடாக படுவான்கரை கரையோர மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. இந்த அபவிருத்தித் திட்டங்களுக்கு பல மில்லியன் ரூபா நிதியை பெற்றுக் கொடுத்துள்ளேன்.

எதிர்வரும் மே மாதம் மண்முனை பாலம் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படவுள்ளது. மண்டூர் மற்றும் கிரான் ஆகியவற்றுக்குப் பாலங்கள் கட்டுவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

வெளிநாட்டவர்கள் அனைவரும் வடக்குக்குத்தான் செல்கின்றார்கள். பிரிட்டன் பிரதமர் டேவிற் கமரூன் வந்தாலும், அமெரிக்கர்கள் வந்தாலும் வடக்குக்குத்தான் செல்கின்றார்கள். இங்கு கிழக்கு மக்களைப்பற்றி கதைப் பதற்கு அவர்களில் யாரும் வருவது இல்லை-என்றார். (ச)

# பாவனைக்கு உதவாத கிழங்குகள் சிக்கின


கோப்புப்படம்

கொழும்பு,பெப்.20

புறக்கோட்டை,4 ஆம் குறுக்கு வீதியில் மனித பாவனைக்குத் தகுதியற்ற உருழைக் கிழங்குகளை விற்பனை செய்த இரண்டு விற்பனை நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

இதன்போது 6500 கிலோ கிராம் உருளைக்கிழங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# இலங்கைக்கு தென்னாபிரிக்காவின் விசேட தூதுவர்

கொழும்பு,பெப்.20

இலங்கையில் தனது நல்லிணக்கச் செயற்பாட்டை ஒரு படி மேலே கொண்டுசொல்லும் வகையில் நல்லிணக்கச் செயன்முறை தொடர்பாக இலங்கையுடன் செயற்படுவதற்கான விசேட தூதராக சிரில் றம்போஷவைப் தென்னாபிரிக்கா நியமித்துள்ளது என்று அமைச்சரொருவர் தெரிவித்தார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் தென்னாபிரிக்காவுக்கு நேற்று சென்ற இலங்கைத் தூதுக்குழுவினர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை தங்கியிருந்து பல உயர்மட்ட சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்த குழுவில் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா, வெளி விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் அருண் தம்பிமுத்து ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சில் தென்னாபிரிக்கா உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றி முக்கிய கவனம் செலுத்தும் என்று அவர் தெரிவித்தார். (ச)




அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத
நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்
ஏழாம் திருவிழா – இன்று (20.02.2014)வியாழக்கிழமை
"நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தின்
நாயகனே நாடுவோர் வினை தீர்ப்பவனே
சிவாய நம எனும் சிறப்புப் பெற்றவனே உனை
சிந்தித்திருப்போர் சீர் பெற வரமருள்வாய்"
அனுசரணை:
ஏழாம் திருவிழா உபயகாரர்களும்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.
சி/12101)(2-6-3)



**யாழ்-கிளிநொச்சி A/C பஸ்சேவை**

உத்தியோகத்தர்களுக்கான தனிப்பட்ட போக்குவரத்து சேவை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகின்றது.

- காலை அலுவலக நேரத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும்.
- மீண்டும் மாலை அலுவலகம் முடியும் நேரம் கிளிநொச்சியில் இருந்து புறப்படும்.
- A/C வசதிகளுடன் கூடிய பஸ்.
- 25 ஆசனங்கள் மட்டும்.
- திங்கள் முதல் வெள்ளி வரை மட்டும்.

விரும்புவோர் தொடர்புகொள்ளவும்:
0773 086 586 (C712505)(10.6)



**26 SEATER TOYOTA COASTER FOR SALE**

Year of Manufacture : 2011 / Manual
Mint Condition and Low Mileage
Engine Capacity : 4164 CC
Location : Jaffna
Price : Negotiable



(C712504)
CONTACT : 0773 788795



**கடை விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி சந்தியில் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வியாபார நிலையம் (கடை) விற்பனைக்குண்டு. (44911)(7.6.3)

தொடர்பு : 077 172 7241, 077 022 2232



**Global Metro Campus**
**உடனடி வேலை வாய்ப்பு**

வடமராட்சியில் 02.03.2014 முதல் மாலுசந்தி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, புலோலி, தம்பசிட்டி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது கல்வி நிறுவனத்திற்கு கீழ்க் காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

★ வரவேற்பாளர் 2
★ பெண் போதனாசிரியர்கள் 6 (சிறுவர்களுக்கான கணினி கற்கை நெறி)
★ வெளிக்கள உத்தியோகத்தர்கள் 4

மேற்படி பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23.02.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மாலுசந்தியிலுள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

முகவரி : 169, பிரதான வீதி, மாலுசந்தி.
T.P : 021 320 0500, 076 683 8717, 072 595 9590
email : campus_global@yahoo.com (33374)(7.6.3)



**மலிவு விற்பனை**

வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப் பாவனைக்கும் ஏற்ற திண்டுக்கல் இரும்புப் பெட்டகங்கள் (Iron Safe) மலிவு விலையில் விற்பனைக்கு இருக்கின்றன. சகல விதமான பழுதடைந்த இரும்புப் பெட்டகங்களும் சிறந்த முறையில் திருத்தியமைத்துக் கொடுக்கப்படும். (44913)(7.6.3)

இல. 13, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு : 077 969 8942



**வீடு வாடகைக்கு விடப்படும்**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, வளன்புரம் சுவாமியார் ஒழுங்கையில் நல்ல நிலையில் உள்ள அழகிய பெரிய வெறும் வீடு. ஐந்து படுக்கை அறைகளுடனும் இணைந்த குளியலறையுடனும், காற்றாடிகளுடனும், பிரயோசனங்களுடனும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது.

தொடர்பு: 077 695 3776

## அகத்தை எவ்வாறு நாம் உணர்ந்து கொள்ளலாம்?

எமது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் மட்டுமே இயற்கையான தெய்வீக உள் ஒலியாகிய அகத்தை அறியலாம். அன்றிப் பல நூல்களைக் கற்பதனாலோ, பண்டிதனாக ஆவதனாலோ அல்ல.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

## நானுஓயா தோட்டத் தொழிலாளர் பல கோரிக்கைகளை முன்வைத்து

***பணிப்புறக்கணிப்பு***

களனிவெளி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நானுஓயா எடின்பரோ தோட்டத் தொழிலாளர்கள் 375 பேர் திங்கட்கிழமை பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு ஆரம்ப காலம் முதல் இலவசமாக மாதாந்தம் வழங்கி வந்த தேயிலைத்தூள் இடைநிறுத்தப்பட்டமைக்கு ஆட் சேபனை தெரிவித்தும் தோட்டத்தில் சுகாதார வசதி, போக்குவரத்து வசதி, வீடமைப்பு, வைத்திய சேவை, நலன்புரி திட்டங்கள், வயது வந்தவர்களுக்கான வேலை வாய்ப்பு உட்பட இன்னும் பல கோரிக் கைகளை முன்வைத்தே இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதற்கான முறையான தீர்வு வழங்கப்படும்வரை தாம் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பு நடைபெற்ற தோட்டத்துக்குச் சென்ற மத்திய மாகாண சபை உறுப்பினர் ராதாகிருஷ்ணன் ராஜாராம் , தோட்ட முகாமையாளர் உஜித்த தென்னகோன், உதவி முகாமையாளர் நதுன் இருள் ஆராய்ச்சி ஆகியோருடன் பேச்சு நடத்தியதுடன் குறித்த விடயம் தொடர்பாக தொழிலாளர்களுக்கு சார்பான தீர்மானம் ஒன்றை தலைமைக் காரி யாலயத்துடன் கலந்துரையாடி பெற்றுத் தருமாறு வேண்டு கோள் விடுத்தார். இது தொடர் பில் தோட்ட முகா மையாளர் சம் பந்தப்பட்டகம் பனியின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி சாதகமான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதாகத் தன்னிடம் உறுதியளித் ததாக தொழிலாளர்களிடம் ராஜாராம் தெரிவித்தார்.

எனினும் தொழிலாளர்கள் தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தனர். (ந)



சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைப்பதையும் அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி பாடசாலை அதிபர் சூ. நோபேட் உதயகுமார் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-29)

## நெற்பயிர் சேதத்துக்கு காப்புறுதி செய்தோர் வருகை தருமாறு அறிவுறுத்து

தென்மராட்சி,பெப்.20

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களின் பயிர் அழிவுக்கு காப்புறுதி செய்வது தொடர்பில் காப்புறுதி உத்தியோகத்தர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வருகை தரவுள்ளனர்.

அமைப்பில் நெற்பயிர் காப்புறுதி செய்த அனைத்து நெற்செய்கையாளர்களையும் இலங்கை வங்கி கணக்குப் புத்தகத்துடன் கமக்கார அமைப்புச் செயலாளரின் வீட்டுக்கு வருகை தருமாறு அமைப் பின் செயலாளர் வீ.கே.வேதநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

## துப்பாக்கி முனையில் ஒரு கோடி ரூபா பணம் கொள்ளை

நீர் கொழும்பு நகரில் அமைந்துள்ள பிரபல நகைக்கடை மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று நிலையங்களில் சுமார் ஒரு கோடி ரூபா பணம், துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்றுள்ள கொள்ளையர்கள் சிலரே இந்தப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையத்தில் வர்த்தக நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, ஹெல்மட் மற்றும் ஜாக்கட் அணிந்த இரண்டு பேர் கடையில் நுழைந்து வர்த்தக நிலையத்தின் உரிமையாளரது தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தி பணத்தைக் கேட்டுள்ளனர்.

மற்றைய நபர் பணத்தை எடுத்து பையொன்றில் போட்டுள்ளார். அதன் பின்னர் இரண்டு நபர்களும் அங்கி ருந்து வெளியேறி கடைக்கு சற்று தூரத்தில் தயாராக இருந்த மோட்டார் சைக் கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக தகவலளித்த கடை ஊழியர் ஒருவர், 'ஹெல்மட் மற்றும் ஜாக்கட் அணிந்த இரண்டு பேர் கடை உரிமையாளரிடம் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தி கடையில் இருந்த டொலர் மற்றும் உள்நாட்டு நாண யங்கள் அடங்கலாக ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை கொள்ளையிட்டு சென்றனர்.

அவர்கள் முழுமை யாக மூடப்பட்ட ஹெல்மட் அணிந் திருந்தால் முகத்தை பார்க்க முடியவில்லை - என்றார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நீர்கொழும்பு பிராந்தியத் திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்தலியனகே மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர், நீர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சஜித் ரத்நாயக்க தலைமையிலான குழுவினர் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக நீர் கொழும்பு பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந)

கோயிற்கடவை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய

**மஹோற்சவ விழா - 2014**

**கொடியேற்றம் இன்று (20.02.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு**
**சப்பறம் (28.02.2014) வெள்ளிக்கிழமை அதிகாலை 3.00 மணிக்கு**
**தேர் (28.02.2014) வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு**
**தீர்த்தம் (01.03.2014) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு**

மஹோற்சவ குரு : சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் (அகில இலங்கை சமாதான நீதிவான்)
சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார் BA(Hons),MA


விசேட மேளக் கச்சேரி : காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்வான்
சுருதிஞான வித்வ மணி T.V.T. ராஜேந்திரன் குழுவினர் திருப்பாதிரிப்புலியூர், இந்தியா.

தொடர் சொற்பொழிவு : விடயம் : "விநாயக புராணம்"
வழங்குபவர் : பிரசங்க வாரிதி
நாகரட்ண கலாதர சிவாச்சாரியார்

கொடியேற்ற திருவிழா உபயகாரர்
பரம்பரை பூசகர்
ஆறுமுக கணேசக்குருக்கள் குடும்பம்

(C/12507)(7.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




எமது சங்கத்தின்
பொதுமுகாமையாளர்
கணபதிப்பிள்ளை
யோகதாசன்
அவர்கள்
கடந்த 31.12.2013 இல்
சமாதான நீதிவானாக
முல்லைத்தீவு
நீதிவான்
நீதிமன்றத்தில்
சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டார்.

இவர் தனது சேவைகளை மேலும் வழங்கி
மேன்மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள்.
பாண்டியன் குளம், துணுக்காய்.

(சி/12506)
(3.6.4)

## வாராந்த ஆன்மிக சொற்பொழிவு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'முருக பக்தியும் நக்கீரரும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

சொற்பொழிவை இளம் சொற்பொழிவாளர் நி.பகீரதன் நிகழ்த்துவார். (வ-173)

## திண்மக்கழிவு முகாமைத்துவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.20

வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூராட்சிசபைகளால் மேற்கொள்ளப்படும் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக் கிழமை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறி விக்கப் பட்டுள்ளது. (வ-9)

**University of Jaffna, Sri Lanka**

**WALK - IN - INTERVIEW**

**Visiting Instructor in English Language Teaching ,**
**Faculty of Engineering - Kilinochchi**

**Walk in interview for the Post of Visiting Instructor in English Language Teaching will be held at 9.30 a.m on 25.02.2014 at the Board Room of this University.**

**Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with Self Prepared applications.**

| POST | SALARY SCALE |
| --- | --- |
| Visiting Instructor | Rs.750/- Per hour |

**Qualifications**

a) A Special Degree in English/English Language Teaching/English Literature

OR

b) A General degree with a subject of English/English Language Teaching / Englisg Literature

OR

c) Postgradute degree or diploma in English/English Language Teaching / Englisg Literature

Intersted Candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and self prepared application

Registrar
University of Jaffna.
19.02.2014

(c.12508) (45.6)

## மெய்வன்மைப்போட்டி

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக் கிழமை பி.ப.2 மணிக்கு பாடசாலை மைதானத் தில் இடம்பெறும்.
அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடை பெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தின ராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலரா ஜாவும், சிறப்பு விருந்தினராக தென்ம ராட்சி கல்வி வலய கணக்காளர் திருமதி சி.நந்தகுமா ரும் கலந்து கொள்வர். (வ-9)

♦♦♦

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுப்பர்ஸ் ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் வித்தி யாலய அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலை மையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி) கு.சிவகுமாரும் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் வட்டுக் கோட்டை கிளை முகாமை யாளர் வே.புவனேந் திரராஜாவும் கலந்து கொள்வர். (வ)

♦♦♦

வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலையின் வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள் ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சு.திரு கேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத் தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பா ளர் செல்வி.அன்ரனி சாந்தா மரியாம்பிள்ளை யும், சிறப்பு விருந்தின ராக வட்டு. மேற்கு கிராம உத்தியோகத்தர் கண பதிப்பிள்ளை கணேசலிங் கமும் கலந்து கொள்வர். (வ)



உள சமூக சாகித்தியன் யோசப்பாலா எழுதிய "உளமகிழ" என்னும் நூல் கடந்த வெள்ளிக்கிழமை நாவலர் மண்டபத் தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் முதல் பிரதி மன்னார் தமிழ் சங்கத்தின் தலைவரும் மன்னா பத்திரி கையின் ஆசிரியருமான தமிழ் நேசன் அடிகளிடம் இருந்து பருத்தித்துறை ஞானாலய தலைவர் இ.து.குலசிங்கம் பெற் றுக்கொள்கிறார். அருகில் நூலாசிரியர் யோசப்பாலா. (உ-23)

## தமிழறிஞர் அகளங்கனின் மணி விழா சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.20
ஸ்கந்தவரோதயன் தமிழறிஞர் கலாநிதி அகளங்கனின் மணி விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆங்கில மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் மொழி பெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளருமான கலாநிதி க.ஶ்ரீகணே சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழா வில் பிரதம விருந்தினர்களாக கலாநிதி அகளங் கன் (நா.தர்மராஜா) திருமதி பூரணேஸ்வரி அக ளங்கனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், திருமதி மீனா சித்தார்த்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். வரவேற்புரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் எஸ்.மோகன்ராஜும் ஆசியுரையை தெல்லிப்பழை ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும் வழங்க வாழ்த்துரைகளை அதிபர் இ.ஈஸ்வரதாசன், இந்து சாதனம் ஆசிரியர் சி.சரவணபவன் (சிற்பி), பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்.பல் கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராஜா, அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ் வரன், திருமதி யோகாதேவி ரவிக்குமார் ஆகி யோர் நிகழ்த்துவர். யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஶ்ரீமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் மணிவிழா வாழ்த்துப்பாடலும் இடம்பெறும். மணிவிழா நாயகனின் ஏற்புரை யைத் தொடர்ந்து யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந் தன் நன்றியுரை வழங்குவார். (வ-7)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.20
இந்து கலாசார அலு வல்கள் திணைக்கள மும் நரசிங்க வைர வர் அறநெறிப் பாட சாலையும் இணைந்து நடத்தும் பரிசளிப்பு விழா இன்று வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நரசிங்க வைரவர் ஆலய மண் டபத்தில் பொறுப்பா சிரியர் இ.ஜெயப்பிர காஸ் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப் பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செய லக இந்து கலாசார அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்ச னும் கலந்து கொள் வர். (வ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாஜனி விசுவலிங்கம்



சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வருமான திருமதி பத்மாஜனி விசுவலிங்கம் 18.02.2014 செவ் வாய்க்கிழமை லண்டனில் கால மானார்.
அன்னார் காலஞ்சென்ற முன்னாள் கல்வி ஆலோசகர் ச.விசுவலிங் கத்தின் அன்பு மனைவியும், சாரதா, பிரபாகரன், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் கிருபாகரன், சுபத்திரா, சுஜந்தா ஆகியோரின் தயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,மானிப்பாய்.
078 2792948
(44917) (5.8)
தகவல்: திருமதி சு.சுபத்திரா (மகள்)

### திருமதி புஸ்பவதி அருளானந்தம்



யாழ். வண்ணார்பண்ணை, கொல் ஒழுங்கையைப் பிறப்பிட மாகவும் இல.45, மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி அருளானந்தம் 17.02.2014 திங்கட்கிழமை கால மானார்.
அன்னார் காலஞ்சென்றவர் களான இரத்தினம் -பார்வதி தம் பதியரின் அன்பு மகளும், ஆனைப் பந்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்களான தருமலிங்கம் - அன் னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தத்தின் மனைவியும், கலைவாணன், வசந்தகுமாரி (லண்டன்), சரவணபவானந்தன், ரவி (ஜேர்மனி), புஸ்பமாலா (கனடா), மதிவண்ணன், ரவிசங்கர், ஜெயந்தி, ரவிச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், ஜெய பாலன் (லண்டன்), சந்திரகாந்தா, ஜெயந்தி (ஜேர்மனி), லோகேஸ்வரன் (கனடா), பாலசரஸ்வதி, சசிகலா, சசீலன் ஆகியோரின் மாமியும், காலஞ் சென்றவர்களான சண்முகலிங்கம், மகாலிங்கம், இராசலிங்கம் மற்றும் தனபாலசிங்கம், தனலட்சுமி, இராஜகோபால் ஆகியோ ரின் சகோதரியும், ஹரிஸ், ஜெயவாணி, ஜெயதீபன், ஜெயரூபி (லண் டன்), காவியா(ஜேர்மனி), மயூரா (கனடா), மதுஷன், ஹரனி, மகேசவர்மன், மிதுஷன், சமித்திரன் ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2014) பி.ப.2.00 மணியளவில் இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 768 6629, 077 721 1319

தகவல்:
குடும்பத்தினர்.
(சி/12502)(6.4)

## கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாக வும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட
**சோதிலிங்கம் (காந்தி) மதீபன்**
11.02.2014 அன்று அகாலமரணம் அடைந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2014) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
கனகலிங்கம் குடும்பம் (பெரியப்பா).
077 602 3002
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு.
(44510) (12.2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**தயாநிதி சேகரன்**



பிறப்பு 04.05.1962
இறப்பு 02.03.2013
திதி:19.02.2014
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள்
நினைவுகள்
என்றும் எம்மை
விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.
உத்தியோகத்தர்கள்,
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேசசபை-உப அலுவலகம், உடுப்பிட்டி. (33375)(3.6.4)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**சிவபாதம் அருணன்**
(சட்டவாளர்)



மலர்வு 02.09.1978
உதிர்வு 20.02.2009

காலத்தின் கோடுகள் கண்ணீரில் என்றுமே
கரைந்திடப் போவதில்லை
எங்கள் அழுகையின் ஓசை வானத்தை
எட்டியும் உயிர்வலி ஆறவில்லை
மாசற்ற மனத்தை மலர்த்தியே அழகுற நீ சிரிப்பாய்
அறிந்திராரோடும் கனிவுடன் பேசியே புன்னகை பூ விரிப்பாய்
ஆண்டைந்து உருண்டோடியும் அழகிய பூ முகம்
கண்களினின்றும் நீங்கவில்லை
ஆறிடாத் துயரினில் நின்று நாம் வாடுகின்றோம்
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி
உன் பூமுகம் தேடுகின்றோம்.

சி. மயூரி
077 117 7683
குடும்பத்தினர்.
(43523) (7.6.3)

## மரண அறிவித்தல்

### அமிர்தலிங்கம் செந்தூரன்



யாழ்ப்பாணம், நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ், பரிசை வசிப்பிடமாக வும் கொண்ட அமிர்தலிங்கம் செந்தூரன் 16.02.2014 ஞாயிற் றுக்கிழமை காலமானார்.
அன்னார் அமிர்தலிங்கம் - யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வத்சலன் (ஆசிரியர், யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியா லயம்), கார்த்திகா (வலய அலுவலகம், தேசிய சேமிப்பு வங்கி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், க.கமலதாசன் (நன் நடத்தை உத்தியோகத்தர், வேலணைப் பிரிவு) அவர்களின் மைத்துனரும், அபீரனின் மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2014) வியாழக் கிழமை லாச்சப்பலில் இடம் பெற்று, தகனக்கிரியைகள் Crematorium De Cimetieve Des Joncherolles, 95. Rve Marcel 8 embat 93430, France இல் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜீ.பி.எஸ்.வீதி,
கல்வியங்காடு,
(44934) (12.6)

தகவல்:
குடும்பத்தினர்.
மைத்துனர் விஜயகுமார் (பிரான்ஸ்).

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி திலகவதி உலகநாதன்

9ஆம் வட்டாரம் (துளசிமாடம்) புங்குடுதீவு

அன்னையின் அன்பில்: 01.01.1944
இறைவனின் அணைப்பில்: 21.01.2014

அன்னையே ஒரு கவி உனக்காக
எம் ஒரு கவி உனக்காக
ஊர் உரைத்த புகழோடு
உன் புகழ் உரைக்க என் கண்ணீரில் இன்று
அம்மா அன்பின் உருவம் நீ என்றால்
அவ் அன்பும் அடிபணிந்திடும் உன்னிடத்தில்

அடித்திட ஒரு கையில்லை ஏனோ இன்று
அரவணைத்திட மறு கையில்லை
எம் கண்கள் கலங்கிய நேரத்தில் எம்
மார்பணைத்து தலை கோதி கதைகள் சொல்வாய்

இன்று கண்மூடித் தூங்குகின்றாய் அம்மா
இன்று கண் மூடித் தூங்குகின்றாய்
உறவுகள் இவ்வுலகில் நிரந்தரமில்லை
உன்னைப்போல் அம்மா இன்று எமக்கில்லை

(சி/11795)(12.6)

எங்கள் குடும்பத் தலைவியின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் சகல தொடர்புகள் மூலமும் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 18.2.2014 செவ்வாய்க்கிழமையன்று இல.40 முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் காலை 6.00 மணியளவில் நடைபெற்றது என்பதனையும் 20.2.2014 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இல.103 ஸ்ரீ குணானந்த மாவத்தை கொட்டாஞ்சேனை இல்லத்தில் வீட்டுக் கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் கதிரேசன் வீதி வீர மைலன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க.உலகநாதன் (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,சகோதரர்கள்.
இல.103, ஸ்ரீ குணானந்த மாவத்தை, கொட்டாஞ்சேனை
கொழும்பு-13
தொ.இல-0770236692,0112395648

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் எல்.ஓங்காரமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் விளையாட்டுத்துறை முன்னாள் தலைவர் எஸ்.வேதநாயகமும் கலந்து கொள்வர். (வ)

◆◆◆

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக காரைநகர் அரசினர் வைத்தியசாலை மருத்துவர் சு.சுவாமிநாதனும் சிறப்பு விருந்தினர்களாக தேசிய சேமிப்பு வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் அ.கெங்காதரன்,இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வி.விஜயகுமார், கிராம சேவையாளர் செல்வி சி.திருமகள்,காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.சிறிவிக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-250)

## கைதடி நவீல்ட் பாடசாலையின் 58 ஆவது நிறைவு நிகழ்வு

கைதடி நவீல்ட் பாடசாலையின் 58 ஆவது ஆண்டு நிறைவும் நூல் வெளியீட்டு விழாவும் பாடசாலை பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.மகேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி செல்வி என்.நல்லையா கலந்து கொள்ளவுள்ளார். அதே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் திருமதி செல்வராணி லூர்த்திஸால் செவிப்புலன் இழந்த மாணவர்களுக்காக எழுதப்பட்ட 'இலகுவழி இலக்கண நூல்' வெளியீடும் இன்று இடம்பெறவுள்ளது. (வ-4)

## பயிற்சிப் பட்டறை

சிறுவர்பாதுகாப்புமுறை, பாடசாலை உடல் ரீதியிலான தண்டனை தவிர்ப்பது எப்படி என்பன தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளை வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒழுங் கமைப்பில் இடம்பெறவுள்ளது. பாடசாலைகளைச் சேர்ந்த 35 ஆசிரியர்களும் 20 மாணவர்களும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-402)

## வணிகமாணிப் பட்டம் பெற்ற 74 மாணவர்

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். பல்கலைக்கழக 2010 - 2011 வணிகமாணி வெளி வாரி பட்டப்படிப்பை மேற் கொண்டு பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்கள் தமது பட்டப் பெறுபேற்றை அலுவ லக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என வெளிவாரிப் பட் டப் பதிவுகள் மற்றும் பரீட்சை கள் அலகு இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற வணிகமாணி (வெளிவாரி) இறுதிப் பரீட்சையில் 74 மாண வர்கள் வணிகமாணி பட்டம் பெறுவதுடன் 8 மாண வர்கள் இரண்டாம் வகுப்புச் சித்தியும் பெற்றுள்ளனர். (ஓ-400)

### வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் பழைய மாணவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம்

எமது பாடசாலை பழைய மாணவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் 23.02.2014 ஞாயிற்றுக்கிழமை பி.பி 3.30 மணிக்கு பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் இடம் பெறவுள்ளதால் பழைய மாணவர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

அன்று எமது பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி அரியமலர் இராஜரட்ணம் அவர்களது மறைவையொட்டிய நினைவஞ்சலி நிகழ்வும் நடைபெறவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
(சி/12511)(7.6.3)

### சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண்/பெண்) தேவை.

கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு 26.02.2014 புதன்கிழமைக்கு முன்னர் நேரில் வரவும்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

கிளீன் வெல் (பிறைவேட்) லிமிட்டெட்
இல. 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல - 077 220 9565, 077 220 9566,
021 222 6239
(சி/12512)(7.6.3)

Fantastic FEBRUARY SPECIALS 2014

யாழ் softlogic
BEST IN THE BUSINESS

காட்சியறையில் மாத்திரம்
(கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.)



5600/= மாத்திரம் செலுத்தி 32″ Panasonic LED தொலைக் காட்சிப் பெட்டியினைப் பெற்றுக் கொண்டு மீதிப் பணத்தை 12 மாத வட்டியில்லாத தவணைக் கொடுப்பனவு முறையில் செலுத்தலாம்.

யாழ்ப்பாணக் காட்சியறையில் தொலைகாட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு எம்மால் வீடுகளுக்கு கொண்டுவந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
0777 397 734 / 077 048 2041 / 077 982 4213 / 075 040 9787

-நிபந்தனைக்குட்பட்டது-

(C/12514)(10.6)

Save money
50%
12 A - 4890/=, 35 A - 5560/=,
85 A - 4560/=,13 A - 4460/=,
15 A - 5240/=, 16 A - 12500/=
Be Environmentally Responsible.
calidad
INKS AND PHOTO PAPERS FOR ALL INKJET PRINTERS



PROJECTOR STANDS



2500 இருந்து

PROJECTOR STAND
PROJECTOR CELLING MOUNT KIT
PROJECTOR SCREEN WALL MOUNT
PROJECTOR SCREEN WITH STAND
INFORMATION OUTLET VGA/HDMI/AV

Brother Laser Printer HL 1110 - 8600/=
Dell Laser Printer HL 1160 - 9800/=
HP P1102 Laser Printer - 13350/=

BRAND NEW AUSTRALIAN PRODUCTS



MICRO PC SYSTEMS

JAFFNA - 218, Hospital Road, 021 222 5893, 077 396 3280
VAVUNIYA - 73, 2nd Cross Street, 024 222 1969, 077 396 3284
NELLIYADI - Kodikamam Road. 021 226 2929, 077 303 9536
KILINOCHCHI - 85 A, A9 Road. 021 228 5596, 077 396 3278
TRINCOMALEE - 358, Central Road. 026 222 6977, 077 742 5973


hp DELL Canon SAMSUNG LEXMARK

COLOMBO - 077 730 8417

(C/12509)(2.6)

# தூக்கு தண்டனையை குறைக்க வேண்டும்

## ஆணைக்குழு பரிந்துரை


பிரதிபா மகா நாமஹேவா

கொழும்பு,பெப்.20
குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது என்று ஆணைக் குழுவின்ஆணையாளர் பிரதிபா மகா நாமஹேவா தெரிவித்தார்.
சர்வதேச மனித உரிமைகள் நியதிக்கு அமைவாக இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேல்நீதி மன்றங்கள் கொலைக்கும் போதைப்பொருள் கடத்தலுக்கும் தூக்குத் தண்டனை விதித்து வருகின்றன என்று அவர் கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீண்ட காலமாக இலங்கையில் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை. தற்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 500 கைதிகள் ஜனாதிபதியின் உத்தரவுக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களில் பலர் தங்களைத் தூக்கில் போட வேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டுமென அவ்வப்போது ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள்-என்றார்.
அமைச்சர் விமல் வீரவன்ஸ போதைப்பொருள் கடத்துப வர்களுக்குத் தூக்குத் தண் டனை நிறைவேற் றப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ச)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். 507 மானிப்பாய் வீதியில் உள்ள 3 அறை வீடு, வாகன தரிப்பிட வசதி உண்டு. 14 ஆயிரம் மாத வாட கை.
தொடர்பு:- 0776265008


அகலவத்தை, வெல்லன தர்மபொல மகா பிரிவேனாவின் 100 வருட நிறைவு நிகழ்வுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு பிரிவேனா இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்தார். (ச)

# நாட்டின் கொள்கையில் மாற்றங்கள் வேண்டும்

## நிர்மல் ரஞ்சித் வேண்டுகோள்


நிர்மல் ரஞ்சித் தேவசிறி

கொழும்பு,பெப்.20
நாட்டில் கொள்கை அடிப்ப டையிலான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக விரிவுரை யாளர் தொழிற்சங்க ஒன்றி யத்தின் முன்னாள் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.
மாற்றுக் கொள்கைகளுட னான ஓர் முறைமையொன்று அவசியமாகின்றது என்று அவர் கூறினார்.
தற்போதைய அரசின் கொள்கை வகுப்புக்கள் குறித்து திருப்தி அடைய முடியாது. சிறிய தொரு குழுவினால் நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்ப டுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் குறிப் பிட்டார்.
நாட்டை மீளவும் நல்வழிப் படுத்த வேண்டுமாயின், மாற்றுக் கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது என்று அவர் மேலும் தெரிவித் தார். (ச)

# தங்க பிஸ்கட் கடத்த முயன்ற நபர் கைது

கொழும்பு,பெப்.20
இரண்டு தங்க பிஸ்கட்டுக்களை மறைத்து வெளிநாட்டுக்கு கடத்த முற்பட்ட பெண் ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தியாவின் சென்னை நக ருக்கு செல்ல முயன்றபோதே அவர் கைது செய்யப்பட்டார் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரி வித்தார்.
சந்தேகநபரிடம் சோதனை யிட்ட போது, 596 கிராம் நிறையுடைய இரு தங்க பிஸ் கட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள் ளன என்று அவர் கூறினார்.
அவற்றின் பெறுமதி சுமார் 30 லட்சம் ரூபா என்று அவர் தெரிவித்தார்.
46 வயதான கோதடுவ பிர தேசத்தைச் சேர்ந்த பெண் ணொருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

**மரண அறிவித்தல்**

*திருமதி பிள்ளையம்மா தம்பிராசா*



தம்பாட்டி ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையம்மா தம்பிராசா நேற்று (19.02.2014) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், தயானந்தி, பத்மாவதி, அழகம்மா, மின்னொளி, தவராசா, சிவராசா, யோகேஸ்வரி, உத்தமி, மகராசா (பிரான்ஸ்), சிவாஜினி செந்தில் குமரன்(பிரான்ஸ்), புஸ்பலட்சுமி (பிரான்ஸ்), சிவமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பாட்டி, ஊர்காவ ற்றுறை.
தகவல் :
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

*திருமதி சிந்தாமணி நாகமணி*




மானிப்பாய் உடுவிலைப் பிறப்பிடமாகவும், மணல் தறை ஒழுங்கை, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிந்தாமணி நாகமணி நேற்று (19.02.2014) புதன் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரேசு-நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சரஸ்வதி (மலர்)-சரோஜினி (எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்), சண்முகானந்தம் (விக்கி- கனடா), வசந்தகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கணநாதன் (குணம்), ஜெயபாலசிங்கம் (இயக்குநர், எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்), தயாநிதி (கனடா), கிருபா (பிரான்ஸ்), உதயகுமார் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியும், கலாநிதி மைதிலி (சிரேஷ்ட உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), வைதேகி (பிரான்ஸ்), ஜானகி (ஆஸ்திரேலியா), சிந்துஜா (STEPS--INSTITUTE), மாருதி, திறோஜன் (பொறியியல் பீடம், மொறட்டுவப் பல்கலைக் கழகம்), ஜனுஷன், கௌசல்யா (கனடா), நித்தியவாணி (பிரான்ஸ்), அபிராமி (பிரா ன்ஸ்), வைஷ்ணவி, பேராசிரியர் விசாகரூபன், தேவதாசன், சிவானந்தன், அஜந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷ்மா, தேஜா, சண்முகன், வேணுஜன், தரணியா, சாயகி, சாருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 393/23, கோயில் வீதி,
நல்லூர்.
தொ.பே. 021 221 9133

தகவல் :
நா. சண்முகானந்தம்
(விக்கி- கனடா)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவச ஆத்மசாந்தி அழைப்பும்**

தோற்றம் 25 02 1951



மறைவு 03 03 2013

அமரர்
**சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை**

**ஆண்டுகள் பல கடந்தாலும் மாறாது உங்கள் நினைவுகள்**

அன்னாரின் முதலாம் ஆண்டு திவச ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (20.02.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியள வில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிராத்த னையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 61/9 மில் ஒழுங்கை,
பிரம்படி, கொக்குவில்.

இங்ஙனம்:-
குடும்பத்தினர்.

**ஓராண்டு நினைவஞ்சலி**



*திருமதி தங்கமணி மாணிக்கவாசகர்*

தோற்றம் 30.11.1944
மறைவு 03.03.2013

ஓராண்டு கழிந்தாலும் எங்கள்
இதய அலைகளில் எப்போதும்
ஒளி வீசிக் கொண்டு இருப்பீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லோரும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம்-கொழும்பு பேரூந்து ஆசனப் பதிவகத்துக்கு ஆசனப் பதிவாளரும் உதவியாளரும் தேவை. (44920) (10)

தொடர்புக்கு :
077 3866250, 077 386 6250

**உடனடித் தேவை**

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் Grocery/ Food centre இக்கு பின்வரும் வேலை யாள்கள் தேவை.
1. நடத்துநர்
பலசரக்கு கடையொன்றில் அன்றாட நடவடிக்கைகளை கவனிப்பதற்கும் கணக்குப் பார்ப்பதற்கும் தகுதியானவர்கள்.
2. சமையல்காரர்
கொத்து றொட்டி, ப்ரைட்றைஸ், றோல், மரக்கறி, மாமிசம் சமைக்கத் தெரிந்தவர்.
முன்அனுபவம் விரும்பத்தக்கது.
3. உதவியாளர்
Food centreஇல் உணவு பரிமாறுவதற்கும், சமையல் காரருக்கு உதவியாளராக இருப்பதற்கும்.

விவரங்களுக்கு : (44921) (10)
077 386 7695 / 077 230 6642

**சிறுநீரகம் தேவை**

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 48 வயதுடைய ஆண் ஒருவருக்கு $O^+$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(குறிப்பு: சன்மானம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு: (44923)(10)
077 500 2589, 077 2500 386

# ஜெயலலிதாவின் அறிவிப்பால் கருணாநிதி, வைகோ மகிழ்ச்சி

ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளான பேரறிவாளன் நளினி உட்பட7 பேரும் விடுதலை செய்யப்படுவர் என்று தமிழக அரசின் அறிவிப்பு தொடர்பில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் ம.தி.மு.க. செயலாளர் வைகோ மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தமி ழக அரசின் உத்தரவு மகிழ்ச்சி அளிப்பதாக தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

7பேரையும் விடுதலை செய்ய மத்திய அரசு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசு ஒப்புதல் வழங்கினால் மகிழ்ச்சி என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

இதேவேளை ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகள்விடுதலைசெய்யப்பட உள்ளதாக தமிழக அரசின் அறிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார் ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

தமிழக அரசின் அறிவிப்புக் குறித்து மகிழ்ச்சி வெளியிட்ட வைகோ,

"குறித்த 7 பேரும் தங்களின் வாழ்நாளின் பெரும் பகுதியை சிறையில் கழித்து விட்டனர். அரசின் இந்த உத்தரவு மகிழ்ச்சி அளிக்கிறது. விரைவில் அவர்கள் சிறையில் இருந்து வெளி வருவார்கள்' என்று தெரிவித்துள்ளார். (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மகனைக்

தமர் ராஜிவ்காந்தியின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கான உத்தரவை தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

இது தொடர்பில் உடுப்பிட்டியில் வசித்துவரும் சுதேந்திர ராஜா (சாந்தனின்) தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

நேற்று (நேற்று முன்தினம்) எனது மகனின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டதாகச் செய்தி வெளியாகியது. எனக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. இந்த நிலையில் இன்று (நேற்று) எனது மகனை விடுதலை செய்வதாகத் தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்ததாக செய்திகளைக் கேட்டேன்.

சந்தோஷத்தில் என்ன செய்வதென்று தெரியவில்லை. மகனின் விடுதலைக்காக நான் கடவுள்களிடம் நேர்த்தி வைத்திருந்தேன். பிரார்த்தனைகளும் செய்திருந்தேன். எனது மகனைக் காணாத 22 வருடங்களும் நான் ஒரு நேரம் மாத்திரமே உணவை உண்டு உபவாசம் கடைப்பிடித்தேன்.

கடவுள் கைவிடவில்லை. தமிழக முதல்வர் ஜெயலலிதா கடவுள் மாதிரி. எனது பிள்ளையை விடுவித்து விட்டார். அவருக்கு நன்றிகள்.

எனது பிள்ளையின் விடுதலைக்காக எங்களைவிட உலகமெங்கிலுமுள்ள பலர் குரல் கொடுத்திருந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாகச் செங்கொடி உயிரைக் கொடுத்திருந்தாள். எல்லோருக்கும் ஒட்டுமொத்த நன்றிகள்- என்றார் அவர். (த-5)

### முருகன்

குப் பரிந்துரைக்கப்படு கிறது. மூன்று நாள்களுக்குள் இவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கா விட்டால் தமிழக அரசே அதன் அதிகாரத்தை பயன்படுத்தி விடுதலை செய்யும்' என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இது குறித்த அறிவிப்பினை நேற்றுப் புதன்கிழமை சட்டமன்றத்தில் வெளியிட்ட முதல்வர் ஜெயலலிதா, 'ஏழு பேரும் 23 ஆண்டுகளாகச் சிறைச்சாலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டு, குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 432 இல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முன்னதாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது' என்று கூறினார்.

#### மத்திய அரசுக்கு அவகாசம்

சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோரின் தூக்குத் தண்டனை நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

அதேபோன்று முருகனின் மனைவி நளினியின் தண்டனையும் ஏற்கனவே ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

தவிரவும் றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ராஜீவ் கொலை வழக்கில் முதலில் தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தாலும், பின்னர் அது உயர் நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இந்த ஏழு பேரையும் விடுதலை செய்வதென்று முடிவு செய்யப்பட்டுவிட்டாலும், ராஜீவ் கொலை வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பின் கண்காணிப்பில் நடத்தப்பட்டுத் தண்டனைகளும் வழங்கப்பட்ட நிலையில், குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 435 இன் படி, அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசு 3 நாள்களுக்குள் தமது கருத்தைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 7 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் கூறினார்.

அரசின் முடிவைத் தி.மு.க தலைவர் கருணாநிதி உள்ளிட்ட பலர் வரவேற்றிருக்கின்றனர்.

அடுத்துவரும் சில நாள்களில் ராஜீவ் காந்தி கொலை தண்டனைக் கைதிகள் அனைவரும் விடுதலையாவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

### வடக்கு

திருப்பம்' என்று வடக்கு முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழு பேரையும் விடுதலை செய்வதாகத் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர்களால் கேள்வியெழுப்பப்பட்டது.

குறித்த காலத்துக்கு மேல் அவர்கள் சிறையில் இருந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுதலை கிடைத்தது சந்தோஷம். நான் எத்தனை பேரைச் சிறைக்கு அனுப்பியிருக்கின்றேன். சிறையிலிருந்து வந்த பின்னர் அவர்களுடன் பேசியும் இருக்கின்றேன். இதில் நான் தெரிவிக்க எதுவும் இல்லை. அவர்களுக்கும் சந்தோஷம். எங்களுக்கும் சந்தோஷம். பல விதமான கட்சிகள், தமிழின உணர்வாளர்களின் போராட்டங்கள் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். நல்லதொரு திருப்பம் - என்றார் முதலமைச்சர்.

இலங்கைச் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கேட்ட போது, இதற்கான பல நடவடிக்கைகளை நாம் எடுத்திருந்தோம். இருப்பினும் அவை வெற்றியளிக்கவில்லை. நாம் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றோம். நிச்சயம் நல்லது நடக்கும் என்று குறிப்பிட்டார். (த-5)

### இடைக்கால

யுளொட் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான த.சித்தார்த்தன், மாகாண சபை உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் பிரிட்டன் குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

போருக்குப் பின்னரான வட பகுதியின் சூழல், வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் பிரிட்டன் குழுவினர் இதன்போது ஆராய்ந்துள்ளனர். வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு மத்திய அரசினால் தொடர்ச்சியாகப் போடப்பட்டுவரும் முட்டுக்கட்டைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மக்களின் மீள்குடியமர்வுச் செயற்பாடுகள் இன்னமும் இடம்பெறாமை மற்றும் இராணுவத்தினரைக் குறைப்பது போன்று ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளமை தொடர்பிலும் இதில் சுட்டிக் காட்டப்பட்டது.

வடக்கில் இலங்கை இராணுவத்தைக் குறைத்துள்ளதாக அரசு சொல்வது வெறும் பெயரளவில் மாத்திரமே எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிட்டன் குழுவினரிடம் தெளிவாக எடுத்துக் கூறியது.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை. அதுவரை இடைக்கால அரசியல் தீர்வு ஒன்று தேவை என்பதன் அவசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்துக் கூறினர்.

தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பது பிரிட்டன் அரசின் தெளிவான நிலைப்பாடாக இருப்பதாக அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளனர். (த-5)

### வடக்கில்

சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த ஐ.நா. சபையின் ஆசிய, பசுபிக் அரசியல் விவகாரங்களுக்கான இயக்குநர் மரி யமஷிரா வடக்கு மாகாண ஆளுனரைச் சந்தித்த பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சுமார் ஒரு மணி நேரம் வடக்கு முதலமைச்சருடன் சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் மேலும் கூறியதாவது:-

அரசியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே வருகை தந்திருந்தார். இங்கு தேர்தல் நடந்து முடிந்திருப்பதால் ஜனநாயகம் திரும்ப வந்திருக்கின்றதா? உங்களுக்கு சந்தோஷமாக இருக்கின்றதா ? என்றெல்லாம் என்னிடம் கேட்டார்.

#### இந்தியாவின் நெருக்குதல்

ஜனநாயகம் பெயரளவில் மாத்திரம் வந்திருக்கின்றது. 2009 இலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லிச் சொல்லிக் கடைசியாக இந்தியாவின் நெருக்குதலால் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டதை எடுத்துச் சொன்னேன்.

தேர்தலின் பின்னர் வடக்கு மாகாண சபையைக் கொண்டு நடத்துவது தொடர்பில் உள்ள பிரச்சினைகள், எம்மால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு அரசினால் பல விதங்களிலும் போடப்பட்டு வரும் முட்டுக்கட்டைகள் தொடர்பில் தெரியப்படுத்தினோம். வடக்கு மாகாண சபையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ளோம்.

#### என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்

அப்படியானல் தாங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் இதில் மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்று அவர் என்னிடம் கேட்டார். மத்திய அரசின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அரசமைப்பின் பிரகாரம் வடக்கு மாகாண சபைக்கு உரித்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த உரித்துக்களை மாகாண சபை பயன்படுத்துவதை அனுமதிக்கவேண்டும். அதை விடுத்து அதனை கொண்டு நடத்த விடாமல் செய்வது ஜனநாயகத்துக்கு முரணானது என்று கூறினேன்.

இதற்குப் பதிலளித்த அவர், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எங்கள் கருத்துக்களைத் தெரியப்படுத்தி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிப்பதாகத் தெரிவித்தார். (த-5)

### சி-4

யூர் பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றை மீட்ட பொலிஸார், அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

வெடிமருந்து மீட்கப்பட்டதையடுத்து வீட்டில் இருந்த பெண்கள் உட்பட முதலில் 5 பேரும் பின்னர் 2 பேருமாக 7 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் குருநகரைச் சேர்ந்த 3 பேர் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்யப்படுகின்றனர்.

ஆபத்து மிக்க இந்த வெடி பொருள்களை வன்னியிலிருந்து எடுத்து வந்ததாக ஆரம்ப விசாரணைகளில் சந்தேக நபர்களால் தெரிவிக்கப்பட்டது. அது எவ்வாறு அவர்களுக்குக் கிடைத்தது என்பது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

### தீர்மானம்

லும் மாத்திரமே எழுதப்பட்டுள்ளனவே, இது மும்மொழிக் கொள்ளைக்கு முரணாக உள்ளதே என்று, அமைச்சர்கள் கூடியிருந்த இடத்தில் முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்கள் பத்திரிகையாளர்கள்.

"மும்மொழிக் கொள்கை சட்டமாக இல்லை. அது கொள்கையாகவே உள்ளது" என்று அதற்குப் பதிலளித்தார் முதலமைச்சர்.

அப்படியானால், மும்மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே. அதற்கு என்ன அர்த்தம்? என்று பத்திரிகையா ளர்கள் கேள்வி எழுப்பினர். "அது தீர்மானம் மட்டுமே. சட்டம் இல்லைத்தானே!" என்று அதற்கும் பதிலளித்தார் முதலமைச்சர்.

"சட்டத்திற்கு எதிராக அமைச்சர்கள் செயற்படவில்லையே. அவர்கள் கொள்கையைப் பின்பற்றவில்லை. அதை நீங்கள் சுட்டிக்காட்டுங்கள். அவர்கள் செய்வார்கள்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை தீர்மானத்தில் வீதிகள், ஊர்கள், அரச நிறுவனங்கள் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வாகனங்களில் வைக்கப்படும் குறிப்பு அட்டைகளில் மும்மொழிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் குறிப்பிடவில்லை என்றும்வேறு விளக்கம் கொடுத்தார் முதலமைச்சர்.

"மும்மொழிக் கொள்கை அந்தந்த இடத்துக்கு மாத்திரமே பொருந்தும். அது சட்டமாக வந்த பின்னர் பார்க்கலாம்" என்றார். (உ-5)

### தமிழ்

டன் தூதுவர் ஜோன் ரங்கின் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்தனர். இவர்கள் வடக்கு முதலமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் தெரிவிக்கையில், வடக்கு ஆளுநரைத் தாங்கள் சந்தித்தபோது, அவர் எங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டனர். இதற்கு நான் குறிப்பிட்டேன். எங்களுக்கு ஆளுநருடன் எந்த தனிப்பட்ட கோபமும் இல்லை. நாங்கள் மேற்கொள்கின்ற தீர்மானத்தை அவர் தடுக்கின்றார். இதனால் எங்களின் பணிகள் பாதிக்கப்படுகின்றன. இதற்கு அண்மையில் வவுனியாவில் நடந்த சம்பவத்தையும் கூறினேன். வவுனியா மாவட்டத்தில் பணிபுரிந்த 64 சிங்களத் தாதியர்கள் தென்னிலங்கைக்குச் செல்வதற்குச் சுகாதார அமைச்சரிடம் கேட்டபோது அனுமதி வழங்கப்படவில்லை.

ஏனெனில் எங்களுக்கு இங்கு தாதியர் பற்றாக்குறை இருக்கின்றது. எமக்கு 64 பேர் வந்த பின்னர் அவர்களை விடுவிப்பதாகத் தெரிவித்தோம். ஆனால் அவர்கள் ஆளுநரிடம் சென்று இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இது தொடர்பில் எனக்கோ அல்லது சுகாதார அமைச்சருக்கோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் வடக்கு வைத்தியசாலைகளின் பணிகள் பாதிக்கப்படுகின்றன. இதனை நான் பிரிட்டன் குழுவினருக்குத் தெளிவாக எடுத்துரைத்தேன்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் வைத்துத் தெரிவித்ததற்கு அமைய, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர்கள் கூறினார்கள். தமிழர்களின் மனம்சந்தோசமடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர் என்று முதலமைச்சர் தெரிவித்தார். (த-5)

### 70

பெரும் மனிதப் புதை குழியாக உருவெடுத்துள்ள இந்த இடத்தில் தோண்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நேற்றுப் புதன்கிழமையும் இங்கு மேலும் 3 மனித எலும்புக்கூடு கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்து அங்கு மீட்கப் பட்ட மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித் துள்ளது.

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைததிய நிபுணர் டி.எல். வைத்திய ரட்ண தலைமையிலான குழுவினர் 26ஆவது தடவையாக நேற்றுப் புதன்கிழமை புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள மனித எலும்புக் கூடுகளில் 4 எலும்புக்கூடுகள் நேற்று எடுக்கப்பட்டுப் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதிவானின் உத்தரவுக்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

புதைகுழியைத் தோண்டும் பணிகள் இன்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். (த-56)

# வென்றது விளான் அன்ரனிஸ்



வலி.வடக்கு, பெப் 20

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் விளான் சென்.அன்ரனிஸ் வெற்றி பெற்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றது.

ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழகத்துக்கும் விளான் செ.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் போடவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கின.

முதலில் ஒரு கோலை விளான் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குக் கலைமகள் விளையாட்டுக்கழகமும் ஒரு கோலைப் போட்டது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)

# நாவாந்துறை மேரிஸ் இறுதியாட்டத்துக்கு

யாழ்ப்பாணம், பெப்.20

சுன்னாகம் சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் காந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நியூவொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# ஹொக்கிச் சங்கத்தின் புதிய நிர்வாகம்

வலி.வடக்கு, பெப் 20

யாழ் மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வெள்ளிக் கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் முன்னாள் தலைவர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி டி.எஸ்.சொலமன்

உப தலைவர்கள்-உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.



ஞானப் பொன்ராஜா.

செயலாளர்-உடுவில் மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் ப.தர்மகுமாரன்.

பொருளாளர்-யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சி.ஏ.அரவிந்தன்

போட்டி இணைப்பாளர் -வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் பிரான். சிஸ் சந்திரன்

நிர்வாக சபை உறுப்பினர்களாகக் ஹொக்கி அணி உள்ள பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்கள் தெரிவு செய்யப் பட்டார்கள். (த-86)



யாழ்ப்பாணம் புனித பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் சிறுவர்களுக்கான போட்டியில் மாணவி ஒருவர் வளையத்துக்குள் புகுந்து ஓடுகிறார். (த-201)

# அரையிறுதியாட்டங்கள் இன்று மானிப்பாயில்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை பகல் 9.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

மாதகல் சென்.ஜோசப் மகர வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் எதிர் சுன்னாகம்ஸ்கந்தவரோதயாகல்லூரி.

அரையிறுதிப் போட்டி களைத் தொடர்ந்து மூன்றாம் இடம் மற்றும் இறுதிப் போட்டி என்பன நடைபெறும். (த-86)

# காலிறுதி ஆட்டங்கள் இன்று

வலி.வடக்கு, பெப் 20

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் எதிர் பண்டத்தரிப்பு பிறைட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் சென்.தோமஸ் அணி. (த-86)

# யங்ஸ்ராரை வீழ்த்தி சம்பியனானது பமிலியன்



சம்பியனாகத் தெரிவாகிய பமிலியன் அணியினர்



யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர்

யாழ்ப்பாணம், பெப்.20

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த சனிக்கிழமை கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

# அராலி அண்ணா, பிறைற் ஸ்ரார் காலிறுதியில் மோதுவதற்கு தகுதி

வலி.வடக்கு, பெப். 20

தலைவர் வெற்றிக்கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் அராலி அண்ணா , பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் ஆகியன வெற்றி பெற்றுக் காலிறுதி ஆட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளன.

அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்துக்கும் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல்பாதி ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் போடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டன.

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் மீண்டும் 2 கோல்களைப் போட்டுத் தனது வெற்றியை உறுதி செய்தது.

மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழகத்துக்கு இறுதி நிமிடத்தில் ஒரு தண்டனை உதை கிடைத்தது. அதனை அவர்கள் சரியாக உதைத்துக் கோலாக்கிக் கொண்டனர்.

ஆட்ட நிறைவில் அண்ணா விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வென்று காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது

பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் மானிப்பாய் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் முதல் பாதியில் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சளைக்காது மோதிக்கொண்டன.

எனினும் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இரண்டு கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்தது. இறுதி வரை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் கோல்களைப் பெற எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடவில்லை.

ஆட்ட நிறைவில் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்று காலிறுதியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)




## சகீர்கானை திட்டிய இஷாந்த்

நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், இந்திய அணியின் வீரர் சகீர்கானை இஷாந்த் சர்மா மிகக் கேவலமாகத் திட்டுவது போன்ற வீடியோ வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட்போட்டி சமநிலையில் முடிந்தது. இதில் நியூசிலாந்து அணியின் அணித் தலைவர் பிரன்டன் மக்கலம் 302 ஓட்டங்கள் எடுத்துச் சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியின் 2ஆவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி விளையாடிக் கொண்டிருந்த போது, 103ஆவது பந்துப்பரிமாற்றத்தின் 5ஆவது பந்தை இஷாந்த் சர்மா வீச, பிரன்டன் மக்கலம் அடித்தார்.

களத்தடுப்புச் செய்து கொண்டிருந்த சகீர்கான் மிக மெதுவாகச் சென்று பந்தை எடுத்துள்ளார். இதனால் கோபமடைந்த இஷாந்த் சர்மா ஹிந்தியில் சகீர்கானை மிகக் கேவலமாகத் திட்டியதாக கூறப்படுகிறது, இந்த வீடியோ இணையத்தில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த)

# பணிந்தது இலங்கை

நிதி பகிர்வு, நிர்வாகம் உள்ளிட்ட பல மாற்றங்கள் குறித்து இந்திய கிரிக்கெட் சபை கொண்டு வந்த திட்டத்தை ஏற்பதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா என மூன்று நாடுகள் மட்டும் ஆதிக்கம் செலுத்துவது, நிதி பகிர்வு தொடர்பாக புதிய பரிந்துரைகள் கொண்டு வருவது என பல மாற்றங்கள் சமீபத்தில் கொண்டு வரப்பட்டன.

இந்தத் திட்டத்துக்கு நிரந்தர உறுப்பு நாடுகளில் தென்னாபிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் என மூன்று கிரிக்கெட் சபைகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இருப்பினும் கடைசி நேரத்தில் தென்னாபிரிக்கா ஆதரவு தெரிவித்தது, இலங்கை- பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறின.

இதற்கிடையே உலகக் கிரிக்கெட்டில் தனித்து விடப்பட்டதாக இலங்கை உணர்ந்தது, சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் ஏலத்திலும் இலங்கை வீரர்கள் பெரியளவில் புறக்கணிக்கப்பட்டனர்.


இதனால் வேறு வழியில்லாமல் இந்தியா முன்வைத்த புதிய திட்டத்தை ஏற்பது என இலங்கை முடிவு செய்துள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் செயலர் நிஷாந்த ரணதுங்க வெளியிட்ட அறிக்கையில், சிங்கப்பூரில் கொண்டு வரப்பட்ட புதிய திட்டம் குறித்து எமது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதன் விவரங்களைத் தெரிந்து கொண்ட பின், புதிய திட்டங்களுக்கு ஒருமனதாக ஆதரவு தருவது என உறுப்பினர்கள் முடிவு செய்தனர். ஏனெனில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் பங்கேற்கும் தொடரின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளோம். ஏனெனில் அடுத்த 7 ஆண்டுகளில் மற்ற அணிகளுடன் விளையாடும் தொடரில் ரூபா 370 கோடி வருமானம் கிடைக்கும்.

Sri Lanka Cricket

அதேநேரம் இந்தியாவுடன் ஒரு மாதம் போட்டிகளில் பங்கேற்றால், ரூபா 173 கோடி வந்துவிடும். ஒரு இங்கிலாந்துத் தொடரில் ரூபா 74 கோடி, ஆஸ்திரேலியா எனில் ரூபா 45 கோடி கிடைத்துவிடும். அதாவது இந்த மூன்று நாடுகளுடன் போட்டி களில் பங்கேற்றால் ரூபா 300 கோடி வரை வருமானம் வரும். தீர்மானத்தை எதிர்ப்பதால் எங்களுக்கு இழப்பு அதிகம் என்று தெரிவித்துள்ளார். (த)

## நாடு திரும்புகிறார் நுவான் குலசேகர



இலங்கை கிரிக்கெட் அணியின் பந்து வீச்சாளர் நுவான் குலசேகர உபாதை காரணமாகத் தொடர்ந்து விளையாட முடியாமல் நாடு திரும்புகின்றார்.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஏற்பட்ட தசைப் பிடிப்பு காரணமாக அணியில் இருந்து விலகியுள்ளார். தொடர்ந்து போட்டிகளில் விளையாட முடியாது என்ற நிலையில் அவர் நாடு திரும்ப அவரின் இடத்துக்கு தம்மிக்க பிரசாத் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஆசியக் கிண்ணப் போட்டித்தொடரிலும் அவர் விளையாடுவது சந்தேகம் என்ற நிலையில், ஆசியா கிண்ணப் போட்டிகளில் விளையாட முடியும் என இலங்கை கிரிக்கெட்டின் ஊடக முகாமையாளர் ரஜித்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (த)

## பசுமையான அனுபவம் அது.....

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 302 ஓட்டங்கள் குவித்த நியூசிலாந்து அணியின் தலைவர் பிரன்டன் மக்கலம் முச்சதம் விளாசிய முதல் நியூசிலாந்து வீரர் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர் ஆனார்.

இது குறித்து அவர் கூறுகையில், 94 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்த நிலையில், எனது ஆட்டம் அணிக்கு மிகவும் அவசியமாக இருந்தது. நெருக்கடிக்கு மத்தியில் சில அருமையான ஜோடியை உருவாக்கினோம், அதன் பிறகு எங்களது துடுப்பாட்டம் நீண்டு கொண்டேபோனது.

சரிவில் இருந்து நிமிர்ந்து தொடரை கைப்பற்றியது மிகவும் திருப்தி அளிக்கிறது. இந்த முச்சதம் நியூசிலாந்து கிரிக்கெட்டில் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இதற்குமுன்புஇதுபோன்றஅனுபவம்ஒருபோதும் எனக்கு ஏற்பட்டதில்லை. நிச்சயம் எனது வாழ்நாள் முழுவதும் இந்த [illegible] நினைவுநிலைத்து நிற்கும். சிறு வயதில் இருந்தே நியூசிலாந்து [illegible] அணியைப் பார்த்து வளர்ந்தவன் நான். மார்ட்டின் குரோவ் 299 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததை நான் பார்த்து உள்ளேன். அவர் அதில் 300 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை தாண்டியிருந்தால் வியப்புக்குரிய சாதனையாக இருந்திருக்கும். மார்ட்டின் குரோவ் மற்றும் ஸ்டீபன் பிளமிங்கிடம் முந்தைய நாள் பேசினேன். அதன் பிறகே முச்சதம் என்பது எவ்வளவு பெரிய தருணம் என்பதை உண்மையிலேயே உணர்ந்தேன்.

நியூசிலாந்து தரப்பில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் குரோவும், ஸ்டீபன் பிளமிங்கும் முதல் இரு இடங்களில் இருந்தனர். இப்போது இவர்களை நான் கடந்தது தான் கொஞ்சம் தர்மசங்கடமாக இருக்கிறது. ஏனெனில் நான் பெரிய துடுப்பாட்ட வீரர் கிடையாது. அவர்களின் திறமையுடன் ஒப்பிடும் போது, நான் அவர்களை நெருங்கக் கூட முடியாது. எது எப்படியோ ஒரு வழியாக நியூசிலாந்து வீரர் ஒருவர் 300 ஓட்டங்களை எட்டியதில்லை என்ற குறையைப் போக்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. எதிர்காலத்தில் மேலும் சில நியூசிலாந்து வீரர்கள் இந்தச் சாதனையை படைப்பார்கள் என்று தான் நம்புவதாக தெரிவித்துள்ளார். (த)

## விலகவேண்டும் டோனி



சமீபகாலமாக வெளிநாடுகளில் இந்திய அணியின் தலைவர் டோனி சொதப்பி வருவதால், அணித் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டில் 20/20 உலகக் கிண்ணம், 2011ஆம் ஆண்டில் உலகக் கிண்ணம், 2013 இல் சம்பியன்ஸ் தொடர் உட்பட இந்திய அணிக்காக 37 கிண்ணங்களை வென்று தந்தவர் டோனி.

இருப்பினும் சமீப காலமாக வெளிநாடுகளில் சொதப்பி வருகிறார், கடந்த மூன்று ஆண்டுகளில் இவரது தலைமையில் 14 டெஸ்டில் பங்கேற்ற இந்திய அணி 10 இல் தோல்வி அடைந்தது.

எதிர்அணியினர் ஓட்டங்கள் எடுப்பதைக் கட்டுப்படுத்த அதிரடியான மற்றும் ஆக்ரோஷமான முடிவுகளை எடுப்பதில் டோனி தொடர்ந்து சொதப்பி வருகிறார். வெலிங்டனில் நியூசிலாந்து அணி நான்கு வேகப்பந்து வீச்சாளர்களுடன் களம் கண்டது.

ஆனால், சகிர்கான், முகமது ஷமி, இஷாந்த் சர்மாவுடன், சுழற்பந்து வீச்சாளர் ஜடேஜாவுடன் களமிறங்கினார் டோனி. பயிற்சிப் போட்டியில் அசத்தியாஷ்வர்பாண்டேக்குவாய்ப்புவழங்கவில்லை. ஆடுகளம் வேகத்துக்குச் சாதகமான நிலையில், திடீரென டோனி பந்து வீசினார்.

அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் ரோகித் சர்மா, கோஹ்லியைப் பந்துவீசச் சொல்லித் தற்காப்புப் பாணியில் செயல்பட்டார். இது நியூசிலாந்து வீரர்களுக்கு வசதியாகப் போய்விட்டது.

தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்பதால் கூட, டோனிக்கு களைப்பு ஏற்பட்டிருக்கலாம். இதனால் குறைந்தபட்சம் டெஸ்ட் போட்டிக்கான அணித் தலைவர் பொறுப்பில் இருந்து விலகி விராட் கோஹ்லிக்கு வழிவிடலாம் என்ற கருத்து மேலோங்கி வருகிறது.

இது குறித்து நியூசிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் மார்டின் குரோவ், அடுத்த ஆண்டு நடக்க உள்ள உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டத்தைத் தக்க வைக்க வேண்டுமானால், டோனிக்கு சிறிது காலம் ஓய்வு தேவைப்படுகிறது என்றும், எனவே பொறுப்பை கோஹ்லி வசம் ஒப்படைக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் டிராவிட் கூறுகையில், இக்கட்டான நேரங்களில் டோனி தற்காப்புப் பாணியைக் கையாள்கிறார். அணியின் வேகப் பந்துவீச்சாளர்கள் மீது நம்பிக்கை இல்லாமல் உள்ளார். தொடர்ந்து பழைய பந்தைப் பயன்படுத்தி ஓட்டங்களைக் கட்டுப்படுத்த முயல்கிறார். இதற்கு உதாரணமாக டேர்பன் டெஸ்டைக் குறிப்பிடலாம். இதில், 146 பந்துப்பரிமாற்றங்கள் முடிந்தும் புதிய பந்தை எடுக்கவில்லை. இன்னும் ஓர் ஆண்டுக்கு டெஸ்ட் அணியின் அணித் தலைவராக நீடிக்கலாம்.

அந்நிய மண்ணில் டெஸ்டில் வெல்ல, கடும் உழைப்பு அவசியம் என்பதையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த)

# நியூசிலாந்து பயணம் திருப்தி அளிக்கிறது



இந்திய கிரிக்கெட் அணியின் வெளிநாட்டுப் பயணம் தொடர்ந்து மோசமான நிலையில் இருக்கிறது. நியூசிலாந்து பயணத்திலும் டெஸ்ட் (0-1) மற்றும் ஒரு நாள் தொடரை (0-4) இழந்தது.

வெலிங்டன் டெஸ்டில் கிடைத்த வெற்றி வாய்ப்பை இந்திய வீரர்கள் கோட்டை விட்டனர். நியூசிலாந்தில் ஒரு வெற்றியை கூட இந்திய அணியால் பெறமுடியவில்லை. ஆனால் நியூசிலாந்து பயணம் திருப்தி அளிக்கிறது என்று அணித்தலைவர் டோனி கருத்து தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:-

ஒட்டு மொத்தமாக பார்த்தால் நியூசிலாந்து பயணம் திருப்தியாகவே இருந்தது. முடிவைப் பற்றி கவலைப்படவில்லை. வீரர்கள் மிகவும் மேம்பட்டு இருந்தனர். தென்னாபிரிக்கப் பயணத்துடன் ஒப்பிடுகையில் வீரர்களின் திறமையில் முன்னேற்றம் இருந்தது.

இந்த தொடரில் நாங்கள் சிறப்பாக விளையாடினோம். ஏனென்றால் நாங்கள் கடுமையாகப் போராடினோம். துடுப்பாட்டத்துக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகவே செயல்பட்டனர். இலக்குகளை கைப்பற்ற முடியாமல் போனதற்காக அவர்களை குற்றம் சாட்டிவிட முடியாது.

நெருக்கடியான நேரத்தில் மக்கலம் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். பந்துவீச்சாளர்கள் நேர்த்தியுடன் தான் பந்து வீசினர். ஒருநாள் தொடரை விட டெஸ்ட் தொடரில் நன்றாக விளையாடினோம்.

நியூசிலாந்து ஒரு அற்புதமான நாடு. இங்குள்ள சூழல் சிறப்பாக இருக்கிறது. அடுத்த ஆண்டு நடைபெறும் உலக கிண்ணப் போட்டிக்காக நியூசிலாந்தில் விளையாட ஆர்வமாக உள்ளேன்.

இவ்வாறு டோனி கூறியுள்ளார்.

கடந்த முறை (2009) நியூசிலாந்து சென்ற போது இந்திய அணி டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3-1 என்ற கணக்கிலும் கைப்பற்றியது. தற்போது ஒரு வெற்றி கூட பெற இயலாமல் வெறும் கையுடன் திரும்புகிறது.

(த-400)

**வெளிவந்து விட்டது**

O/L - கணிதம்

'அளவீடு' (MEASUREMENT)

தரம்- 11 இல் கல்வி பயிலும் மாணவர்கள் கற்ற இத் தலைப்புக்குரிய அனைத்து விடயங்களும் உள்ளடக்கியது.

ஆக்கம்: ஜயாத்துரை மோகன்ராஜ்
அன்னை புத்தக சாலை
யாழ்ப்பாணம்.
021 2229881

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# சானியா மிர்சா ஜோடி தோல்வி



டியூட்டி பிரீ சர்வதேச ரென்னிஸ் போட்டி டுபாயில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் முதலாவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி போராடித் தோற்றது.

இவர்களைச் செக்குடியரசின் ஹிலவக்கோவா-லூசி சபரோவா இணை 7-6 (5), 5-7, 11-9 என்ற செற் கணக்கில் வென்றது. இந்த ஆட்டம் 1 மணி 55 நிமிடங்கள் நீடித்தது. ஒற்றையர் பிரிவின் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் முதல் நிலை வீராங்கனை டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 2-6, 6-3, 6-3 என்ற செற் கணக்கில் ஜேர்மனியின் சபினே லிசிக்கியை சாய்த்தார்.

(த-400)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் சிவபாக்கியநாதன்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ன பூரணம் சிவபாக்கியநாதன் நேற்று (19.02.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியநாதனின் அன்பு மனைவியும், கிருபவதனி, கேதீஸ்வரன், ஸ்ரீசாயி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, நவரத்தினம், இராசையா, பொன்னையா, கந்தையா மற்றும் செல்வமணி, அமுதமணி, காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதீபன், டயனி, பத்மினி ஆகியோரின் மாமியாரும், தணிகன், நயனிகா, கேதஜா, கரிஜன், ரிஷானி, பிரஜன், அவனீஷ், அவிக்னாஷ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (வைத்தியசாலை அருகில்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோப்பாய் மத்தி, கோப்பாய். குடும்பத்தினர்.
(44915)(3.6.4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
24 * 03 * 1960



விண்ணில்
22 * 01 * 2014

### திருமதி சரஸ்வதி சிதம்பரநாதன் (பேபி அன்ரி)

(பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் 1 தேர்தல்கள் திணைக்களம்-கச்சேரி, யாழ்ப்பாணம்)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (21.02.2014) வெள்ளிக்கிழமை மு.ப.9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு, கொடிகாமம்
021 321 6570, 077 556 6581
குடும்பத்தினர்.
(44918)(3.6.4)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
## After O/L What Next?

**Spoken English With Grammar - Quick Learning Course** *(1½ Months)*

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 – 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

**Diploma In English (2Months)**
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத் தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exam-Sponsor Visa/ Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.
- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system
We gurantee minimum 6.0 band and above
Duration 2 ½ Months

**B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

| Batch - 01 | Batch - 02 | Batch - 03 | Batch - 04 |
|---|---|---|---|
| 22.02.2014 | 24.02.2014 | 01.03.2014 | 03.03.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS
Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.